# உதயன்

24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 238 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 6, செவ்வாய் 22.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுக்கம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04




போரை நிறுத்துங்கள் 7





ஆதிவாசிகள் எங்கே? 15


## மீண்டும் தடுக்கப்பட்டன காணி அளவிடும் முயற்சிகள்



அச்சுவேலியில் இராணுவத்தின் தேவைகளுக்காக சுவீகரிக்கப்படவுள்ள பொதுமக்களின் காணிகளை அளவிடுவதற்கு நில அளவையாளர்கள் வந்தபோது, அவர்களின் வாகனத்தைச் சுற்றிவளைத்து, அவர்களது உபகரணங்களை எடுக்கவிடாது மக்கள் தடுத்தனர். அவர்களுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.வடக்கு பிரதேச சபை உப தவிசாளர் எஸ்.சஜீவன், வல்வெட்டித்துறை உபதவிசாளர் சதீஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் இணைந்திருந்தினர். (ற-21)

யாழ்ப்பாணம், ஜூலை 22
அச்சுவேலி மற்றும் வெற்றிலைக்கேணியில் பொதுமக்களின் காணிகளை இராணுவத் தேவைக்காக சுவீகரிப்பதற்காக, அளவீடு செய்வதற்கு நிலஅளவைத் திணைக்களத்தினர் நேற்று முன்னெடுத்த முயற்சிகள் பொதுமக்களின் பலத்த எதிர்ப்பால் கைவிடப்பட்டன.
அச்சுவேலியில் 53 பரப்பும், வெற்றிலைக்கேணியில் 800 ஏக்கர் பொதுமக்களின் காணியும் இராணுவத் தேவைக்காக சுவீகரிக்கப்படவுள்ளன என்று அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில் குறித்த காணிகளை நிலஅளவை செய்வதற்காக நிலஅளவீடு திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். இந்த நடவடிக்கையே பொதுமக்களின் எதிர்ப்


22 ஆம் பக்கம் பார்க்க


## காணி அளக்க இடையூறு; பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 22
அச்சுவேலியில் காணி அளப்பதற்குச் சென்ற தம்மை பணிகளை மேற்கொள்ள விடாது பொதுமக்களும் கூட்டமைப்பு உறுப்பினர்களும் இடையூறு விளைவித்தனர் என்று நிலஅளவையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அச்சுவேலிப்


22 ஆம் பக்கம் பார்க்க


## போதைப் பொருளுடன் தென்பகுதி பெண் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் தென்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த பெண் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவர் அங்கொடையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்படும்போது அவர் சுமார் 5 கிராம் போதைப் பொருள்களைத் தம்வசம் வைத்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த பெண் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 4ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.
கைது செய்யப்பட்ட பெண் தென்பகுதியில் இருந்து போதைப் பொருள்களைக் கொண்டு வந்து இங்கு தொடர்ச்சியாக விற்பனை செய்பவரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# நியதிச்சட்டத்தில் சில சரத்துக்களை நீக்குக

### வடக்கு மாகாண ஆளுநருக்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 22
வடக்கு மாகாணசபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நியதிச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில சரத்துக்களை நீக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது சட்டமா அதிபர் திணைக்களம். வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே சட்டமா அதிபர் திணைக்களம் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளது. இந்த ஆலோசனை உள்ளடக்கிய பரிந்துரை களை இந்த வாரத் துக்குள் ஆளுநர், வடக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைப்பார் என்று கூறப்படுகின்றது.



நியதிச் சட்டம் ஆளுநரின் அங்கீகாரத்துக்காக கடந்த ஜூன் மாதம் 6 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது. அவர் அதனை சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோச னைக்காக அனுப்பியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் வடக்கு மாகாண நிர்வாகம் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் பொறுப்பேற்கப்பட்டது. அதன் பின்னர் வடக்கு மாகாண சபைக்குரிய நிதி நியதிச் சட்டம், முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம், முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் என்பன முதலாம் வாசிப்


22 ஆம் பக்கம் பார்க்க


## காணியை அளந்தால் அங்கு தீக்குளிப்போம்

### காணி உரிமையாளர்கள் ஆவேசம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
எமது காண்ிகளை அனுமதி இன்றி அடாத்தாக அளவையிட்டால் இந்த இடத்திலேயே நாம் தீக்குளிப்போம் - இவ்வாறு ஆவேசத்துடன் தெரிவித்துள்ளனர் அச்சுவேலியில் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்படவுள்ள காணிகளின்


22 ஆம் பக்கம் பார்க்க


## அரச அதிகாரியின் அனுமதியுடன் கிளிநொச்சியில் காணி அபகரிப்பு

### மக்கள் திரண்டு நேற்று எதிர்ப்பு



கிளிநொச்சி, ஜூலை 22
கிளிநொச்சி, தொண்டமான் நகர் உதிரவேங்கை ஞானவைரவர் ஆலய காணியை கரைச்சிப் பிரதேச செயலாளர் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்


22 ஆம் பக்கம் பார்க்க


## சம்பவ இடத்தை அடையாளம் காட்டினர் சிறுமிகள்

### அந்த முகாமில் பணியாற்றிய இரு கடற்படைச் சிப்பாய்களை கைது செய்யுமாறு உத்தரவு

- *11 வயதான சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட நிலை யில் கடந்த 15 ஆம் திகதி மருத்துவனையில் சேர்க்கப்பட்டார்.*
- *சிறுமி கொடுத்த தகவலின்படி மற்றொரு சிறுமியும் பாதிக்கப்பட்டமை தெரிய வந்தது.*
- *கடற்படைச் சிப்பாயே சிறுமிகளை வன்கொடுமைக்கு ஆளாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.*
- *அதையடுத்து 7 கடற்படைச் சிப்பாய்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கடந்த 18ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.*
- *அன்றே நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டவர்களுள் குற்றவாளிகள் இல்லை என்று சிறுமிகள் தெரிவித்ததை அடுத்து அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.*

யாழ்ப்பாணம், ஜூலை 22
காரைநகரில், கடற்படையினரால் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று கூறப்படும் சிறுமிகள் இருவரும், சம்பவ இடத்தைப் பொலிஸாருக்கு நேரில் சென்று அடையாளப்படுத்தியுள்ளனர் என்று தெரியவருகின்றது. அதையடுத்து குறித்த முகாமில் பணியாற்றி தற்போது விடுமுறையில் சென்றுள்ள இரு கடற்படைச் சிப்பாய்களை எதிர்வரும் 25ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்துமாறு சிறுவர் நீதிமன்ற நீதிபதி பணித்துள்ளார்.
காரைநகரில் 11 மற்றும் 9 வயதான இரு சிறுமிகள் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். குறித்த இரு சிறுமிகளும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் 7 கடற்படையினரை ஊர்காவற்றுறைப் பொலிஸார்


22 ஆம் பக்கம் பார்க்க


## ரி.ஐ.டி. விசாரணையை நிறுத்துமாறு கோரிக்கை

### காணாமற்போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழு விடுத்தது

கொழும்பு, ஜூலை 22
தாம் விசாரணை நடத்தும் நாள்களில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்துவதை நிறுத்தி வைக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.
கிளிநொச்சியில் ஆணைக்குழு அமர்வை நடத்திய அதே தினத்தில், சிவில் உடையில் இருந்த பொலிஸ் குழுக்கள் காணாமற் போனவர்களின் உறவினர்களை அச்சுறுத்தி, கட்டாய மரண சான்றிதழ் பெறும்படி பலவந்தப்படுத்தினர் என்று குற்றச்சாட்டுக்


22 ஆம் பக்கம் பார்க்க



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்யோற்சவத்தின் கார்த்திகை உற்சவம் நேற்று நடைபெற்றது. இதில் சுவாமி எழுந்தருளி இருப்பதையும் ஆலய உள் மண்டபத்தில் இசைக் கச்சேரி நடப்பதையும் அடியார்கள் நேர்த்திக் கடன்களை நிறைவு செய் யும் பொருட்டு கந்தனை நோக்கி காவடி எடுத்து வருவதையும் படங்களில் காணலாம். (ஐ-86)

# ராணுவச் சாரதியை கைது செய்யுமாறு மக்கள் திரண்டு வவுனியாவில் எதிர்ப்பு



வவுனியா, ஜூலை 22

விபத்தை ஏற்படுத்திய இராணுவச் சாரதியை கைது செய்யுமாறு கோரி பொலிஸாருடன் போராடினர் மக்கள்.

இதனால் வவுனியா நகர்ப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. சுமார் ஒரு மணி நேர போராட்டத்தின் பின்னர் சம்பந்தப்பட்ட நபர் கைதானதையடுத்து பொது மக்கள் கலைந்து சென்றனர்.

வவுனியா ஹொரவபொத்தான வீதியில் தர்மலிங்கம் வீதி சந்திக்கு அருகில் இராணுவ பவள் வாகனம் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணை மோதியது. இதனால் அவர் படுகாயமடைந்தார். அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.15 மணி ளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை பணியாளரான பூந்தோட்டத்தைச் சேர்ந்த வாமதேவன் ரேகா என்ற பெண்ணே காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

ஹொரவப்பொத்தான வீதியில் குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார் அப்போது இராணுவப் பவள் கவச வாகனம் மோதியது. இதனால் அந்தப் பெண் காயமடைந்தார். இதனையடுத்து இராணுவச் சாரதியை கைது செய்யுமாறு கோரி பவள் கவசவாகனத்தை தொடர்ந்து பயணிக்க அனுமதிக்காது மக்கள் ஒன்று கூடினர்.

சம்பவம் அறிந்து அங்கு வந்த பொலிஸார் இராணுவத்தினரை மீட்க முயற்சித்தனர் எனினும் பொதுமக்களின் எதிர்ப்பு வலுத்தது. நீண்டநேர வாக்குவாதத்தின் பின்னர் பவள் கவச வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப் பட்டார். அதன்பின்னர் மக்கள் கலைந்து சென்றனர்.

மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக அந்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

(ஐ -402,108)

# முல்லையில் இடம்பெறும் பிரச்சினைகளை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியிருக்கிறேன்

## வடமாகாண சபை உறுப்பினர் கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 20

முல்லைத்தீவில் அரச அதிகாரிகளாலும் அரசியல் வாதிகளாலும் மேற்கொள்ளப்படும் மக்கள் விரோதச் செயற்பாடுகள் குறித்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆதாரங்களுடன் பிரஸ்தாபித்துள்ளேன் என்று வடமாகாண சபை உறுப்பினர். து.ரவிகரன் தெரிவித்தார்.

குறிப்பாக நில அபகரிப்பு, மீனவர்களுக்கான தொழில் நெருக்கடி, காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குதல், ஒட்டுசுட்டான் கருங்கல் அகழ்வுகள், ஒதிய மலை வைரவர் வளாகத்தில் பௌத்த அடையாளங்களை நிறுவ எத்தனிப்பது மற்றும் இந்திய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில், பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்களை தான் முன்வைத்துள்ளார் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய மூன்று பிரதேச செயலகங்களிலும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

மூன்றுஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் பங்கெடுத்திருந்தார். இதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(ஐ-5)

# அளவுக்கு அதிகமாக சாராயம் வைத்திருந்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

27 போத்தல் சாராயத்தை 30 லீற்றர் கொண்ட பெரலில் ஊற்றி தண்ணீர்பெரல் போன்று கொண்டு சென்று வைத்திருந்தவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

புங்குடுதீவைச் சேர்ந்த குறித்த நபர் யாழ்.நகரில் சாராயப் போத்தல்களை வாங்கி அவற்றை ஒரே தடவையில் கொண்டு செல்ல முடியாது என்பதனால் பெரலில் ஊற்றிக் கொண்டு சென்றுள்ளார்.

சந்தேகத்துக்கு இடமாக அவர் பயணித்ததால் பொலிஸார் சோதனையிட்டனர். இதன் போது பெரலில் சாரயம் இருப்பது தெரியவந்தது. அவரை கைது செய்த பொலிஸார், அனுமதியின்றி மேலதிகமாக் சாராயம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

பதில் நீதிவான் இ.சபேசன் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து அவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ஐ-4)

# இரு நூல்கள் வெளியீடு

வவுனியா, ஜூலை 22

வவுனியா, அல் மதார் விளையாட்டுக்கழகம் வருடம் தோறும் நடத்தும் இப்தார் நிகழ்வு வவுனியா முஸ்லிம் தேசிய பாடசாலை மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அல்மதார் விளையாட்டுக் கழக உறுப்பினர் நௌசாத் மௌலவியின் இரு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. மாண்பு நிறைந்த நோன்பின் சட்டங்கள், சந்தேகங்களும் தீர்வுகளும் ஆகிய இரு நூல்களே வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், வடமாகாண சபை எதிரணி உறுப்பினர் ஜெயதிலக, ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் முகைதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-402)



இரு நூல்களின் வெளியீட்டின் போது

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 06 செவ்வாய்க்கிழமை (22.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 238

# ஆள்கொணர்வு மனுக்களை விசாரிக்க பிரத்தியேக நீதிபதி

## நீதிச்சேவை ஆணைக்குழு நியமிக்கும் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜுலை 22**

**இறுதிக் கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆள்கொணர்வு மனுக்களை மாத்திரம் விசாரணை செய்வதற்கு நீதிச்சேவை ஆணைக்குழு, பிரத்தியேகமான நீதிபதி ஒருவரை நியமிக்கவுள்ளது என்று சிரேஷ்ட சட்டத்தரணி கே.ரட்ணவேல் தெரிவித்தார்.**

**ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது மாவட்ட நீதிவான் இந்தத் தகவலைத் தெரிவித்தார் என்று சட்டத்தரணி ரட்ணவேல் தெரிவித்தார்.**

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பில் ஆள்கொணர்வு மனு 2012 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 12 பேர் இவ்வாறு மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை, கடந்த வருடம் இறுதிப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்த வழக்குச் சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குரிய நீதிமன்றில் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது. கடந்த தவணை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதும், இராணுவத்தினர் சார்பில் சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணி மன்றுக்கு வராமையால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது வழக்கு தொடுநர்கள் 12 பேரும், சாட்சியமளிப்பதற்கு சாட்சிகள் பலரும் வருகை தந்திருந்தனர். இருப்பினும் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து யாரும் வருகை தரவில்லை.

இதன்போது நீதிபதி, இந்த வழக்குத் தொடர்பில் நீதிச் சேவை ஆணைக் குழுவினால் பிரத்தியேக நீதிபதி நியமிக்கப்படவுள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் விண்ணப்பம் பெறல் 376 கி.சே. பிரிவுகளில் முற்று

யாழ்ப்பாணம், ஜுலை 22

யாழ்.மாவட்டத்தில் 376 கிராம சேவையாளர்கள் இதுவரையில், வாக்காளர் பதிவு விண்ணப்ப படிவங்களை யாழ்.மாவட்டச் செயலக தேர்தல்கள் திணைக்களத்திடம் கையளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதியுடன் இந்தப் பணிகள் முடிவடையவுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுக்குரிய பெயர்ப் பட்டியல் மீளாய்வு நடவடிக்கைகள் கடந்த மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது கிராம சேவையாளர்கள் பொதுமக்களிடம் வீடு வீடாக வாக்காளர் பதிவு விண் ணப்ப படிவங்களை (பி.சி. படிவம்) விநியோகித்திருந்தனர்.

ஜுன் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர், கிராம சேவையாளர்கள் விநியோகித்த பி.சி. படிவங்கள் மக்களிடமிருந்து மீளப் பெறப்பட்டு மாவட்டச் செயலக தேர்தல்கள் திணைக்களத்தில் ஒப்படைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த மாதம் ஆரம்பமான இந்த நடவடிக்கையில் இதுவரையில் 376 கிராம சேவையாளர்கள் தமது விண்ணப்ப படிவங்களை ஒப்படைத்துள்ளனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் எஞ்சிய 59 கிராம சேவையாளர்களும் படிவங்களை ஒப்படைப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் கடந்த ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலி

(22ஆம் பக்கம் பார்க்க)

## கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம் யாழில் 9 வருடங்களின் பின்னர்

### 247 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜுலை 22

'கிராமத்துக்கு ஒரு வேலைத் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டு 9 வருடங்களின் பின்னர், முதன் முறையாக யாழ்.மாவட்டத்துக்கு 247 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலைத் திட்டம், யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரசியல் கட்சிகள் பொதுமக்கள் முன்னிலையில் இனங்காணப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட போதும், அரசு சார்பு அரசியல் கட்சியினால் மாத்திரமே வேலைத் திட்டங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'கிராமத்துக்கு ஒரு வேலைத் திட்டம்' கடந்த 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்படும். அவ்வாறு ஒதுக்கப்படும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு வேலைத் திட்டங்கள் இனங்காணப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படும்.

யாழ்.மாவட்டத்துக்கு பல்வேறு விசேட திட்டங்கள் ஊடாக நிதி கிடைக்கப்பெற்று அதனூடாக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்து, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

யாழ்.மாவட்டத்துக்கு வழங்கப்பட்டு வந்த விசேட நிதியின் கீழான அபிவிருத்தி நடவடிக்கைகள் கடந்த ஆண்டுடன் முடிவுக்கு வந்தன. இதன் பின்னர் யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கு எந்தவொரு நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலையில் அந்தத் திட்டம் தற்போது குடாநாட்டில் நடைமுறைக்கு வந்துள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## கடை உரிமையாளர் கழிவகற்றலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### யாழ்.மாநகர சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 22

யாழ்.நகரின் கடை உரிமையாளர்கள் தமது கடைகளில் கழிவு நீர்த்தாங்கிகளை அமைத்து அதனூடாக நகரின் சுகாதாரத்தை பேணவேண்டும் என்று யாழ். மாநகர சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மாநகர சபை விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது நகரில் வீதிப் புனரமைப்புக்கள் நடைபெற்றுவருகின்றன. புதிதாக அமைக்கப்பட்டுள்ள காப்பெற் வீதிகளின் கழிவுவாய்க்கால் ஊடாக கடை உரிமையாளர்கள் கழிவகற்றல் செய்து வருகின்றனர். இதனால் நகரில் துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளது.

கடை உரிமையாளர்களுக்கு கழிவற்றல் தொடர்பில் மாநகர சபை ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. அதன்படி கழிவகற்றல் தொட்டிகளையோ நீர்த்தாங்கிகளையோ அமைத்து உரிய முறைப்படி கழிவகற்றலை மேற்கொள்ளல் வேண்டும். இதனைத் தவிர்த்து கழிவு நீரை வெள்ளவாய்க்கால்களிலோ கால்வாய்களுக்கோ விடக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் இவற்றை கடை உரிமையாளர்கள் கருத்தில் எடுக்காது செயற்படுகின்றனர்.

எனவே கடை உரிமையாளர்கள் அறிவிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி நகரின் சுகாதாரத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

## இரண்டாம் பதவிக் காலத்தை ஆரம்பித்தார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜுலை 22

இரண்டாவது தடவையாகவும் வடக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, தனது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் உள்ளிட்ட ஆளுங்கட்சியைச் சேர்ந்த எவரும் பங்கெடுக்கவில்லை.

வடக்கு மாகாண ஆளுநராக மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த 11 ஆம் திகதி இரண்டாவது தடவையாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் அலுவலகத்தில், நேற்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்

(22ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி வயல் காணியில் எரிபொருள் நிரப்பு நிலையம்

யாழ்ப்பாணம், ஜுலை 22

செம்மணிப் பகுதியில் ஏ-9 பிரதான வீதியில் எரிபொருள் நிலையம் அமைக்கப்படவுள்ள காணி வயல்காணி என்று யாழ்.மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களம் இனங்கண்டு, நல்லூர் பிரதேச சபைக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

வயல்காணியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதானால் அதற்கு கமநல சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவேண்டும் என்றும், குறிப்பிட்ட காணியில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கு அவ்வாறான அனுமதி பெறப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

நல்லூர் பிரதேச சபையின் எதிர்ப்பையும் மீறி ஏ-9 பிரதான வீதியில் செம்மணிச் சந்திக்கு அருகிலுள்ள காணியில் எரிபொருள் நிலையம் அமைப்பதற்குரிய பணிகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்திலும் பிரதேச சபையினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் ஆராயப்பட்டது. இதன்போது குறித்த காணி தன்னு

(22ஆம் பக்கம் பார்க்க)

## பீடை நாசினி வெற்றுப் போத்தல்களை கிணற்றுக்கு அருகில் போடாதீர்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 22

நிலக்கீழ் நீர் மாசடைவதை தடுக்கும் வகையில், பீடை நாசினிகள் அடைக்கப்பட்டுவரும் போத்தல்களை பாவனையின் பின்னர் விவசாயக் கிணறுகளுக்கு அருகில் போடுவதைத் தவிர்க்குமாறு விவசாயத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்தத் திணைக்களம் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விவசாய நடவடிக்கைகளுக்காகப் பீடைநாசினிகளைப் பயன்படுத்தும் விவசாயிகள், பாவனையின் பின்னர் போத்தல்களை விவசாயக்கிணறுகளுக்கு அருகிலேயே போடுகின்றனர்.

இவை மழைகாலத்திலோ அல்லது நீர்ப்பாசனத்தின்போதோ தண்ணீருடன் கலந்து நிலக்கீழ் நீருடன் சேர்கின்றன. குறிப்பாக கிணற்று நீருடன் அவை கலந்துவிடுகின்றன. தண்ணீர் மாசடைவதுடன் இத்தகைய நச்சுத்தன்மையான நீரை பருகுவதால் நோய்த் தாக்கமும் ஏற்படுகிறது.

எனவே விவசாயிகள் இது குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் கழிவுப் போத்தல்களை கிணற்றுக்கு


(22ஆம் பக்கம் பார்க்க)

## ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
வட்டுக்கோட்டை- தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கண்ணகி அம்மனுக்கும் கண்ணலிங்கேஸ்வரப் பெருமானுக்கும் நவோத்தர சகஸ்ர (1009) சங்காபிஷேகமும், கண்ணகாம்பிகாதேவிக்கு அஷ்டோத்தர சத (109) சங்காபிஷேகமும் நடைபெற்று, ஆடிப்பூர பூர்வகர்ம ருதுசாந்தி வைபவமும் இடம்பெறும்.

சங்காபிஷேக பிரதம குருவான, ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ.இ.புஷ்பராசக் குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். (க)



யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்த குருநகர் மேற்குப் பகுதிக் கிராம சேவையாளர் என்.யூலன், கண்காட்சியைப் பார்வையிடுகிறார். இதன்போது கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்த பொருள்களைப் பற்றிய விளக்கம் மாணவர்களால் அளிக்கப்படுகிறது. (வ-51)

## சமய சந்நிதிகளில்

மன்னார், உப்புக்குளம், திருவானைக்கூடம் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளது.

தொடர்ந்து ஒன்பது நாள்கள் உற்சவம் இடம்பெற்று பத்தாம் நாள் சிறப்பான பூசை, அபிஷேகம் என்பன இடம்பெறவுள்ளன.

தினமும் முற்பகல் 10 மணிக்கு அபிஷேகமும், மாலை 5.30 மணிக்கு விசேட பூசையும் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும்.

எதிர்வரும் 31ஆம் திகதி மாலை வைரவர் பூசை இடம்பெறவுள்ளது. (க)

♦♦♦

புலோலி பார்வதவர்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தின் அம்பாள் மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

வேட்டைத் திருவிழா எதிர்வரும் 27ஆம் திகதியும், சப்பரத் திருவிழா மறுநாளும் இடம்பெறவுள்ளன. மேலும் இரதோற்சவம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், ஆடிப்பூர பூப்புனித நீராட்டு விழாவும், தீர்த்தோற்சவமும் மறு நாள் புதன்கிழமையும் இடம் பெறவுள்ளன. (க)

♦♦♦

தென்மராட்சி, ஜூலை 22
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலய பெருந் திருவிழா கடந்த 17ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-9)

## யாழ்.மாவட்ட அறநெறி ஆசிரியர்களுக்கு மட்டக்களப்பில் 5 நாள் வதிவிடச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கற்பித்தல் நெறிமுறைகள் தொடர்பான 5 நாள் வதிவிடக் கருத்தரங்கு ஒன்று மட்டக்களப்பில் இடம் பெறவுள்ளது.

மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் அடுத்த மாதம் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி முதல் மாலை வரை இடம் பெறவுள்ளது.

இதில் யோகாசனம் தியானப் பயிற்சிகள், பண்ணிசை, கதைகளூடாக அறநெறிக் கருத்துக்களை வெளிப்படுத்தல், கதாப் பிரசங்கம், குழுச் செயற்பாடுகள் என்பவை தொடர்பாக யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன் மட்டக்களப்பிலுள்ள பிரசித்திபெற்ற இடங்களைச் சுற்றிப் பார்வையிடவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் இந்த வருடம் இந்து கலாசாரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இந்து சமயப் பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றிய பாடசாலைகளைச் சேர்ந்த இருவர் வீதம் கலந்து கொள்ள முடியும். இவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது என்றும் அதன் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

வதிவிடச் செயலமர்வில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்கள் பங்குபற்றலாம். இவர்களுக்கு வேண்டிய தங்குமிட வசதிகள், உணவு மற்றும் இதர வசதிகளும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் செய்து கொடுக்கப்படும் என்றும் பங்குபற்ற வருவோர் கலாசார உடையில் வருவதோடு தங்க ஆபரணங்கள், பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் என்பனவற்றைக் கொண்டு வருவதைத் தவிர்க்குமாறும்- பங்கு பற்ற விரும்பும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் தமது பெயர் விவரங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னராக பணிப்பாளர், இந்து கலாசாரத் திணைக்களம், 248 1/1 காலிவீதி, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இதேவேளை வன்னிப் பிராந்திய அறநெறி ஆசிரியர்களுக்கான அறநெறி, ஒழுக்கம் தொடர்பான முக்கிய கருத்தமர்வு மாங்குளம் சிவ சற்குருநாதர் ஆச்சிரமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

அறநெறி தொடர்பான கருத்தமர்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 49 அறநெறி ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர். (வ-108 - 426)

## சந்திரபுரம் பகுதியில் கம்பம் பயிர்ச் செய்கை

### விவசாயி ஒருவர் சாதனை

தென்மராட்சி, ஜூலை 22
நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தக் கூடிய கம்பம் பயிர் மட்டுவில் சந்திரபுரம் பகுதி விசாயி ஒருவரினால் பயிரிடப்பட்டு பெரு விளைச்சலுடன் காணப்படுகிறது.

இந்தியாவில் பிரதான பயிர்களில் ஒன்றாகக் காணப்படும் கம்பு பயிருக்கான விதை கொண்டு வரப்பட்டு பரீட்சார்த்தமாக கடந்த மே மாதம் அந்தப் பகுதியில் ஆறுமுகம் தம்பாபிள்ளை என்பவரால் பயிரிடப்பட்டது.

கோடை காலத்தில் பயிரிடப்பட்ட போதிலும் அமோக விளைச்சலுடன் காணப்படும் பயிர்கள் அடுத்த வாரம் அறுவடை செய்யக்கூடிய நிலையில் காணப்படுகிறது.

இந்தப் பயிர் சோளன் பொத்திகள் போல் காணப்படுகிறது. இதனை நீரிழிவு நோயாளர்கள் புட்டு, களி, கூழ் போன்ற உணவாகவும் உடல் வெப்பத்தைத் தணிக்க காலையில் பழங்கஞ்சியாகவும் பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 22
புதிய சோனகதெரு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மீளமைப்புக் கூட்டம் ஜே/88 கிராம அலுவலர் ர.சல்பீரின் அனுசரணையுடன் யாழ்.பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.யூட் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தலைவராக சி.க.தம்பிராசாவும், உப தலைவராக கு.ரவிச்சந்திரனும், செயலாளராக யோ.கஜேந்திரனும், உப செயலாளராக செ.கந்தசாமியும், பொருளாளராக கு.விஜயகுமாரும், போஷகராக க.செல்வநாயகமும், நிர்வாக சபை உறுப்பினர்களாக க.மு.கதிர்காமநாதன், சி.சிவகுமார், க.செல்வராசா, ஐ.கனகலிங்கம், மா.மோகனரூபன், பா.ரஞ்சித்குமார், நே.செந்தில்மதி, கி.யுவராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கணக்காய்வாளராக ப.சண்முகநாதன் தெரிவு செய்யப்பட்டார். (ஒ)

**விற்பனையாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள ஆண்/பெண் விற்பனையாளர்கள் மற்றும் சிட்டை எழுதுநர் (பெண் 20-30 வயதுக்குட்பட்டவர்) உடன் தேவை.
(சி/15488) (7.6.3)
தொடர்பு :
077 555 6904, 077 915 7883

## கண்டாவளைப் பிரதேச மக்களுக்கென மலசல கூடங்களும் பொதுக் கிணறுகளும்

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் இரண்டு பொதுக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளதோடு 80 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக 80 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் முரசுமோட்டைக் கிராம அலுவலர் பிரிவில் ஒரு பொதுக் கிணறும், புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவில் ஒரு பொதுக் கிணறும் என இரு கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை- கடந்த ஆண்டு 34 மலசல கூடங்களும் இரு பொதுக் கிணறுகளும் இங்கு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-55)

## தென்மராட்சி முன்பள்ளிகளின் வலயமட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஜூலை 22
தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளுக்கிடையில் நடத்தப்பட்ட வலயமட்ட விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற முன்பள்ளிச் சிறார்கள் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**இசையும் அசைவும்** - சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்
**கொடி அஞ்சல்** - மிருசுவில் இராமநாதன் முன்பள்ளி
**கயிறு இழுத்தல்** - வரணி கரம்பைக் குறிச்சி முன்பள்ளி
**பழம் வைத்தலும் எடுத்தலும்** - மிருசுவில் கலைமகள் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்
**நீர் நிரப்புதல்**-மிருசுவில் கலைமகள் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்
**வளையும் போடுதல்** - சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்
**கோபுரம் அமைத்தல்** - வரணி கரம்பைக் குறிச்சி முன்பள்ளி
**பந்து பரிமாறல்** - கச்சாய் கலைமகள் முன்பள்ளி, கச்சாய் வினோபா முன்பள்ளி
**பிராணிகள் அஞ்சல்** - கொடிகாமம் நாவலர் முன்பள்ளி
**தடைதாண்டல்** - வரணி கௌரி பாலன்சைவப்பிரகாசமுன்பள்ளி, சாக்கோட்டம்- கச்சாய் அம்பாள் முன்பள்ளி, கொடிகாமம் நாவலர் முன்பள்ளி, கச்சாய் கலைமகள் முன்பள்ளி, கச்சாய் வினோபா முன்பள்ளி.
**நூங்கு வண்டில் சவாரி** - கொடிகாமம் பிரதேச முன்பள்ளி.
**தொப்பி பரிமாற்றம்** - சிவசக்தி முன்பள்ளி.
**பலூன் பாதுகாத்தல்** -போட்டியில்கலந்துகொண்ட அனைத்து மாணவர்களும். (வ-9)

59 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



T.இராஜேஸ்வரன் (தவம்)
[உரிமையாளர், வசந்தவும் ரயர்வேக்ஸ் சொப்]
இன்று (22.07.2014) செவ்வாய்க்கிழமை தனது 59ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதோடு, 60ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எங்கள் அப்பாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மனைவி- வசந்தா
பிள்ளைகள்- துர்க்கா (பிரான்ஸ்), கோபி (இத்தாலி), நிக்சியா, தவநிரோஜன் (கஜி), பிரியதர்சன் (பைரவி),
மருமக்கள் - லோறன்ஸ் (பிரான்ஸ்), சுதர்சினி, தவரூபன்,
பேரப்பிள்ளைகள்: மதுசியா (பிரான்ஸ்), மௌனிக்கா (பிரான்ஸ்), மதூமதி (பிரான்ஸ்) சிம்ரெல்லா, ராஜபிரதாபன்
Best wishess
82/17, யாழ்.றோட், யாழ்ப்பாணம்.

**அறிவித்தல்**

கட்டட வேலைப்பாடுகளுக்காக மூடப்பட்டிருந்த, கோயில் வீதியில் அமைந்துள்ள லூர்துமட மாணவியர் விடுதி, மாணவியர் நலன் கருதி மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.
மேலதிக விவரங்களுக்கு லூர்துமட தலைவியுடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 021 222 3872 (50186)(4.6.3)


## குடும்பத் தகராறு; 4 பேர் காயம்

கடந்த சில வாரங்களாக இருந்து வந்த குடும்பத் தகராறு கைகலப்பாக மாறியதில் 4 பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் புன்னாலைக் கட்டுவன் தெற்கு மத்தாளோடையில் நிகழ்ந்துள்ளது.
காதல் விவகாரம் தொடர்பாகவே பெண்கள் கோஷ்டிகளுக்கு இடையே இந்தக் கைகலப்பு ஏற்பட்டது என்று விசாரணையில் தெரிய வந்தது.
இதில் காயமடைந்தவர்களான மகாலிங்கம் செல்வராணி (வயது-57), மகாலிங்கம் பகிந்தா (வயது-30), சசிதரன் ஆனந்தி (வயது-41), சின்ன ராசா ஞானேஸ்வரி (வயது-56) ஆகிய நால்வரும் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-ரி-36-86)

## ஐந்தாவது தடவையாக திருட்டு

முல்லைத்தீவு கைவேலி கணேசா வித்தியாலயத்தின் முன்பாகவுள்ள மாற்றுத் திறனாளியின் வர்த்தக நிலையம் ஐந்தாவது தடவையாகவும் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
இது கடந்த சனிக்கிழமை இரவு உடைக்கப் பட்டு சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
குறித்த வர்த்தக நிலையத்தை நடத்தி வரும் ஒரு காலை இழந்த மாற்றுத்திறனாளி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்கின்றார்.
இந்த நிலையில் திருடர்கள் இந்த வர்த்தக நிலையத்தை ஐந்தாவது தடவையாகவும் உடைத்து அதிலுள்ள பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-55)



தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கென பண்ணையில் அமைக்கப்பட்டு வரும் ஐந்து மாடி கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (ஒ-17)

## குடிதண்ணீரை வழங்குமாறு அமைச்சரால் பணிப்புரை

முல்லைத்தீவு, ஜூலை 22
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு பிரதேச சபை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பணிப்புரை விடுத்துள்ளார்.
தற்போது ஒட்டுசுட்டான் பிரதேசம் வரலாறு காணாத குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றது. இங்கு வசிக்கும் மக்கள் குடிதண்ணீரைப் பெறும் பொருட்டு குழாய்க் கிணறுகளுக்கு அருகில் நீண்ட வரிசையில் காத்திருப்பதைக் காண முடிகின்றது.
மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக பெரிய நீர்ப்பாசனக்குளம் முதல் சிறுகுளங்கள் வரை நீர் வற்றிக் காணப்படுகின்றன.
கிணறுகளிலும் நீரில்லாததால் மக்கள் பெரும் அவலத்தை எதிர்கொண்டு வருகின்றனர். குளிக்கவோ அல்லது குடிக்கவோ நீரின்றி மக்கள் படும் அவலங்களைக் கண்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நீர்த் தாங்கிகளை வைத்து குடிதண்ணீரை வழங்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

(க-500)

# வீதி விபத்துச் சம்பவங்கள்

வலி. வடக்கு.ஜூலை 22
திடீரென சைக்கிளை வீதியின் குறுக்கே கொண்டு வந்ததில் மோட்டார் சைக்கிளுடன் கொழுவுப்பட்டு வீழ்ந்ததில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சுன்னாகம் இலங்கை வங்கிக்கு முன்னால் இடம்பெற்ற இந்த விபத்தில் கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர் கோண்டாவில் மேற்கு ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த மகாலிங்கம் ஜெயந்திரன் (வயது-55) என்பவர் ஆவார். குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (ஒ-86)

◆ ◆ ◆

வலி. வடக்கு, ஜூலை 22
சைக்கிளில் பயணித்த முதியவர் சறுக்கி வீழ்ந்ததில் கைமுறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். வவுனியாவில் இருந்து வந்து ஊரெழு வடக்கில் தங்கி நிற்கும் வேளையில் உறவினருடைய வீட்டுக்குச் சென்ற வேளையில் குப்பிளான் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் காயப்பட்டவர் மாதன் சிவசம்பு (வயது-60) என்பவர் ஆவார். (ஒ-86)

◆◆◆

வலி .வடக்கு, ஜூலை 22
மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை குறுக்கே நாய் திடீரென ஓடியதில் மோதுண்டு வீழ்ந்ததில் கால் முறிந்த நிலையில் வயோதிபர் ஒருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மல்லாகம் நீதிமன்றத்துக்கு முன்னால் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயப்பட்டவர் அளவெட்டி சீனன் கலட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளைபூபாலசிங்கம் (வயது- 67) என்பவர் ஆவார். (ஒ-86)

◆◆◆

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வீதியில் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி வரும் சம்பவங்கள் தினமும் தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றன.
மிருசுவில் உசன் சந்தியில் மோட்டார் சைக்கிளும் ஹன்ரர் வாகனமும் சனிக்கிழமை மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளோட்டிக்கு கால் முறிந்தது.
வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததால் மோட்டார் சைக்கிள் பூநகரிப் பாலத்துடன் மோதியதில் அதில் பயணித்தவர் காயமடைந்து வாகன வசதி கிடைக்காததால் நீண்ட நேரத்தின்பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.
உசன் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் மிருசுவில் உசனைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை செல்வநாயகம் (வயது-65) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு. அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.
பூநகரிப் பாலத்தில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் பூநகரி சங்குப்பிட்டியைச் சேர்ந்த கே.எச்.டி.தம்மிக்க (வயது-21) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

◆◆◆

தென்மராட்சி,ஜூலை 22
வீதியைக் கடந்த வயோதிபரை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி சந்தியில் இடம்பெற்றது. சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த குமாரவேலு சிவபாதம் (வயது-62 ) என்பவர் காயங்களுக்கு இலக்கானவராவார். (ஒ-9)

◆ ◆ ◆

சைக்கிளில் பிள்ளையுடன் சென்ற ஆசிரியையின் முன்னால் சென்று மோட்டார் சைக்கிளை வெட்டி திருப்பியதில் ஆசிரியை சைக்கிளுடன் வீழ்ந்து கைமுறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சுன்னாகம் மயிலணி முருகமூர்த்தி கோயிலுக்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் காயம் அடைந்தவர் மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியை ஒருவர்.
மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்த மூவர் ஆசிரியையின் சைக்கிளுக்கு முன்னால் வந்து திடீரென மோட்டார் சைக்கிளை வெட்டித் திருப்பியதில் ஆசிரியை வீழ்ந்து சத்தமிட்டார். சத்தம் கேட்டு அங்கு மக்கள் கூடினர். அதை அடுத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இருவர் தப்பி ஓட ஒருவர் சிக்கிக் கொண்டார். சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்ட இளைஞரை கைது செய்துள்ளார்கள். மற்றைய இருவரும் தலைமறைவாகியுள்ளனர்.
இதேவேளை - குறிப்பிட்ட சம்பவம் ஆசிரியையின் கழுத்தில் இருந்த தங்க நகைகளை அபகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று பொது மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ஒ-86)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்ஜூலை22
யாழ்ப்பாணம் மாநகர சபை முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை9.30மணிக்கு பண்டார மாளிகை வளவு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.விமலநாதனும், முதல்வரின் செயலாளர் கு.பற்குணராசாவும் கலந்து கொள்வார்கள்.

(க-7)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



செல்வி ஷர்மினி கதிர்காமு B.Sc
(முன்னாள் ஆசிரியை, வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)
மண் மகிழ 20.02.1984 கண்நெகிழ 22.07.2013

பாசதீபம் ஒன்று அணைந்து
பறந்தது ஓராண்டு
என்றும் உன் புன் சிரிப்பும்
பூமலர்ந்த வதனமும்
இன்றும் எங்கள் கண்முன் நின்று
கதைகள் பல சொல்கிறதே !

குன்றாத இளமையுடன்
குடியிருந்த குலக்கொழுந்தே
குன்றின் மணியே நன்றாய் இருந்த
உன் வாழ்வை
நாசம் செய்தானே நயவஞ்சகன்

தாண்டிடும் துயரங்கள் ஏராளம்
நீ தந்திட்ட துயரமே நிரந்தரம்
ஆண்டுகள் பல சென்றாலும் - உன்
ஆசைமுகம் அகலாது எம்மை விட்டு
நீ ஏகிடும் இடத்தில் சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி சுந்தராம்பாள் கதிர்காமு
(ஆசிரியை/கிளி.மகா வித்தியாலயம்)
திரு-திருமதி ஜெனீஸ்வரன் குடும்பம் (லண்டன்)
பூநகரி.
(50080) (5.6.3)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இரத்தினம் பொன்னம்பலம்



தோற்றம் 05★08★1945
மறைவு 06★08★2010
திதி:ஏகாதசி

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்ததப்பா
ஆனாலும் உங்கள் பிரிவுத்துயர் மாறவில்லை
மீண்டும் ஒரு பிறப்பொன்று உண்டானால்
எம்மிடம் நீங்கள் வரவேண்டுகின்றோம்.

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 02 . 07 . 1928
மறைவு 24 . 06 . 2014

கடந்த 24.06.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமெய்திய
அமரர் முத்தம்மா (முத்துமாரி) முருகன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.07.2014) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (24.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில் கிழக்கு.
கற்பகப் பிள்ளையார் கோவிலடி.
(அன்னை சனசமூக நிலையத்தடி)
குடும்பத்தினர்.

## எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு 25 ஆயிரம் கோடி ரூபா நட்டம்

2007 ஆம் ஆண்டில் இருந்து 2013ஆம் வரையிலான காலப்பகுதியில் எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு 25 ஆயிரம் கோடி ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
கலகெதர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதேவேளை- சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்திருந்த போதும் இதுவரை எந்தவித உற்பத்தி பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை என குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.
கனியவள கூட்டுத்தாபனத்தின் தேசிய சங்கத்தின் பொது செயலாளர் ஆனந்த பாலித்த இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், தற்போது மூன்று கப்பல்கள் எரிபொருளை இறக்குமதி செய்யும் நோக்கில் தரித்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் ஒரு கப்பல் எதிர்வரும் நாள்களில் இலங்கைக்கு வரவுள்ளது. (வ)

# பௌதிக வள அபிவிருத்தியுடன் மனித வள அபிவிருத்தியும் தேவை

## அமைச்சர் நிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22
கொங்கிறீட் பாதைகள், கட்டடங்களின் மூலம் மட்டும் ஆசியாவில் ஆச்சரியத்தை ஏற்படுத்த முடியாது என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
எவ்வளவு உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டாலும் இளைஞர் சமூகம் அதிருப்தியில் இருந்தால் அந்த சமூகம் நீடித்திருக்காது.
பௌதிக வள அபிவிருத்தியுடன் மனித வளத்தை அபிவிருத்தி செய்வது மிகவும் அவசியமாகின்றது.
இந்த நாடு சில கிளர்ச்சிகளை சந்தித்துள்ளது. இவ்வாறான கிளர்ச்சிகள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களை முடக்குவதே மஹிந்த ராஜபக்ஷ அரசின் நோக்கமாகும்.
இளைஞர் சமூகத்துக்கு உரிய தொழில் பயிற்சிகளை வழங்கி,


நிமல் சிறிபால டி சில்வா

அவர்களின் ஆளுமையை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய ஒற்றுமை குறித்து பாடம் கற்பிக்கும் சர்வதேச சமூகத்துக்கு இளைஞர் படையணியின் ஊடாக பதிலளிக்க முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். அண்மையில் பதுளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (வ)

## நுகர்வோர் சட்டம் தொடர்பில் தெளிவுபடுத்த நடவடிக்கை

நுகர்வோர் சட்டம் தொடர்பில் வர்த்தக சமூகத்தை தெளிபடுத்தவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.
மாவட்ட மட்டத்தில் இந்த செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம். ஏ.டக்ளஸ் கூறியுள்ளார்
நுகர்வோர் சட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் நடவடிக்கை ஏற்கனவே காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுவருவதாக அவர் குறிப்பிட்டார்.
வர்த்தக சமூகத்துக்கு நுகர்வோர் சட்டம் தொடர்பில் விளக்கமளிப்பதுடன் நீதியை மீறிச் செயற்படுமிடத்து சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பது தொடர்பாகவும் இதன்போது தெளிவூட்டப்படுவதாக நுகர்வோர் விவகார சபையின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக் காட்டினார். சட்டவிதிகளுக்கேற்ப செயற்படுமிடத்து நுகர்வோரின் நம்பிக்கையை பெற்றுக்கொள்வதுடன் வர்த்தக நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்பது தொடர்பிலும் தெளிபடுத்துவதே இதன் நோக்கம் என நுகர்வோர் விவகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம். ஏ.டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

## தேங்காய் மட்டை- எண்ணெய் என்பவற்றினூடாக வருமானம்


கொழும்பு, ஜூலை 22
தேங்காய் மட்டை மற்றும் தேங்காய் எண்ணெய் என்பவற்றை வருமானம் தரும் பொருள்களாக மாற்ற முடியும் என்று தெங்கு அபிவிருத்திச் அதிகார சபையின் பணிப்பாளர் அருண குணதிலங்க அரசாங்கத் தகவல் திணைக்களத்துக்கு தெரிவித்தார்.
இலங்கையில் சேகரிக்கப்படும் தேங்காய் மட்டைகளில் 45 வீதம் மட்டுமே தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்றன.
90 வீதமானவை பயனற்ற வகையில் வீணாக்கப்படுகின்றன. எனினும் 80 வீத மானவை தெங்கு முக்கோணப் பிரதேசங்களுக்கு அண்மையிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்றன.
ஒதுக்கப்பட்டும் தேங்காய் மட்டைகளை பயனுள்ள வகையில் மாற்றுவதற்கான பெரிய திட்டம் ஒன்றை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை முன்னெடுத்துள்ளது.
தேங்காய்மட்டையுடன்தொடர்புபட்ட பல்வேறு கைதொழில்களினூடாக மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான சலுகை அடிப்படையில் உபகரணங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.
அதேபோன்று, கொப்பரா தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பன அதிகளவில் வீணாகின்றன.
அவற்றினூடாகவும் பணம் சம்பாதிக்க முடியும். தேங்காய் எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கான தனியார் கைதொழில் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.
இனிவரும் காலங்களில் அதிக தேங்காய் எண்ணெயை ஏற்றுமதிச் செய்ய நாம் எதிர்பார்த்துள்ளோம்.
சர்வதேச வியாபாரச் சந்தையில் ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 2.50 அமெரிக்க டொலருக்கு விலை போகிறது என்று தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (வ)

## பாறைக்கு வெடி வைத்த இருவர் காயம்

இரத்தினபுரி, ஜூலை.22
இரத்தினபுரி மாவட்டம் பலாங்கொட பகுதியில் பாறைக்கு வெடி வைத்துக் கொண்டிருந்த நிலையில், இருவர் அந்த வெடியில் சிக்கிய நிலையில் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.
காயமடைந்தவர்களின் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு பிரதான மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## இரண்டாம் ஆண்டு நினைவு

அமரர்
**செல்லப்பா துரைராஜா**
(ஓய்வுபெற்ற அதிபர்)



தோற்றம்
01 . 06 . 1938

மறைவு
13 . 08 . 2012

திதி : 22.07.2014

ஒளிர்கின்ற தீபத்தின்
விரிகின்ற ஒளிச்சுடரே
சிதைந்துவிட்ட நினைவுகளில்
புதைந்து கிடக்கும் சித்திரமே
உம்மை ஆடிக்காற்று அள்ளிச்சென்று
ஓடிப்போனதோ ஈராண்டுகள்
நேற்றுப்போல் இருக்கிறதே
உங்கள் உடல்தனை நெருப்பில் கரைத்து...
சோர்ந்து போகின்றோம் தினம்... தினம்...
எதை எண்ணி எம்மைத் தேற்றுவோம்?

(C/15487) (7.6.3)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### பொன்சேகாவுக்கு ஏற்பட்ட கதியே சோபித தேரருக்கு

2010 ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவின் நிலையே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக கூறும் மாதுளுவாவே சோபித தேரருக்கு ஏற்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.
இளைஞர் வலுவூட்டல் துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும 2010ம் ஆண்டு ஏனையவர்களின் உந்துதலால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா அதில் தோல்வியடைந்தார்.
அவர் இன்று உரசிப் பார்த்து வீசப்பட்ட லொத்தர் டிக்கெட்டை போன்ற நிலைக்கு உள்ளாகியுள்ளார் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.
கலிகமுவ பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அமைச்சர், சரத் பொன்சேகாவை கொண்டு செய்ய முடியாதஒன்றையேஇன்று சிலர் மாதுளுவாவே சோபித தேரரை வைத்து செய்வதற்கு முயற்சிக்கின்றனர் என்றும் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார். (ஓ)

## நன்றி நவிலல்

திருமதி
**தனுஷா றஜீவன்**



பிறப்பு
03 . 02 . 1989

இறப்பு
07 . 06 . 2014

கடந்த 07.06.2014 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்பு மகளின் இறப்பு செய்தி கேட்டு பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், மரணச் சடங்குகளில் கலந்து கொண்டர்வர்கள், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மற்றும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சேனைப்பிலவு,
நெடுங்கேணி.
(44727)(8.6.4)
குடும்பத்தினர்.

## 17 ஆம் ஆண்டு நினைவலைகள்

செல்வி
**மைதிலி கந்தசாமி**



மலர்வு
19★11★1961

உதிர்வு
30★07★1997

திதி: ஏகாதசி

ஆண்டுகள் பதினேழு சென்றாலும்
ஆறவில்லை உன் துயரம்
மீண்டும் நீ வாராயோ – என
நிதம் ஏங்கித் தவிக்கின்றோம்

ஞான பண்டித
பாடசாலை அருகில்,
கொக்குவில் மேற்கு.
(5076)(4.3.6)

உன் பிரிவால் துயருறும்
சகோதர, சகோதரிகள்.

# காஸாவில் போரை உடன் நிறுத்துங்கள்

## ஐ.நா. பாதுகாப்புச் சபை வலியுறுத்தல்


கட்டார், ஜூலை 22

இஸ்ரேலின் தொடர் தாக்குதலில் காஸாவில் பலியானோர் எண்ணிக்கை 501 ஆக அதிகரித்துள்ளது. அங்கு உடனடியாக போர் நிறுத்தம் தேவை என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் அடிக்கடி மோதலும், எதிர்த் தாக்குதலும் நடைபெற்று வருகிறது. கடந்த 13 நாள்களாக நடந்து வரும் தாக்குதலில், உயிரிழப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

எகிப்தின் போர் நிறுத்தத் திட்ட முயற்சியை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டு, கடந்த 15 ஆம் திகதி காலை சில மணி நேரம் போர் நிறுத்தம் செய்தது. ஆனால், ஹமாஸ் அதனை ஏற்க மறுத்ததால், இஸ்ரேல் மீண்டும்தாக்குதலைத்தொடர்ந்தது.

இதன் விளைவாக, இஸ்ரேலின் தொடர் வான்வழித் தாக்குதலில் காஸாவைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள் உட்பட 501 பேர் இது வரை உயிரிழந்தனர்.



இடம்பெயரும் பலஸ்தீனக் குடும்பம் ஒன்று

பதற்றம் நீடித்துக் கொண்டிருக்கும் நிலையில், இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் இடம் பெற்றுள்ள 15 நாடுகளின் உறுப்பினர்கள் உடனான அவசர கூட்டம் நேற்று முன்தினம் இரவு கட்டாரில் நடைபெற்றது. அதில், காஸாவில் தற்போது உள்ள நிலைக்கு முடிவு காணவேண்டும் என்பது குறித்துப் பேசப்பட்டது.

அப்போது, கடந்த 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் உடனான ஒப்பந்தப்படி, அங்கு போர் நிறுத்தம் உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அப்போது பேசிய கட்டார் வெளியுறவுத் துறை அமைச்சர் கலேத் அல் அட்டியா, இஸ்ரேலின் ராணுவத் தாக்குதலுக்கும் ஹமாஸ் மற்றும் ஜிகாத்தின் ஏவுகணைத் தாக்குதலுக்கும் முடிவு ஏற்படுத்தப் படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

கட்டார் வழியே பயணித்த போது, காஸாவில் குழந்தைகள் உள்ளிட்ட பல அப்பாவி பொதுமக்கள், இஸ்ரேல் ராணுவ தாக்குதலால், கொல்லப்பட்டிருப்பதை பார்க்க முடிந்ததாக, ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் பான்-கி-மூன் கவலை தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும்போது, காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல் மேலும் தீவிரமடைந்து வருவது குறித்து நானும், உலகத் தலைவர்களும் கவலை கொண்டிருக்கிறோம். பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். இந்தப் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை தீர்வாகாது" என்றார்.

ஆனால், காஸாவில் கடந்த இரு வாரங்களில், 18 இஸ்ரேல் ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், அதனால் தாக்குதல் நீடிக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹு தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அமெரிக்க அதிபர் ஒபாமாவின் அறிவுறுத்தலின் பேரில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி, இந்த விவகாரம் தொடர்பாக பேச எகிப்து விரைந்துள்ளார்.

முன்னதாக, இஸ்ரேல் பிரதமர்பெஞ்சமின்நெதன்யாஹுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர் பேசும்போது, காஸாவில் ராணுவ நடவடிக்கை விரிவுபடுத்தப்படுவதை தவிர்க்க வேண்டும். 2012 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் இருதரப்பினரும் விரைவில் மேற்கொள்ள வேண்டும். இதற்கு ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்ளும் வகையில் எகிப்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து துணை நிற்கும்" என்று அவர் கூறியதாக, அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. (த)

### எம்.எச்.17 விமானம் இனிமேல் இல்லை

கோலாலம்பூர், ஜூலை 22

உக்ரைனில் எம்.எச்.17 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு 298 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து **இனிமேல் எம்.எச்.19 என்ற பெயரில் தான் அம்ஸ்ரர்டாம்-கோலாலம்பூர் விமானச் சேவை தொடரும் என்று மலேசிய எயார்லைன்ஸ் விமானம்** அறிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக எம்.எச்.17 என்ற அடையாளத்தை விலக்கிக் கொள்வதாகவும் இனி அந்த விமானச்சேவை எம்.எச்.19 என்றே அழைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது மலேசிய எயார்லைன்ஸ்.

சேவை எண்ணிக்கையில் எந்தவித மாற்றமும் இல்லை என்று கூறிய மலேசிய எயார்லைன்ஸ், ஆம்ஸ்ரர்டாம்-கோலாலம்பூர் தினசரிச் சேவை தொடரும் என்று கூறியுள்ளது.

முன்னதாக, நேற்று வரை புரியாத புதிராக மாயமாகிப் போன எம்.எச்.370 விமானத்தின் அடையாளத்தையும் மலேசிய அரசு மாற்றியது குறிப்பிடத்தக்கது. (த)



### தென்கொரியாவில் ஹெலி விபத்து

சியோல், ஜூலை 22

தென் கொரியாவில் தீயணைப்பு வீரர்களை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்ரர் ஒன்று விபத்திற்குள்ளானதில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

தென் கொரியாவின் காங்வான் மாகாணத்தில் கப்பல் விபத்தில் இறந்தவர்களை கண்டுபிடிக்கத் தேடுதல் வேட்டையில், ஹெலிகொப்ரர் ஒன்று ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் தேடுதலை முடித்த பின் திரும்பிச் செல்லும்போது, அந்த ஹெலிகொப்ரர் குடியிருப்புப் பகுதியின் தரையில் விழுந்து வெடித்துள்ளது.

இதில் பயணித்த 5 தீயணைப்பு வீரர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் அப்பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாததால், அங்கு வேறு யாருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது. (த)



காஸா இஸ்ரேல் தரைவழித் தாக்குதலை ஆரம்பித்ததை அடுத்து காஸா பகுதி முழுவதும் பெரும் புகை மூட்டமாகக் காணப்படுகிறது. குண்டுத்தாக்குதல்களால் அந்தப் பகுதி தொடர்ந்தும் அதிர்கிறது. (த)

# எங்களைக் குற்றஞ்சாட்டும் ஒலிப் பதிவு போலியானது

## ரஷ்யா திட்டவட்டம்

மொஸ்கோ, ஜூலை 22

உக்ரைன் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதில் ரஷ்யாவுக்குத் தொடர்பு இருப்பதாக வெளியான குற்றச்சாட்டுகளை அந்நாட்டு அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக 'தி இந்து' ஆங்கில நாளிதழுக்கு ரஷ்ய தூதர் அலெக்சாண்டர் கடாகின் பேட்டியளித்துள்ளார்.

அவர் கூறியதாவது: ரஷ்ய ராணுவ அதிகாரி ஒருவர் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய கிளர்ச்சியாளர்களுடன் பேசியதாக வெளியாகியுள்ள தகவல் சித்திரிக்கப்பட்டவை. அப்படி எந்தப் பேச்சும் நடைபெறவில்லை.

பேச்சு நடந்ததாகவும், அந்த உரையாடலை இடைமறித்துப் பதிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அதை ஆய்வு செய்தபோது, அந்த உரையாடல் விமான விபத்து நடைபெறுவதற்கு முந்திய நாளே பதிவு செய்யப்பட்டது உறுதியாகியுள்ளது.

அரசியல் ராஜதந்திரத்தில், போலி ஆதாரங்களை விவாதப் பொருளாக எடுத்துக் கொள்ள முடியாது. பழி சுமத்துவதற்கு முன்னர் வெளிப்படையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

மேலும், மலேசிய விமானம் எம்.எச் - 17 பக் ரக ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக உக்ரைன் கூறியிருக்கிறது. சம்பவம் நடந்த 10 நிமிடங்களில் எப்படி ஒரு குற்றச்சாட்டை உக்ரைன் அரசால் முன்வைக்க முடிந்தது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (த)



மும்பாய்க்கு நேற்று பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை மகாராஷ்டிரா முதலமைச்சர் பிருதிவிராஜ் மும்பாய் விமான நிலையத்தில் வரவேற்றார். (த)

## பயந்தோடுகிறது பா.ஜ.க

### ஆம் ஆத்மி விமர்சனம்

புதுடில்லி, ஜூலை 22
டில்லியில் சட்டசபைத் தேர்தலைச் சந்திக்க பா.ஜ.க கட்சியினர் பயந்தோடுவதாக ஆம் ஆத்மி கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

டில்லியில் பா.ஜ.க ஆட்சியமைக்க ஆம் ஆத்மி கட்சியின் பல உறுப்பினர்களைத் தங்கள் பக்கம் இழுக்கப் பேரம் பேசுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது குறித்து ஆம் ஆத்மி கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், தேர்தலைச் சந்திக்கப்போவதாகக் கூறிவந்த பா.ஜ.க, தற்போது எடுத்துள்ள இரட்டை நிலைப்பாட்டைப் பார்க்கும்போது, தேர்தலைப் பார்த்து பயந்து ஓடுவதைப் போலத்தான் தெரிகிறது.

மேலும் பா.ஜ.க வை போலவே காங்கிரஸும் தேர்தலைப் பார்த்து பயந்து போனதால் தான் டில்லி சட்டசபை கலைப்பு விவகாரத்தில் மௌனம் காக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார். (த)

# தி.மு.க , அ.தி.மு.க கட்சிகளை வேரோடு அழித்துவிடவேண்டும்

## மருத்துவர் ராமதாஸ் ஆவேசம்

சென்னை, ஜூலை 22
தமிழகத்தில் தி.மு.க மற்றும் அ.தி.மு.கவை வேரோடு அழிக்கவேண்டும் என்று பா.ம.க நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பா.ம.கவின் சென்னை மாவட்ட பொதுக்குழு எம்.எம்.டி.ஏயில் உள்ள ஐஸ்வர்யா மகாலில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

இந்தக் கூட்டத்துக்குக் கட்சியின் மாநில துணைப்பொதுச் செயலாளர் ஏ.கே.மூர்த்தி தலைமை தாங்கினார்.

இந்தக் கூட்டத்தில் பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் பேசியதாவது:-

எங்களைப் போல தமிழகத்தில் எந்த கட்சியும் போராட்டங்களை நடத்தியதில்லை. போராட்டங்கள் தான் ஒரு கட்சியின் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். தர்மபுரியிலும், கன்னியாகுமரியிலும் தற்போது மாற்றம் வந்துள்ளது. அது தமிழகத்தின் மற்ற பகுதிகளிலும் வரவேண்டும்.

அ.தி.மு.க, தி.மு.கவை வேரோடும் வேரடி மண்ணோடும் அழிக்க வேண்டும். இந்தக் கட்சிகளை அழிக்கும் பலம் பா.ம.கவிடம் தான் இருக்கிறது. 2016 இல் தமிழகத்தில் பா.ம.க ஆட்சியை பிடிக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்தக் கூட்டத்தில் பா.ம.க தலைவர் ஜி.கே.மணி, மாநிலப் பொருளாளர் சையது அக்பர் அலி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பா.ம.கவின் சென்னை மாவட்ட பொதுக்குழுவில் அன்புமணி ராமதாஸ் பேசும்போது, நாடாளுமன்ற தேர்தலில் முறைகேடான வழியில் வெற்றி பெற்றது போல், வரும் சட்டமன்றத் தேர்தலில் செய்ய முடியாது. அதனால் 2016ஆம் ஆண்டு பா.ம.க தலைமையில் ஆட்சி அமையும். பாமக 25 ஆண்டுகளாகப் பல போராட்டம், கஷ்டங்களைக் கடந்து வந்துள்ளது. ஏ.கே.மூர்த்தி தலைமையில் டில்லியில் போட்டியிட்ட பா.ம.க 15 ஆயிரம் வாக்குகளைப்பெற்றது. ஆனால் விஜயகாந்த் கட்சியினர் டெல்லியில் 10, 15 இடங்களில் போட்டியிட்டு வெறும் 2 ஆயிரம் வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. என்றார். (த)



ராமதாஸ்

## 3,500 இந்தியர் ஈராக்கிலிருந்து திரும்பினர்

புதுடில்லி, ஜூலை 22
உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக்கில் இருந்து கடந்த ஒரு மாதத்தில் 3,500 க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

மொசூல் நகரில் தீவிரவாதிகளின் பிடியில் உள்ள 39 கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட சுமார் 50 பேர் இன்னும் போர் நடைபெறும் பகுதியில் சிக்கியுள்ளனர்.

இது குறித்து டில்லியில் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் கூறும்போது, ஈராக்கில் இருந்து இந்தியர்கள் தாயகம் திரும்புவதற்காக முதலில் 2,500 பயணச்சீட்டுகளும், பின்னர் தொழிலாளர்களுக்காக அங்குள்ள நிறுவனங்கள் வழங்கிய 1,000 பயணச்சீட்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சன்னித் தீவிரவாதிகளின் பிடியில் உள்ள 39 இந்தியர்களை மீட்க அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டுள்ளோம்.

இதற்காக ஈராக்கின் அண்டை நாடுகளுடனும் தொடர்பில் இருந்து வருகிறோம் என்றார்.

இந்நிலையில் சிக்கலான பகுதியில் இருக்கும் இந்தியர்கள் சிலர், அவர்களை மீட்க முயற்சி மேற்கொண்டபோதிலும், நாடு திரும்ப விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. (த)

## ஜெயலலிதா, கருணாநிதி பெயரை மாற்றத் தயாரா?

பள்ளிகளில் சமஸ்கிருத வாரம் அனுசரிக்கப்படுவதை எதிர்க்கும் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரின் பெயர்கள் வடமொழிப்பெயர்கள் தானே என்று சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். சமூக வலைத்தளத்தில் நடந்த விவாதம் ஒன்றில் பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளித்த சுப்ரமணியசுவாமி, சமஸ்கிருதம் எதிர்காலத்தின் மொழி. நாசாவே சமஸ்கிருத மொழிதான் கணனிக்கு இலகுவானது என்பதை அடையாளம் கண்டு கொண்டுள்ளது. (த)

## முஸ்லிம் லீக் தலைவர் அக்பர் சென்னையில் வெட்டிக் கொலை

சென்னை, ஜூலை 22
சென்னையில் தமிழ்மாநில முஸ்லிம்லீக் மத்திய சென்னை மாவட்ட தலைவராக இருந்த அக்பர் என்பவர் மர்மக் கும்பலால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ராயப்பேட்டை உசேன்நகர் 3வது தெருவை சேர்ந்த நாசர் என்பவரது மகன் அக்பர் (வயது-32), தமிழ்மாநில முஸ்லிம்லீக் மத்திய சென்னை மாவட்ட தலைவராக இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று அதிகாலை 4 மணியளவில் அவர், நோன்பு இருக்கும் ஷகர் நிகழ்ச்சியில் பங்கேற்பதாகச் சென்றபோது, மறைந்து இருந்த 5 பேர் கொண்ட கும்பல் அக்பரைச் சரமாரியாக அரிவாளால் வெட்டியுள்ளது.

இதையடுத்து, உடலில் பல இடங்களில் வெட்டுக் காயத்துடன் கிடந்த அவரை அரசு பொது மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, அவர் வழியிலேயே பரிதாபமாக இறந்துள்ளார்.

இந்தப் படுகொலை தகவலை அறிந்ததும், அக்பர் அவரது குடும்பத்தினர், கட்சி நிர்வாகிகள் ஐஸ் அவுஸ் பொலிஸ் நிலையத்தில் குவிந்துள்ளனர்.

இந்தப் படுகொலை குறித்து மயிலாப்பூர் பொலிஸார் அதிரடி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸின் முதல்கட்ட விசாரணையில், அரசியல் முன்விரோதத்தில் தான் அவர் கொலை செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

தமிழ்மாநில முஸ்லிம் லீக் கட்சியில் இருந்து ஒரு பிரிவினர் விலகி திமுக கூட்டணியில் சேர்ந்துள்ளனர்.

இந்நிலையில், அக்பர் தலைமையிலான கோஷ்டி அ.தி.மு.கவுக்கு ஆதரவானதால், பிரிந்து சென்ற கோஷ்டிக்கும் அக்பருக்கும் இடையே ஏற்கனவே சிறு சிறு மோதல்கள் இருந்து வந்துள்ளன.

இந்த மோதல் குறித்து அக்பர் ஐஸ் அவுஸ் பொலிசில் ஏற்கனவே புகார் கொடுத்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது. (த)

## சென்னை விமான நிலையத்தில் தங்கத்துடன் கைதானார் பெண்

சென்னை, ஜூலை 22
மலேசியா தலைநகரம் கோலாலம்பூரில் இருந்து நேற்று அதிகாலை சென்னைக்கு விமானத்தில் வந்த பயணிகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது ஒரு பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த பெண் அதிகாரிகள் அவரைத் தனியாக அழைத்துச்சென்று சோதனை செய்தபோது தனது உள்ளாடைக்குள் 2 1/2 கிலோ தங்கம் மறைத்துவைத்திருப்பது தெரியவந்தது.


விசாரணையில் அவரது பெயர் திரேஷ் செல்வராணி (வயது-60), விருதுநகரைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்தது.

தங்கத்தைப் பறிமுதல் செய்த அதிகாரிகள் அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் மதிப்பு ரூபா 240 லட்சம். (த)


# பௌத்தர்களைக் காப்பாற்ற தலைவர் இல்லை தலாய்லாமா தலையிடுகிறார் எம் விடயத்தில்

## சீறுகிறார் ஓமல்பே சோபித தேரர்

கொழும்பு, ஜூலை 22
இலங்கையில் பௌத்த மதம் அழிந்து கொண்டு போகிறது. சிங்கள பௌத்த மக்களைக் காப்பாற்ற இன்று சிறந்த தலைவர் எவரும் இல்லை. ஆனால் இலங்கை விடயத்தில் தலையிடுகிறார் தலாய்லாமா. அவருக்கு அந்த உரிமை இல்லை. அவர் பௌத்த மதத்துக்குத் தலைவர் அல்லர்.
இவ்வாறு கூறுகிறார் ஓமல்பே சோபித தேரர்.
கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பௌத்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே சோபித தேரர் மேற்கண்டவாறு கூறினார்.
அங்கு தேரர் தொடர்ந்து கூறியதாவது: -
முஸ்லிம் தீவிரவாதிகள் கிளர்ச்சிகளை மேற்கொண்டாலும் சிங்கள பௌத்தர்கள் தான் அடக்குமுறைகளை கையாள்கின்றனர் என சர்வதேச அளவில் கருத்து பரப்பப்படுகின்றது. இன்று சர்வதேச அளவில் இலங்கை குற்றவாளி நாடாக சித்திரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் முஸ்லிம் குழுக்களின் மோதல்களையும் சிங்கள மக்களுக்கெதிரான முஸ்லிம் பிரிவினைவாதக் குழுக்களின் அடாவடித்தனங்களையும் சர்வதேசம்



தலாய்லாமா



ஓமல்பே சோபித தேரர்

கண்டுகொள்ளவில்லை. மாறாக நாட்டில் பௌத்த பேரினவாத சக்தி சிறுபான்மை மக்களை அடங்குகின்றது என்ற கருத்தையே சர்வதேச அரங்கில் முன்வைக்கின்றனர்.
அதை எதிர்த்து கருத்து வெளியிட நாட்டில் சிறந்த மதத் தலைவர்கள் இல்லாது போய் விட்டார்கள். பௌத்த மதத்தின் பாதையில் நாட்டை இட்டுச் செல்ல நல்லதொரு தலைவர் இல்லாது போய்விட்டார்.
அரசியல் ரீதியில் பேசும் தலைவர்கள் மதம் சார்ந்தும் பௌத்தத்தை பாதுகாக்கும் நோக்கிலும் இந்த நாட்டின் உண்மை நிலைமையை சர்வதேச அளவில் கொண்டு செல்ல முடியாது போயுள்ளது. எமது நாட்டின் மீது குற்றம் கூற இன்று சர்வதேச அளவில் தலைவர்கள் உருவாகிவிட்டார்கள். திபெத்திய பௌத்த மதத் தலைவர் தலாய்லாமா கூட இலங்கையில் பௌத்த தீவிரவாதம் தலைதூக்கியுள்ளதுஎன்று அறிக்கை வெளியிடுகிறார்.
இங்கு முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் எனவும் தெரிவித்தார். இவரின் கருத்தை பௌத்த மதத்தின் கருத்தாகவும் பௌத்த மத தலைவரின் கருத்தாகவும் எண்ணி சர்வதேச ஊடகங்கள் இலங்கையின் மீது தவறான கோணத்தில் கருத்து வெளியிடுகின்றன. உண்மையிலேயே தலாய்லாமா என்பவர் பௌத்த மதத்தில் உள்ள பிரிவுகளில் ஒரு பிரிவின் தலைவர் மட்டுமே அவரைப் போல் பலர் இருக்கின்றார்கள். எனவே அவரின் கருத்தை முக்கிய கருத்தாகக் கருதுவது அர்த்தமற்றது- என்றார். (ஓ)

## ஐ.தே.கவின் முக்கிய புள்ளிகள் ஊவா தேர்தல் களத்தில்

கொழும்பு, ஜூலை 22
தற்போதைய ஆட்சியைப் பதவியி றக்கும் விதத்தில் எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சக்தி வாய்ந்த குழு வொன்றை வேட்பாளர்களாகக் களமிறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்தக்கட்சியின் நிறைவேற்றுக்குழு தெரிவித்திருக்கிறது.
இந்தத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளரையும், ஏனைய வேட்பாளர்களையும் தேர்ந்தெடுப்பதற்கான பூரண அதிகாரத்தை ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கியுள்ளதாக நிறைவேற்றுக் குழு தெரிவித்துள்ளது.
ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கட்சித் தலைமையகத்தில் நடந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது.
கட்சியின் இலக்குகளை நிறைவேற்றத் தவறிய மாவட்ட அமைப்பாளர்களுக்கும் முன்னைய உறுப்பினர் களுக்கும் இந்தமுறை தேர்தலில் களமிறங்க சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாதென கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார். (ஓ)

## நான் வெளியேற்றுவதற்கு முன் நீங்களாகவே வெளியேறுங்கள்

### அமைச்சர்களான ஹக்கீம், நவீனிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

"நான் வெளியேற்ற முன்னர் எம்முடன் உடன்படாதவர்கள் அமைச்சரவையிலிருந்து உடனே வெளியேறலாம்."
- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் பொது முகாமைத்துவ அமைச்சர் நவீன் திஸாநாயக்க ஆகியோரை நோக்கியவாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
கடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது பொது தீர்மானங்களுக்கு உடன்படாதவர்கள் அரசைவிட்டு வெளியேறிச் செல்லுமாறு அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், நவீன் திஸாநாயக்க ஆகியோரைப் பார்த்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என சிங்கள, ஆங்கில ஊடகங்கள் தெரிவித்துள்ளன. காலை இழுப்போரும், சர்வதேச சமூகத்திடம் கோள் சொல்பவர்களும் அமைச்சரவையில் அங்கம் வகிக்க வேண்டியதில்லை எனவும் இதன் போது ஜனாதிபதி மஹிந்த கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. தாம் பதவி விலக்குவதற்கு முன்னதாக தாங்களாகவே அமைச்சர்
பதவியிலிருந்து விலகிக் கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாட்டில் இடம்பெறும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தன்னைச் சந்திக்கும் சர்வதேச சமூகப் பிரதிநிதிகளிடம் தெரிவித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அண்மையில் பௌத்த தீவிரவாத அமைப்பான பொதுபல சேனா அமைச்சர் ஹக்கீம்மை அரசிலிருந்து உடனடியாக ஜனாதிபதி வெளியேற்றவேண்டும் என வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ)



விமானப் படைத்தளபதி எயார் மார்ஷல் குணதிலக்க அண்மையில் மேற்கொண்ட சீனப் பயணத்தின் போது அந்த நாட்டு இராணுவ ஆளணித் தலைவர் ஜெனரல் மஷியோ ஷெயினை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளின் இராணுவங்களுக்கிடையில் நல்லுறவை மேம்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடினர். இரு பிரதானிகளும் இந்தச் சந்திப்பின்போது நினைவுச்சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர். (ஓ)

## வெளியேறுமாறு தன்னிடம் ஜனாதிபதி கூறவில்லையாம்

### மறுக்கிறார் அமைச்சர் நவீன்

"ஜனாதிபதித் தேர்தலில் கருஜய சூரிய பொதுவேட்பாளராகப் போட்டி யிட்டால் அவருக்காக வேலை செய்ய அமைச்சுப் பொறுப்பில் இருந்து என்னை விடுவிக்கத் தயார் என்றே ஜனாதிபதி கூறினார்" -
இவ்வாறு தெரிவித்துள்ளார். பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச் சர் நவீன் திஸநாயக்க.
நவீன் திஸநாயக்கவை அமைச்சரவையிலிருந்து வெளியேறுமாறும் இல்லையேல் தாம் வெளியேற்றுவார் என்றும் ஜனாதிபதி மஹிந்த உத்தரவிட்டார் என்று சிங்கள, ஆங்கில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இது குறித்து கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் கருத்து தெரிவித்த நவீன், தன்னை வெளியேறுமாறு ஜனாதிபதி கூறினார் என்பது திரிபுபடுத்தப்பட்ட தகவல் என்று மறுத்துள்ளார்.



நவீன் திஸநாயக்க


"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவக் குழுவின் தலைவர் கருஜெயசூரிய பொது வேட்பாளராக போட்டியிடப் போகிறார் என்று தகவல்கள் வெளியாகின. இதனை அறிந்த ஜனாதிபதி அவ்வாறு கருஜயசூரிய ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டால் அவருக்காக வேலை செய்ய என்னை விடுவிக்கத் தயார்" என்றே கூறினார் என்று அமைச்சர் கூறியுள்ளார்.
நவீன் திஸநாயக்க கருஜயசூரியவின் மகளையே திருமணம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## எரிபொருள் சுத்திகரிப்புப் பணி சப்புகஸ்கந்தையில் தாமதம்

கொழும்பு, ஜூலை 22
சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்திருந்த போதும் இதுவரை எந்த வித உற்பத்தி பணிகளும் ஆரம்பிக்கப்பட வில்லை என குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.
கனியவள கூட்டுத்தாபனத்தின் தேசிய சங்கத்தின் பொது செயலாளர் ஆனந்த பாலித்த இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், தற்போது மூன்று கப்பல்கள் எரிபொருளை இறக்குமதி செய்யும் நோக்கில் தரித்திருப்பதாகத் தெரிவித்தார்.
மேலும், ஒரு கப்பல் எதிர்வரும் நாள்களில் இலங்கைக்கு வரவுள்ளது. சுத்திகரிப்பை மேற்கொள்ள முடியாமல் பெருமளவு மசகு எண்ணெய் இருப்பில் உள்ளதுடன், இறக்குமதி செய்து கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.
இந்தநிலையில் நான்கு தினங்களில் சுத்திகரிப்பை மேற்கொள்ள முடியும் என அதிகாரிகள் தெரிவித்த போதும், எந்த வித பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றார்அவர்.
இந்த குற்றச்சாட்டு தொடர்பில் கனியவளத்துறை கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவர் எஸ். அமரசேகர கூறியிருப்பதாவது:-
நிறுத்திவைக்கப்பட்டிருந்த சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கிரமமாக எரிபொருள் சுத்திகரிப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன- என்றார். (ஓ)

## விஷ இரசாயனம் கலந்திருந்த 123 தொன் பால்மா அழிப்பு

கொழும்பு, ஜூலை 22
எந்த விதத்திலும் மனிதப் பாவனைக்கு உதவாத அளவுக்கு டீ.சீ.டி. என்ற இரசாயனம் கலந்திருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள 123 தொன் பால்மா அழிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.
நிறுவனமொன்றுக்குச் சொந்தமான அந்த பால்மா தொகைகள் வர்த்தகச் சந்தையில் இருந்து மீளச் சேகரிக்கப்பட்டு சீதுவை பிரதேசத்தில் உள்ள



பால்மா

களஞ்சியமொன்றில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்ததோடு பின்னர் சீதுவை பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உத்தரவின் கீழ் அந்தப் பால்மாத் தொகை அழிக்கப்பட்டதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமான (பொது சுகாதாரம்) மருத்துவர் சரத் அமுனுகம கொழும்பின் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.
விஷ இரசாயனப் பொருள்கள் அடங்கியுள்ள பொருள்களை அழித்துவிடும் முறைமையின் கீழ் ஹோல்சிம் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மேற்படி பால்மா அழிக்கப்பட்டதாகவும் அமுனுகம தெரிவித்துள்ளார். (ஓ-22)



## செவ்வாய்க் கிரகத்துக்கு செல்லும் அமெரிக்க தம்பதி

விஞ்ஞானிகளைத் தவிர மற்றவர்களுக்கு எட்டாக்கனியாக விளங்கி வந்த விண்வெளிப் பயணம், தற்போது பெரும் செல்வந்தர்களுக்குக் கைகூடும் நிலையை எட்டியுள்ளது. அதன்படி அடுத்த சில ஆண்டுகளில் ஏராளமானோரை விண்வெளிக்கு அழைத்து செல்லும் வகையில், உலக அளவில் பல தனியார் நிறுவனங்கள் விண்வெளிச் சுற்றுலாவுக்கு திட்டமிட்டு வருகின்றன.

இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக அமெரிக்காவின் அரிசோனாவை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் தனியார் விண்வெளி நிறுவனம் ஒன்று, 2021 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்துக்கு ஆள்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த டேபர் மெக்கல்லம் மற்றும் அவரது மனைவி ஜேன் பாய்ன்டர் என்ற தம்பதியர், செவ்வாய் பயணத்துக்காக அந்த தனியார் நிறுவனத்திடம் பதிவு செய்துள்ளனர். இவர்கள் செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி பறந்துவிட்டு திரும்புவார்கள். இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வரும் நிலையில், இந்தத் திட்டத்துக்கு அமெரிக்க அரசின் ஒப்புதலுக்காகவும், நிதி ஒதுக்கீட்டுக்காகவும் தற்போது இந்தத் தம்பதியர் காத்திருக்கின்றனர்.



## இதுதான் உலகின் மிகப்பெரிய இராட்சதப் பயணிகள் விமானம்




எயார் பஸ் ஏ380 (Airbus A380) என்று அழைக்கப்படும் இந்த விமானம் இரண்டு மாடி (அடுக்குகள்), அகன்ற உட்கட்டமைப்பு, 4 எஞ்சின்கள் என்று எல்லாமே பிரமாண்டமானதுதான். 27.04.2005 அன்று உருவாக்கப்பட்ட இந்த விமானத்தை 2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதன் முதலில் வர்த்தக நோக்கில் சிங்கப்பூர் எயார் லைன்ஸ் விமானம் சேவையில் ஈடு படுத்தியது. இந்த விமானமானது 414.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறு மதியைக் கொண்டது.

## விமானத்தில் மோதலில் ஈடுபட்ட ஸ்ருதிஹாசன்

தந்தை கமல்ஹாசனைப் போன்று சர்ச்சையில் சிக்குவதில் மகளான ஸ்ருதிஹாசனும் இணைந்துள்ளார்.


ஸ்ருதிஹாசன் என்றாலே சமீப காலமாக சர்ச்சை என்று தான் அர்த்தம் போல உள்ளது.

அண்மையில் சென்னையில் உள்ள பிரபல வர்த்தக நிலையக் கடைக்காரரிடம் சண்டையிட்டார்.

தற்போது மறுபடியும் ஒரு பிரச்சினையில் சிக்கியுள்ளார் ஸ்ருதி.

பிலிம் பேர் விருது வழங்கும் விழாவுக்காகக் காரைக்குடியில் இருந்து சென்னைக்குச் செல்லும் போது, விருது விழாவில் ஆடும் நடனத்துக்கு விமானத்தில் ஒத்திகை பார்த்து வந்தார். இது சக பயணிகளுக்கு மிகவும் தொந்தரவாக இருக்க, அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். அவரும் அவர்களுடன் சண்டை போட்டதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## செவ்வாய்க் கிரகத்தில் இரும்பிலான விண்கற்கள்



சிவப்புக் கிரகம் என்று வர்ணிக்கப்படும் செவ்வாய்க்கிரகத்தில் இரும்பிலான விண்கற்கள் காணப்படுகின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. செவ்வாய்க்கிரகத்தில் ஆய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் செய்மதி இது தொடர்பான புகைப்படங்களைப் பதிவு செய்திருப்பதாக நாசா விண்வெளி ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

7 அடி அகலமான இரும்பிலான விண்கற்களே இவ்வாறு புகைப்படத்தில் பதிவாகியுள்ளன. இந்தக் கண்டுபிடிப்பானது செவ்வாய்க்கிரகம் தொடர்பான ஆய்வுகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

செவ்வாய்க்கிரகம் தொடர்பாக ஆராய்வதற்கு அனுப்பப்பட்ட கியூரியோசிட்டி ரோவர் கருவி இரண்டு வருடங்களின் பின்னர் இந்த இரும்பு விண்கற்களைக் கண்டு பிடித்துள்ளது. இவற்றை 'லெபனான்' என்று அழைப்பதாக விண்வெளி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த விண்கற்கள் துவாரங்களைக் கொண்டதாகவும் முன்னர் செவ்வாய்க்கிரகத்துக்கு இதற்கு முன்னர் அனுப்பப்பட்ட ரோவர் கருவிகள் மூலம் பிடிக்கப்பட்ட படங்களைவிட வித்தியாசமானதாக இந்த இரும்பு விண்கற்கள் காணப்படுவதாக நாஸா தெரிவித்துள்ளது. பூமியில் இவ்வாறான இரும்பு விண்கற்கள் காணப்படுவதில்லை என்றும் கற்களினாலான விண் கற்களைவிட இவை மிகவும் அரியவை என்றும் நாஸா குறிப்பிடுகிறது.



## பரிஸில் உருவாகிய கடற்கரை

பரிஸ் கடற்கரையின் 13ஆவது வருட கால அட்டவணை சனிக்கிழமையுடன் ஆரம்பமாகின்றது. இதற்கானஆரம்ப வேலைகள் வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பெரும் பகுதியில் 500 தொன் கடற்கரை மணல் கொண்டுவரப்பட்டு சுமார்ஒரு மாத காலத்துக்கான கடற்கரை உருவாக்கப் பட்டுள்ளது. இங்கு சூரியக் குளிப்புக்காக 550 இடங்களும் 200 மேசை களும் 800 கதிரைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்தோடு 450 நிழற்குடைகளும் 50 ஈச்சை பனை போன்ற மரங்களும் 80 மரங்களும் அங்கு ஒரு உண்மையான கடற்கரைப் பகுதியின் உணர்வை உருவாக்கும் நோக்கில் நிறுவப்பட்டுள்ளது.

பொழுது போக்குகள் :

இந்தக் கடற்கரை 2014 இல் 6 உணவகங்களும் 4 குளிர்களி விற்பனை நிலையங்களும் இரண்டு உணவகங்களும் திறக்கப்பட உள்ளன. அத்துடன் நீர்க் கள விளையாட்டுக்களும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. காலால் செலுத்தக் கூடிய மிதியுந்துப் படகுகள் 20, 40 நீளமான துடுப்புப் படகுகள், மற்றும் 5 பாய்ப் படகுகளும் மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளன.

ஆளணி:

சுமார் 360 பேர் நீர் மற்றும் கடற்கரைப் பாதுகாப்புப்பணிகளில் ஈடுபடுவார்கள். அவர்கள் உல்லாசப் பயணிகளின் .பாதுகாப்பையும் உறுதி செய்வார்கள். மொத்தமாகச் சிறப்புப் பிரிவினரின் 54.270 மணி நேரக் கண்காணிப்பும் உறுதி செய்யப்பட் டுள்ளது. அத்துடன் மேற்குறிப்பிட்ட மூன்று தளங்களிலும் 60 வழிகாட்டிகள் உங்களின் உதவிக்காகப் பணிய மர்த்தப்படுகின்றனர்.

# தொழிற்பயிற்சிக்குக் கைகொடுத்து உதவுகின்றது நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ்




கடந்த 11ஆம் திகதி இலங்கையின் முதற்தர மூலிகை அழகுசாதன உற்பத்தி நிறுவனமான நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ், வர்த்தக நடவடிக்கைகளுக்கு அப்பால் பல்வேறு சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி, நாட்டின் அபிவிருத்திக்கும் தமது பங்களிப்பை வழங்குகின்றது.

இளைஞர் யுவதிகள் தமது திறமைகளை வெளிக்காட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு செயற்றிட்டங்களுக்கு நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றமை விசேட அம்சமாகும்.

அதன்படி, இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை நாடு முழுவதிலும் நடத்தி வரும் அழகுக்கலை பாடநெறிகளின் செய்முறைப் பயிற்சிகளுக்குத் தேவையான அழகுசாதனப் பொருள்களை நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனமே கடந்த பல ஆண்டுகளாக வழங்கி வருகின்றது. ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் தமது திறன்களை மேம்படுத்தி, நிபுணத்துவம் மிக்கவர்களாக வியாபார உலகில் கால்பதிப்பதற்கு நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனமும், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையும் உதவிகளை வழங்கியுள்ளன.

இந்தச் சமூக மேம்பாட்டுத் திட்டத்தை தொடர்ச்சியாக 10ஆவது தடவையாகவும் முன்னெடுப்பதற்கு இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையும் நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனமும் இம்முறையும் கைகோர்த்துள்ளன.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் நாராஹேன்பிட்டிய விலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் அலுவலகத்தில் அதன் தலைவர் கேர்ணல். எஸ். ஆர்.பீ.ரத்நாயக்க, நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் சமந்த குமாரசிங்க ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.

தேசத்தின் மேம்பாட்டுக்காக இத்தகைய சமூக சேவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைத்து உள்ளூர் நிறுவனங்களினதும் பொறுப்பாகும் என்பதை உறுதியாக நம்பும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம், 'இலங்கையர்களால் சாதிக்க முடியும்' என்ற கூற்றை நிறைவேற்றிக் காட்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டு இலங்கையில் தயாரிக்கப்படும் சர்வதேச இயற்கை அழகுசாதன வியாபார நாமமாக தம்மை நிலைநிறுத்திக் கொள்வதே இந்த நிறுவனத்தின் நோக்கமாகும். அதற்கமைய இலங்கையின் முதல்தர மூலிகை அழகுசாதனப் பொருள்களைத் தயாரிக்கும் நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனம் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தம்மை ஏற்கனவே பதிவு செய்துள்ளது.

ஐரோப்பாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜி.எம்.பி. மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஐ.எஸ்.ஓ. 9001 மற்றும் ஐ.எஸ்.ஓ. 14001 ஆகிய தரச்சான்றிதழின் கீழ் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் உற்பத்திகளை மேற்கொள்கின்றது. (கு)

# கோரல் புறொப்பட்டி டெவலொப்பர்ஸ் 11 ஆண்டுகளாக கொழும்பில் தனித்துவம்



கோரல் புறொப்பட்டி டெவலொப்பர்ஸ் லிமிற்றெட் நிறுவனமானது இலங்கையின் தலைநகரானகொழும்பில் கடந்த 11 ஆண்டுகளாக தனக்கென ஒரு தனித்துவம்மிக்க முத்திரையை நிறுத்தி வருகின்றது. தனது கிளைத் தாபனங் கோரல் கென்ஸ்ரக்ஷன், கோறல் வோட்டர், லார்க்கோ ஓட்டோ மொபைல், வெற் வேள்ட் ஆகியவற்றை தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு கோரல் ஹோல்டிங்ஸ் எனும் குழுமமாக புத்தாண்டில் கால் பதிக்கின்றது.

அனைத்து வசதிகளும் பொருந்திய சர்வதேச தரம் வாய்ந்த எட்டு தொடர் மாடிகளை கொழும்பின் வெள்ளவத்தை மற்றும் தெகிவளைப் பகுதிகளில் நிர்மாணித்த இந்த நிறுவனம் தனது மேம்பட்ட தரத்தினாலும் விற்பனைக்குப் பிந்திய சேவையினாலும் பலரினது மனத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளது. மேலும் இரண்டு இடங்களில் தனது புது தொடர்மாடிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ள இந்த நிறுவனம் தனது வாடிக்கையாளரின் விருப்பிற்கேற்றவாறுதொடர் மாடிகளை வடிவமைப்பதிலும், நிர்மாணிப்பதிலும் முக்கிய கவனம் செலுத்துகின்றது.

இது தவிர தனித்துவமான கட்டடங்கள் தனியார் மனைகள் போன்றவற்றை நிர்மாணிப்பதில் ஈடுபட்டு வருகின்றது. அதுமட்டுமன்றி புத்தாண்டில் இலங்கையின் பல பகுதிகளிலும் தனது கட்டட நிர்மாணத் துறையை விருத்தி செய்ய உள்ளமை குறிப்பிடத்தக்கது..

நிர்மாணப்பணியில் நிகரற்றஅனுபவம்; நிறைந்த டாக்டர் பிரபாகரன் மற்றும் இதே துறையில் இணையற்ற வல்லமை மிகுந்த பொறியியலாளர் வசீகரன் ஆகியோரின் அதியற்புதத் தலைமைத்துவத்தில் இந்தத் தாபனம் தனது தரம் தாழாது தக்கவைத்திருப்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

கோரல் புறொப்பட்டி டெவலொப்பர்ஸ் லிமிற்றெட் தாய் நிறுவனத்தின் செயற்பாடுகள் சிறந்தோங்கி பல்கிப்பெருகி கோரல் வோட்டர்இலார்க்கோ ஓட்டோ மொபைல், கோரல் கொன்ஸ்ரக்ஷன், வெற் வேள்ட் ஆகிய கிளைத் தாபனங்களாக மலர்ச்சி பெற்று வளர்ச்சியுற்று வருவது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

வாடிக்கையாளரின் வசதிகருதி அவர்களின் கோரிக்கையைக் கருத்திலே கொண்டு அவரவர் விருப்புக்கேற்ப உள்ளம் நிறைந்த இல்லங்களை உருவாக்குவதும் மனம் கவர்ந்த மனைகளை ஆக்குவதும் இந்த நிறுவனத்தின் நிலையான கொள்கையாகும். அவ்வாறே வதிவோரின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இலகு தவணைக் கட்டண முறையிலே கொடுப்பனவை அறவிடுவதும் அதன் நிரந்தரக் குறிக்கோளாகும். 2003 இல் கோரல் புறொப்பட்டி டெவலொப்பர்ஸ் லிமிற்றெட் எனும் பெயருடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்த இந்த நிறுவனம் தனது முதலாவது தொடர்மாடி மனையினை 5 மாடிக்கட்டடமாக கோரல் கோட் எனும் பெயரில்வெள்ளவத்தை இல. 03 முதலாவது சப்பல் வீதியில் ஸ்தாபித்தது. அதனைத் தொடர்ந்து கோரல் ரவர் எனும் பெயரில் வெள்ளவத்தை இல. 281ஆவது சப்பல் வீதியில் ஸ்தாபித்தது கோரல் ரெஸிடன்ஸ் எனும் பெயருடன் இல.1837ஆவது ஒழுங்கை வெள்ளவத்தையில் மூன்றாவது தொடர் மாடிக்கட்டடத்தையும் நிர்மாணித்து கட்டடத் துறையில் தனது பெயரினை மிளிரச் செய்தது. 2009 இல் இல. 03 பெட்ரிக்கா வீதி, வெள்ளவத்தையில் கோரல் கிங் கோட் எனும் பெயருடன் கட்டியெழுப்பிய ஒன்பது தொடர்மனைத் தொகுதியானது இந்த நிறுவன வரலாற்றின் மைல்கல் என்று குறிப்பிடலாம். அதனைத் தொடர்ந்து கோரல் வேவ் ரெசிடன்சிஸ் எனும் ஐந்தடுக்கு தொடர் மாடிக் கட்டடத்தை தெகிவளைவின்சர் வீதியில் பூர்த்தி செய்து தற்போது குடி புக கையளித்துள்ளது. தற்போது கோரல் காஸ்ரில் எனும் பெயருடன் இல. 38 ராஜசிங்க வீதி, வெள்ளவத்தையில் 8 மாடிகளுடன் சகல வசதி களுடனான 48 தொடர்மாடி மனைகளை நிறுவிக் கொண்டுள்ளது. (கு)

# தனது விற்பனைப் பிரிவு ஊழியர்களுக்கு ரப்லெட் வழங்கியுள்ள செலிங்கோ லைப்

வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் தனது முயற்சியின் ஒரு அங்கமாக செலிங்கோ லைப் அதன் விற்பனை பிரிவு ஊழியர்களுக்கு நவீன ரப்லெட் கணினிகளை வழங்கத் தொடங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக அண்மையில் 173 விற்பனை அதிகாரிகளுக்கு செலிங்கோ லைப் ரப்லெட் கணினிகளை வழங்கியது. அடுத்த ஓரிரு ஆண்டுகளுக்குள் தனது விற்பனை அதிகாரிகள் நான்



காயிரம் பேருக்கு ரப்லெட் கணினிகளை வழங்க உத்தேசித்துள்ளதாக கம்பனி அறிவித்துள்ளது.

இந்தக் கணினிகளைப் பாவித்து விற்பனை அதிகாரிகள் வாடிக்கையாளர்களுக்கு கணினி திரை விளக்கம் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் என்பனவற்றைக் காண்பித்து தமது சேவையை சிறப்பாக வழங்க முடியும் என்று கம்பனி தெரிவித்துள்ளது.

விற்பனை அதிகாரிகள் தமது விளக்கங்களுக்கு ஏற்ற மென்பொருள்களையும், பிரயோக மென்பொருள்களையும் இந்தக் கணினி களில் கொண்டிருப்பதோடு கம்பனியின் இணையத் தொடர்பும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும். எந்தப் பகுதியில்இருந்தாலும்கம்பனியின் இணைய வழி சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். காப்புறுதிக் கொள்கை மட்ட நன்மைகள்.தமது குழுவின் வர்த்தக ரீதியான புள்ளி விவரங்களை அந்தந்த பிரிவு தலைவர்கள் மற்றும் கிளைத் தலை வர்கள் பார்த்து அவற்றை மதிப்பீடு செய்து கொள்ளக் கூடிய வசதி, வாடிக்கையாளர்களுக்கு வாழ்த்துக்களை அனுப்பும் வசதி, தனிப்பட்ட மற்றும் வர்த்தக புள்ளி விவரங்களை அறிந்து கொள்ளும் வசதி, வர்த்தக இலக்கு உண்மையான வர்த்தகம் என்பனவற்றுக்கு இடையிலான வித்தியாசம், கொடுப்பனவுகள் பற்றிய நினைவூட்டல்களை வழங்கல் மற்றும் அறிவிப்புக்களை வழங்கல் என்பனவும் இதன் மூலம் சாத்தியமாகும். (கு)



இலங்கை வங்கியின் நெல்லியடி கிளையினால் 18 பிளஸ் கணக்கைப் பேணிவரும் வாடிக்கையாளர் செல்வி.க.மாதுமையின் திருமண தினத்தன்று கிளையின் உத்தியோகத்தர் சி.முரளிகரனால் தங்கநாணயம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.(கு)


## மின்சாரத்தை இதுவரை காணாத குஞ்சுக்குளம்

துணுக்காய், ஜூலை 22
முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யோகபுரம் மத்தி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குஞ்சுக்குளம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்காததால் கிராம மக்கள் இருளில் தமது பொழுதைக் கழித்து வருகின்றனர்.

மேற்படி குஞ்சுக்குளம் கிராமத்தில் சுமார் 35 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். போர்ச்சூழலால் இடம்பெயர்ந்து துணுக்காய்ப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த இடம்பெயர்ந்த இந்த மக்களுக்கு இதுவரையும் மின்சாரம் வழங்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் விவசாயிகள் அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் செறிந்து வசிக்கின்றனர். இவர்கள் தமக்கு மின்சாரத்தை வழங்குமாறு பலரிடமும் முறைப்பாடு தெரிவித்த போதும் எதுவுமே இடம்பெறவில்லை.

எனவே தமக்கு மின்சாரத்தை உடனடியாக வழங்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-415)



கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் தற்காலிகக் கொட்டகையின் கீழ் இடவசதிக் குறைவுடன் கல்வி பயிலும் மாணவர்கள். (க-18)

## புனரமைக்கப்பட்டு வருகின்றது பள்ளிமுனை வி. மைதானம்

மன்னார், ஜூலை 22
மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தைப் புனரமைக்கும் வேலைத்திட்டத்தை மன்னார் நகர சபை முன்னெடுத்து வருவதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாசன் தெரிவித்தார்.

குறித்த விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்துத் தருமாறு மன்னார் நகரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

குறித்த கோரிக்கைக்கு அமைவாக இந்த விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளது. இந்த நிலையில் நகர அபிவிருத்தி அதிகார சபையும், மன்னார் நகர சபையும் இணைந்து நகர சபைக்குட்பட்ட இந்த விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (க-56)

## இடர்களை எதிர்கொள்ளும் மகிழங்குளம் கிராம மக்கள்

### அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாததால்

வவுனியா, ஜூலை 22
மகிழங்குளம் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி தினமும் பல் வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



கோப்புப்படம்

வவுனியா நகரில் 19 கிலோ மீற்றருக்கு இந்தக் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராம மக்கள் கடந்த காலங்களில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து சென்று மீளவும் இந்தக் கிராமத்தில் குடியமர்ந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ளன.

இதுவரை எந்தவிதமான வீட்டுத் திட்டங்களும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை.

பல தடவைகள் வீட்டுத் திட்டங்களை வழங்குமாறு கோரிப் போராட்டங்களிலும் இந்த மக்கள்ஈடுபட்டனர். ஆனால் எந்த வித பயனும் கிட்டவில்லை.

இவர்களது வசிப்பிடங்களுக்குச் செல்லும் வீதிகளும் மிகவும் மோசமான நிலையில் காட்சியளிக்கின்றன.

இங்குள்ள கல்குவாரிக்கு பெருமளவுடிப்பர் வாகனங்கள் வந்து செல்வதால் வீதிகள் மேலும் சேதமடைந்து வருகின்றன.

மேலும் மின்சாரம் இந்தக் கிராமத்தை எட்டிப் பார்க்காததால் கிராமத்தின் பெரும் பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

மேலும் இங்குள்ள மாணவர்கள் நிம்மதியாகக் கல்வி பயிலக் கூடிய வகையில் அடிப்படை வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே தமது அவல நிலையை உணர்ந்து தமக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

கிளிநொச்சி, ஜூலை 22
கிளிநொச்சி ஐயனார்புரம் அ.த.க. பாடசாலையில் யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடன் 56 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பாடசாலையில் நிலவி வந்த வகுப்பறைகளுக்கான கட்டட வசதிக் குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு தற்போது இந்தப் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. சேவாலங்கா நிறுவனத்தால் குறித்த பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான கட்டுமானப் பணிகள் கடந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-55)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி தாராளம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதாக முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் எ.ரகுபதி தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று சமூகத்தில் காணப்படும் குடும்ப வன்முறைகளின் பின்னணியில் கசிப்பு உள்ளதை எவரும் மறுக்க முடியாது. முல்லைத்தீவு மருத்துவமனையில் குடும்ப வன்முறை காரணமாக பெண்களும் சிறுவர்களும் தமது பாதிப்புக்களுக்கு கசிப்பை அருந்தும் குடும்பத் தலைவர்களே காரணமெனத் தெரிவித்துள்ளனர்.

எனவே சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரித்தார். (க-18)

## மன்னார் வனவிலங்குப் பகுதிக்குள் சட்டவிரோதச் செயற்பாடுகள்

### குற்றவாளிகளுக்கு நீதிமன்றினால் தண்டம் விதிப்பு

மன்னார் வன விலங்கு பாதுகாப்புப் பகுதிக்குள் சட்ட விரோதமாக மரம் அரிந்தவர்கள், வாகனத்தில் அதை ஏற்றிச் சென்றவர்கள் மற்றும் வேட்டையாடியவர்கள் ஆகியோருக்கு நீதிமன்றினால் தண்டம் விதிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை மன்னார் வனவிலங்கு பாதுகாப்பு பகுதிக்குள் திடீர் சோதனையிட்ட வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் மன்னார் அரிவியாறு பகுதிக்குள் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்ட பத்துப் பேரைக் கைது செய்து மன்னார் நீதிமன்றில் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி செல்வி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் முன்னிலைப் படுத்தினர்.

சுமார் 19 ஆயிரத்து 650 ரூபா பெறுமதியான பாலை மரங்களை அரிவியாற்றுப் பகுதியில் வாளால் அரிந்து கொண்டிருந்த மூன்று பேர் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து மூவருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மேலும் மூவர் இதேபோன்று இதே இடத்தில் பாலைமரங்களை அரிந்து கொண்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். இவர்களும் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. ஆனால் இவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை முழுமையாகச் செலுத்த முடியாது எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து இவர்கள் தலா 5 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் தண்டப் பணத்தை இரண்டு தடவைகளில் செலுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும் ஒருவர் இதே அரிவியாற்றுப் பகுதியில் இடியன் துவக்கு மூலம் வேட்டையாடியபோது கைது செய்யப்பட்டார். இவரும் தனது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இவருக்கு 2,500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அடுத்த மூன்று நபர்கள் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 106 ரூபா பெறுமதியான மரங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்றபோது கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்புடுத்தப்பட்டனர். இவர்கள் தலா 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க)

> சுமார் 19 ஆயிரத்து 650 ரூபா பெறுமதியான பாலை மரங்களை அரிவியாற்றுப் பகுதியில் வாளால் அரிந்து கொண்டிருந்த மூன்று பேர் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து மூவருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

## குறைந்த அளவில் நெற்செய்கை

முல்லைத்தீவு, ஜூலை 22
புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இந்த முறை 400 ஏக்கரில் மட்டுமே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வறட்சி காரணமாக குளங்களில் நீர் குறைவாக இருந்ததால் சிறுபோக நெற்செய்கை மிகவும் குறைந்த நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் சிறுபோகத்தின் போது 1,500 ஏக்கரில் நெற் செய்கை மேற்கொள்ளப்படுவது வழமையாகும். இங்குள்ள முக்கிய குளமான உடையார்கட்டுக் குளத்தின் நீர் மட்டம் மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## நெற்காணிகளை மேட்டுக்காணிகளாக மாற்றுவோருக்கு எதிராக நடவடிக்கை

### கூறுகிறார் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்

கிளிநொச்சி, ஜூலை 22
கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்காணிகளை மண் இட்டு நிரப்பி மேட்டுக்காணிகளாக மாற்றுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.தயாரூபன் தெரிவித்துள்ளார்.



கோப்புப்படம்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏராளமான வயல் நிலங்கள் தினமும் சட்ட விரோதமான முறையில் மண் இடப்பட்டு மேட்டுக்காணிகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

இதனால் நெற் செய்கைக் காணிகளின் அளவு குறைந்து வருவதுடன் நெல் உற்பத்தியும் பாதிக்கப்படும் அபாய நிலையும் தோன்றியுள்ளது.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் விவசாய நெற் காணிகள் மண் இடப்பட்டு மேட்டுக் காணிகளாக மாற்றப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வயற் காணிகளை மேட்டுக் காணிகளாக மாற்றுபவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார். (க-55)

# சுங்கத் திணைக்கள அலுவலர்களுக்கான 5 நாள் செயலமர்வு நேற்று ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூலை 22
இலங்கை சுங்கத் திணைக்களமும் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமை அலுவலகமும் இணைந்து நடத்தும் இலங்கை சுங்கத் திணைக்கள அலுவலர்களுக்கான சுய முயற்சி மேம்பாட்டு அபிவிருத்தி தொடர்பான 5 நாள் செயலமர்வு நேற்றுக் காலை 8.15 மணிக்கு காங்கேசன்துறையில் அமைந்துள்ள 'தல்செவன' உல்லாச விடுதியில் ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதயபெரேராவும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.இராஜேந்திரன் உட்பட சுங்கத் திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

செயலமர்வில் இலங்கை சுங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த 33 அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஏற்கனவே இரு தடவைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தப் பயிற்சி நெறிகள் நடைபெற்றுள்ளன.

இது மூன்றாவது தொடர் பயிற்சி என்பது குறிப்பிடத்தக்கது. (வ-86)



பிரதி சுங்க அலுவலர் எஸ். இராஜேந்திரன் மங்கல விளக்கேற்றுகிறார். அருகில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி.

## கரவெட்டியில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு

வடமராட்சி, ஜூலை 22
பருவ மழை இன்மையால் கரவெட்டிப் பிரதேசத்தில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குடிதண்ணீருக்காக அந்தப் பிரதேச மக்கள் நீண்டதூரம் அலைய வேண்டியுள்ளது.

கிழவிதோட்டம், யார்க்கரு, தல்லையப்புலம், கட்டைவேலி, புதுக்குளம், மத்தொனி, கவுந்தில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு குடிதண்ணீர் பெறுவதற்காக அலைகின்றனர்.

குறித்த கிராமங்களில் உள்ள ஒரு சில கிணறுகளிலே நல்ல தண்ணீர் உள்ளது. இந்தக் கிணறுகளிலிருந்து கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர். இருப்பினும் கடந்த கால பருவமழை இன்மையால் நல்ல தண்ணீர்க் கிணறுகளில் தண்ணீர் அடிக்கடி வற்றிவருகின்றது. இதன் காரணமாக தண்ணீர் ஊற்று எடுக்கும்வரை குடிதண்ணீரைப் பெற நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-173)

## கரவெட்டி கிழக்கில் திருட்டுச் சம்பவங்கள்



வடமராட்சி, ஜூலை 22
கரவெட்டி கிழக்குப் பகுதியில் இரவு நேரத் திருட்டுக்களால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இந்தப் பகுதியில் உள்ள யார்க்கருவை அண்டிய பகுதியில் வீடு ஒன்றில் இருந்து தண்ணீர் இறைக்கும் மோட்டர் இயந்திரம் ஒன்று இரவுவேளையில் திருடப்பட்டுள்ளது. இதே பகுதியில் உள்ள தல்லையப்புலம் வீரபத்திரகாளி அம்மன் கோயில் பராமரிப்பு வேலைகளைக் கவனிக்கவென இரவு வேளை தங்கியிருந்த வயோதிபரின் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் குறித்து நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்ததன் பேரில் திருட்டுச் சந்தேக நபர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது. (ஒ-173)

## ஆபத்தின் மத்தியில் நெடுந்தீவு மக்களின் படகுப் போக்குவரத்து

### குமுதினி மீண்டும் பழுதடைந்ததால்

யாழ்ப்பாணம், ஜூலை 22
கடந்த மூன்று தினங்களாக நெடுந்தீவுக்கான அரச படகு குமுதினி பழுதடைந்துள்ளது. இந்த நிலையில் கடல் கொந்தளிப்பும் கடும் காற்றின் மத்தியிலும் பயணிகளை ஏற்றுவதற்கு அனுமதி இல்லாத படகுகளிலேயே நெடுந்தீவு மக்கள் தமது பயணத்தைத் தொடர வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் குமுதினி பழுதடைந்து மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு ஒரு சில தினங்கள் சேவையில் இணைந்து தற்போது மீண்டும் பழுதடைந்துள்ளது. குமுதினி படகு அடிக்கடி பழுதடைவதால் நெடுந்தீவு கடல் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அந்தப் படகு 50 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. பெருந்தொகைப் பணத்தில் கட்டப்பட்ட வடதாரகை II துறைமுகத்தினுள் செல்ல முடியாத நிலையில் தற்போது காங்கேசன்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எமது மக்களின் பிரச்சினைகளை நன்கு தெரிந்துள்ள அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்கூட இந்த விடயத்தில் அசமந்தமாக உள்ளனர் என்று நெடுந்தீவு மக்கள் கூறுகின்றனர். (வ-7)

## துண்டி மயானத்தில் தங்குமடம்

கொழும்புத்துறை, ஜூலை 22
கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கான தங்குமடம், மயான பரிபாலன சபையால் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. முன்னர் இருந்த மடம் போர் நடவடிக்கையின் போது முற்றாக அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மயானத்தைச் சுற்றி மதில் கட்டப்பட்டு கடற்கரையோரமாக அந்தியேட்டி மடமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மயானத்தை கொழும்புத்துறை, கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி பகுதிகளைச் சேர்ந்த இந்து மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.



புனரமைக்கப்பட்ட மயான தங்குமடம்

பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர சபை என்பவற்றின் உதவியுடன் புனரமைப்பு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

## பாக்கு விலை உயர்வு

தென்மராட்சி, ஜூலை 22
பாக்கின் விலை அதிகரிப்பால் வர்த்தக நிலையங்களில் சீவல் வெற்றிலையின் விலையும் அதிகரித்துள்ளது.

கிலோ 300 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பாக்கின் விலை தற்போது 650 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதனைக் கொள்வனவு செய்து இயந்திரம் மூலம் வெட்டி விற்போர் வர்த்தக நிலையங்களுக்கு ஒரு கிலோ வெட்டுச் சீவல் 700 ரூபா தொடக்கம் 800 ரூபாவரை விநியோகிக்கின்றனர். இதனால் வர்த்தக நிலையங்களில் 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சீவல் வெற்றிலை 20 ரூபாவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்னிலங்கைப் பகுதியில் பெய்த கடும் மழை, பெருவெள்ளம் ஆகியவற்றினால் பாக்கு மரங்கள் (கமுகு) வீழ்ந்ததாலும், மரங்களிலிருந்து வீழ்ந்த பாக்குகள் வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றதாலும் பாக்கு விலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9)

## சபாவாசுதேவக் குருக்களுக்கு இவ்வாண்டுக்கான யாழ் விருது

யாழ்.மாநகர சபை சைவசமய விவகாரக் குழுவின் 2014ஆம் ஆண்டுக்கான 'யாழ் விருது' சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவரும், சித்தன்கேணி சிவன் கோயில் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ சபாவாசுதேவக் குருக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சைவ சமய விவகாரக் குழுவின் மகா சபையின் தீர்மானத்தின் பிரகாரம் சிவஸ்ரீ சபாவாசுதேவக்குருக்களுக்கு 'நல்லைக் குமரன்' மலர் வெளியீட்டு விழாவின்போது மேற்படி விருது வழங்கப்படவுள்ளது. நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## தார் வீதியாக மாற்றப்படும் சுவாமியார் உள்ளக வீதிகள்



தார் வீதியாக மாற்றும் பணிகள் மும்முரம்

கொழும்புத்துறை, ஜூலை 22
கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் இருந்து உட்செல்லும் உள்ளக வீதிகள் பலவும் தார் வீதியாக மாற்றப்பட்டு வருகின்றன.

சென்.ஜோசப் வீதியின் ஒரு பகுதி சுவாமியார் வீதியிலிருந்து வளன்புரத்துக்குச் செல்லும் உப வீதிகள் என்பன யாழ். மாநகர சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

அந்தப் பகுதியில் இருந்து வந்த இராணுவ முகாம் மூடப்பட்டு வீடுகள் கையளிக்கப்பட்டதை அடுத்து மீளக்குடியமர்ந்த மக்களின் வசதி கருதி குறித்த வீதிகள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-135)

## செயற்கைமுறை சினைப்படுத்தலுக்கு ஊக்குவிப்பு நிதி

அச்சுவேலி, ஜூலை 22
யாழ்.மாவட்டத்தில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் பசுக் கன்று ஊக்குவிப்பு உதவித் திட்டத்தில் 475 பயனாளிகள் இணைந்துள்ளனர். அவர்களுக்கு பசுக்கன்று வளர்ப்பதற்கு 10 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு உதவியாக வழங்கப்படுகின்றது.

பசுப்பால் உற்பத்தியை அதிகரித்தல், நல்லின பசுமாடுகளை உள்ளூரில் உற்பத்தி செய்தல் போன்ற வேலைத் திட்டத்தின் கீழ் செயற்கை முறைச்சினைப்படுத்தல் மூலம் பிறந்த பசுக் கன்றுகளுக்கு ஊக்குவிப்பு உதவியாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. நாம்பன் கன்றுகளுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுவது இல்லை. இந்த உதவி கடந்த வருடம் ஜூன் மாதத்தில் இருந்து வழங்கப்படுகின்றது.

பசுக்கன்று வளர்ப்பதற்கான ஊக்குவிப்பு உதவி கன்று பிறந்தவுடன் முதலாவது கட்டமும் வளர்நிலையில் இரண்டாம் மூன்றாம் கட்டங்களும் மேற்படி கன்று ஒரு வயது நிலையில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் முறையில் சினைப்படுத்தல் செய்யப்பட்ட பின்னர் நான்காவது கட்டமும் வழங்கப்படும்.

கடந்த வருடம் ஜூன் மாதம் பிறந்த பசுக் கன்றுகள் பூரண வளர்ச்சி அடைந்து சினைப்படுத்தப்பட்ட நிலையில் இறுதிக் கட்ட கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதி பெற்ற நிலையில் இறுதிக் கொடுப்பனவை பெறத் தொடங்கியுள்ளன.

பசுக் கன்று வளர்ப்பு ஊக்குவிப்பு உதவித் திட்டத்தில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் ஒருவருட காலத்தில் யாழ். மாவட்டத்தில் 475 பேர் இணைந்துள்ளனர்.

செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் ஈன்ற பசுக் கன்று தொடர்பான விவரத்தை கன்று பிறந்த உடனேயே பிரதேச கால்நடை வைத்திய அலுவலகத்தில் பதிவு செய்து அதற்கான பதிவு அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி பசுக்கன்றின் வளர்ச்சி நிலை பராமரிப்பு தொடர்பாக பிரதேச கால்நடை வைத்தியர் மற்றும் பிரதேச கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ஆகியோர் உரிய வேளை கண்காணிப்பு மேற்பார்வைகளை மேற்கொண்டு மாடு வளர்ப்போருக்கு அறிவுறுத்தல்களை வழங்குவர். அத்துடன் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-11)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முஸ்லிம்களுக்கான தருணம் இது

முஸ்லிம் இனம் அழிந்துகொண்டிருக்கின்றது எனவும், தமிழர்களிடமிருக்கும் போராட்டக் குணம் முஸ்லிம் மக்களிடம் இல்லையெனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹசனலி வெளியிட்டுள்ள கருத்தான்து, முஸ்லிம்கள் ஓரணியில் திரண்டு உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்ற கருத்தையே மறைமுகமாக வலியுறுத்தி நிற்கின்றது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34 ஆவது சிறப்பு மாநாடு நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே காலத்தின் கட்டாயத்தேவையை உணர்த்தும் வகையில் அவர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தலைவர்கள், தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர்.

குறிப்பாக முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக தம்புள்ளையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறை, கொடிபோல் பல இடங்களுக்கும் படர்ந்துசென்று இன்று கலவரமாக விஸ்வரூபமெடுத்து நிற்கின்றது. இந்நிலையில், பாதிக்கப்பட்ட அளுத்கம, பேருவளை, தர்கா நகர் ஆகிய பகுதிகளைக் கட்டியெழுப்பும் பணிகளை அரசு முன்னெடுத்தாலும், நாளை என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பொறிமுறை இன்னும் வகுக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.


அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் முஸ்லிம் தலைவர்கள் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்களா என்பது மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும். எனினும், அளுத்கம சம்பவத்துக்கு எதிராக முஸ்லிம் அமைப்புகளும் மக்களும் கடையடைப்பு போராட்டங்களை நடத்தி கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். முஸ்லிம் சமூகமும் அநீதிக்கு எதிராகப் போராடும் என்ற தகவல் இதன் மூலம் வழங்கப்பட்டது. மன்னர் காலத்திலும் நாட்டுக்காகப் போராடிய வரலாறு முஸ்லிம் சமூகத்துக்கு இருக்கின் றது என்பதை எவராலும் மறந்துவிடமுடியாது.

எனவே, மக்களிடம் போராட்டக்குணம் இருந்தாலும், 'பொறுமை காப்போம்' என்ற சமாளிப்புப் பொறிமுறையைப் பயன்படுத்தி அரசியல் நலன்களுக்காக முஸ்லிம் தலை வர்களே மக்களின் உரிமைப் போராட்டங்களை முடக்கு வதாக எழும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்க முடியாத வகையிலேயே அவர்களின் செயற்பாடுகளும் அமைந் துள்ளன. ஆகவே, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தீரவேண்டுமானால், அவர்களுக்கு உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டுமானால், முஸ்லிம் அரசியல் தலைமைகள் முதலில் ஓரணியில் திரள வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயத் தேவையாகும். அவ்வாறு திரண்டு முஸ்லிம் தேசிய கூட்டமைப்பொன்றை அமைத்து சமூகத்துக்காக குரல்கொடுத்தால் நாளைய வரலாறு முஸ்லிம் தலைவர்களை நிச்சயம் போற்றும் என்பது நிதர்சனம். இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக முஸ்லிம் கட்சி கள் ஊவா மாகாண சபைத் தேர்தலில் கூட்டாகக் களமிறங்கி பச்சைக் கொடி காட்ட வேண்டும் என்ற கருத்து முஸ்லிம் புத்திஜீவிகளி டமும் சிந்திக்கும் மக்களிடமும் நிலவுவதை நாடிபிடித்தறிந்து கொள்ள முடியும்

மாறாக, அரசியல் தேவைப்பாடுகளுக்காகச் சரணாகதி அரசியல் நடத்திக்கொண்டு, இலவுகாத்த கிளிபோல் முஸ் லிம் மக்களிடம் ஒற்றுமையில்லையென முஸ்லிம் தலை மைகள் ஒப்பாரி வைத்தால் அவர்களது வீழ்ச்சியை எவராலும் தடுக்க முடியாது போய்விடும். குறிப்பாக தமிழர் பிரச்சினை ஐ.நா. வரை செல்வதற்கு 30 வருடங்கள் ஆகின. எனினும், முஸ் லிம் மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு குரல் கொடுத்த தாலும், தமிழ்க் கட்சிகளும் அமைப்புகளும் முஸ்லிம்களுடன் இணைந்து குரல்கொடுத்ததாலும் அளுத்கம சம்பவம் மூன்று நாள்களுக்குள் ளேயே ஐ.நா.சபைவரை சென்றது. எனவே, 'ஒற்றுமை' என்ற ஆயுதத்துக்கு இருக்கும் பலத்தை உணர்ந்து தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஓரணியில் திரள வேண்டும். இதற்காகத் தமிழர் தரப்புடன் இணைந்து செயற்படுவதற்கு முஸ்லிம் அரசியல் வாதிகள் முன்வரவேண்டும் என்பது காலத்துக்கு அவசியமான கோரிக்கையாக இருக் கின்றது.

இதற்காக அரச கூட்டுக்குள் இருந்து முஸ்லிம் கட்சிகள் வெளியேறவேண்டிய அவசியமில்லை. அவ்வாறு அவர்கள் செய்யவும் மாட்டார்கள். காரணம், அரசுக்குள் இருப்பதால் தான் சமூகத்துக்காகக் குரல்கொடுக்க முடிகின்றது என்ற சமாளிப்பு பொறிமுறையை அவர்கள் தயாராகவே வைத்திருக்கின்றனர். ஆகவே, முஸ்லிம் கூட்டணியாக இருந்து அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் அதன் தாக்கம் காரமாக இருக்கும் என்பதுடன் பேரம் பேசும் சக்தியும் அதிகரிக்கப்படும். மாறாக தொடர்ந்தும் முஸ்லிம் தலைமைகள் தனிவழிப் பயணம் மேற்கொண் டால் அடக்கியாள் பவர்களுக்கே அது சாதகமாக அமையும் என்பதுடன், 'கஞ்சுக் கோப்பை' அரசியலால் முஸ்லிம்களை சமாளித்துவிடலாம் என்ற அதிகார வர்க்கத்தின் நினைப்பையும் நியாயப்படுத்துவதாக அமைந்துவிடும். எனவே, ஓரணியாகத் திரண்டு பலத்தை வெளிப்படுத்தினால், எவ்வளவு தான் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டாலும் முஸ்லிம் மக்களாலும் பீனிக்ஸ் பறவை போல் மீண்டெழுந்து போராட முடியும்.

# இஸ்ரேல், பாலஸ்தீனத்தில் என்னதான் நடக்கின்றது?



தி நியூயோர்க் ரைம்ஸ்,
தமிழில்- சாரி

இஸ்ரேலிய ராணுவம் காஸா பகுதியில் மீண்டும் ஊடுருவியதால் அப்பாவிப் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இப்போதும் கொல்லப்படும் சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இரு தரப்பிலிருந்தும் அரசியல்ரீதியிலான சாடல்கள் ஒரே மாதிரியாக ஒலிக்கின்றன. இரு தரப்பினருக்கும் பொதுவாக, தவறான கருத்துகள் சில உள்ளன.

**கருத்து1:**

இப்போது நடப்பது இஸ்ரேல் ராணுவத்துக்கும் ஹமாஸுக்கும் இடையிலான சண்டை அல்ல; நன்மைக்கும் - தீமைக்கும், சரியான கருத்துகளுக்கும் -தவறான கருத்துகளுக்கும் இடையிலான மோதலாகும். நம்மால் சும்மா இருக்கவும் முடியாது, சமரசம் செய்து வைக்கவும் முடியாது; வேறு வழியில்லை, எப்படியாவது நாம் செயல்பட்டே ஆக வேண்டும்.

நாம் நினைப்பதற்கு மாறாக, இரு தரப்பிலும் கணிசமாக நியாயம் இருக்கும் நிலையில் இந்த மோதல்கள் நடைபெறுகின்றன. இந்த மோதலால் பாதிக்கப்படுவது அப்பாவிக் குடிமக்கள் தான் என்பதையும், இரு தரப்பிலும் நியாயங்கள் இருப்பதைப் பார்க்க வேண்டும் என்பதையும் மறந்து, எதிர்த் தரப்பாரைத் தீயவர்களாகச் சித்திரிக்கும் போக்கு மட்டுமே இரு தரப்பிலும் தொடர்கிறது. இதனால், அடுத்தடுத்து ராணுவ ரீதியிலான மோதல்கள் அதிகரித்து, இருதரப்பினாலும் மக்களுக்குச் சொல்ல முடியாத துயரங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

ஹமாஸ் ஏவும் ஏவுகணைகள் எங்களைத் தாக்கக் கூடாது, எங்களை யாரும் கடத்தக் கூடாது, பயங்கரவாதிகள் எங்கள் மீது குண்டுகளை வீசக் கூடாது என்று கோரும் உரிமை இஸ்ரேலியர்களுக்கு நிச்சயம் இருக்கிறது. அதே வேளையில், பாலஸ்தீனர்கள் தங்களுக்கென்று தனி நாடு வைத்துக் கொள்வதற்கும், தங்களுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்து கொள்வதற்கும், தங்களுக்கு வேண்டிய தொழிலைச் செய்துகொள்ளவும், வன்முறைகளுக்கு ஆளாகாமல் சுதந்திரமாக வாழவும் -மற்றவர்களுக்குக் கீழே இரண்டாம்தரக் குடிமக்களாக ஒதுக்கப்படாமல் இருக்கவும் உரிமை இருக்கிறது.

இரு தரப்பிலும் ஏராளமான நல்லவர்கள் இருக்கின்றனர். தங்களுடைய் குழந்தைகளுக்கும் சமூகத்துக்கும் நன்மைகளை நாடுவோர்தான் அவர்கள். இரு தரப்பிலும் பகைமையை மூட்டுகிற, குறுகியகண்ணோட்டம்உள்ளதீவிரப்போக்கு உள்ளவர்களும் இருக்கின்றனர்.

இருதரப்பிலும் உள்ளவர்கள் நல்லவர்களே. அவரவர் நன்மைக்காகத்தான் போராடுகின்றனர் என்றால், அந்த இரு சமூகத்திலும் தீயவர்களே இல்லை என்று அர்த்தமாகிவிடாது. ஹமாஸ், இஸ்ரேலுக்கு எதிராக மட்டுமல்ல, தன்னுடைய மக்களுக்கு எதிராகவும் வன்முறையைத்தான் பயன்படுத்துகிறது. இஸ்ரேலியர்களுக்கும் கடும் ஆள்சேதம் ஏற்பட வேண்டும் என்று தாக்குதலை நடத்தும் ஹமாஸ், தங்கள் தரப்பிலும் ஆள்சேதம் அதிகம் ஏற்படுவது குறித்துக் கவலைப்படுவதில்லை. பாலஸ்தீன அரசைப் போல ஹமாஸ் இயக்கம் ஊழலில் திளைக்கவில்லை. ஆனால், தன்னை எதிர்ப்பவர்கள் பாலஸ்தீனர்களே ஆனாலும் கொடூரமாக அடக்குகிறது. ஹமாஸ் இயக்கத்துக்கு உள்ளூரில் அவ்வளவாக நல்ல பெயரும் ஆதரவும் கிடையாது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கல்லூரி வளாகங்களில் ஹமாஸுக்கு இருக்கும் ஆதரவு, காஸாவில் அந்த மக்களிடையே இருப்பதைவிட அதிகம்.

இஸ்ரேலைச் சேர்ந்த வலதுசாரித் தலைவர்கள், பாலஸ்தீன ஆணையத்தின் அதிபரும் இஸ்ரேலின் சிறந்த நண்பராக இருக்கக்கூடியவருமான முகம்மது அப்பாஸுக்கு அரசியல்ரீதியாகச் செல்வாக்கு இல்லாதபடிக்கு அவரை அவமதித்துப் புறக்கணிக்கின்றனர். பாலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேல் ஏற்படுத்தும் குடியிருப்புகள் அனைத்தும் பாலஸ்தீனத் தீவிரவாதிகளின் கைகளையே வலுப்படுத்துகின்றன.

**கருத்து2:**

திருப்பி அடித்தால்தான் நம்முடைய பலம் எதிரிக்குத் தெரிகிறது. எதிரி அடிக்கும்போது திருப்பி அடிக்காமல் என்ன செய்ய?

இஸ்ரேலியத் தலைவர்கள் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு முதல் அனைவருமே தங்களுடைய மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால், காஸாவை ஊடுருவுவதும், சுரங்கப் பாதைகளை வெடிகுண்டு வீசித் தகர்ப்பதும்தான் ஒரே வழியென்று நினைக்கின்றனர். அப்படிச் செய்யும்போது, அப்பாவி மக்களும் குழந்தைகளும் பெண்களும் இறப்பது வருத்தத்துக்குரிய விடயம்தான் என்றாலும், தவிர்க்க முடியாது என்று நினைக்கின்றனர்.

காஸாவில் உள்ளவர்களோ, நாம் ஏற்கனவே திறந்தவெளி சிறைச் சாலையில்தான் இருக்கிறோம். இஸ்ரேல் நம்முடைய நடமாட்டத்தைக்கூடக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. அதன் பொருளாதாரத் தடைகள் நம்மை மூச்சு முட்ட வைக்கின்றன. இங்கிருந்து சில ஏவுகணைகளை வீசுவதுதான் நாம் சுதந்திரம் பெறச் செய்யக்கூடிய ஒரு முயற்சி. அதில் சில இஸ்ரேலியக் குழந்தைகள் இறந்தால் துயரம்தான் - ஆனால், அதைப் போல நூறு மடங்கு பாலஸ்தீனக் குழந்தைகள் இறக்கின்றனவே என்று நினைக்கின்றனர்.

இந்தக் காட்சிகளை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். தங்களுக்கு எதிரான தாக்குதல்களை அடுத்து லெபனான் மீது 1982, 2006-இலும், காஸா மீது 2008-இலும் இஸ்ரேல் ஏற்கனவே படையெடுத்திருக்கிறது. ஒவ்வொரு முறையும் இஸ்ரேலிய வலதுசாரிகள் அதை வரவேற்று உற்சாகப்படுத்தினர். இந்தத் தாக்குதல்கள், சில தற்காலிக ராணுவ வெற்றிகளை மட்டுமே இஸ்ரேலுக்குத் தந்தனவே தவிர, அவற்றில் ஏராளமான அப்பாவிகள் உயிரிழந்தனர். வேறு எந்தப் பிரச்சினையையும் அவை தீர்த்துவிடவில்லை.

அதேபோல பாலஸ்தீனப் தீவிரவாதமும் பாலஸ்தீன மக்களின் துயரங்களைப் பெருக்கியதல்லாமல், வேறு எதையும் சாதித்துவிடவில்லை. இஸ்ரேலைத் திருப்பித் தாக்காமல் காந்திய வழியில் அகிம்சைப் போராட்டங்களைப் பாலஸ்தீனர்கள் கைக்கொண்டிருந்தால், அவர்கள் அடைந்துவரும் துயரம் உலக அளவில் மிகப் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கும். பாலஸ்தீனர்களுக்குச் சுதந்திரமும் தனி நாடும் கிடைத்திருக்கும். பாலஸ்தீனர்களில் சிலர் இதை உணர்ந்துள்ளனர். அதற்கான முயற்சிகளில் ஈடுபட முயல்கின்றனர். ஆனால், பாலஸ்தீன விடுதலை ஆதரவாளர்களோ இஸ்ரேலியர்கள் மீது கல்வீசுவதும்கூட அகிம்சைதான் என்று நினைக்கின்றனர்.

**கருத்து3:**


உங்களுடைய குடும்பம் காஸாவிலோ இஸ்ரேலிலோ இருந்தால், எதிரிகளால் தாக்கப்படக்கூடிய வாய்ப்பும் இருந்தால், சும்மா இருந்தபடி பாட்டு பாடிக் கொண்டிருப்பீர்களா?

நம்மில் யாராவது தெற்கு இஸ்ரேலில் வாழ்ந்து, ஹமாஸ் வீசும் ஏவுகணைகள் நம் வீட்டில் விழுந்து வெடித்து மரண பீதியில் ஆழ்ந்தால், காஸாவை ராணுவம் ஊடுருவுவதைக் கைதட்டி வரவேற்போம். நம்மில் யாராவது காஸாவில் குடியிருந்தால், நடமாட்டம் இல்லாமல் இஸ்ரேலிய ராணுவத்தால் கட்டுப்படுத்தப்பட்டால், இஸ்ரேலியர்களின் வான் தாக்குதலில் நம்முடைய உறவினர்களை ஒவ்வொருவராகப் பலிகொடுத்தால், நம்முடைய பகுதியிலிருந்து இஸ்ரேல் குடியிருப்புகள் மீது ஏவுகணைகள் ஏவப்படும்போது உற்சாகக் குரலெழுப்பி வரவேற்போம். அது மனித இயல்பு.

ஆகையால்தான் கூறுகிறோம், இருதரப்பும் தாக்குதலை நிறுத்தி, மோதலைக் கைவிடத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் விலக வேண்டும். ஹமாஸ் இயக்கத்தவர் ஏவுகணைகளை ஏவாமல் இருக்க வேண்டும். ஹமாஸை அரசியல்ரீதியாகச் செல்வாக்கிழக்க வைக்க, இஸ்ரேல் ராஜதந்திர வழிமுறைகளைக் கையாள வேண்டும். சர்வதேசக் கண்காணிப்பில் காஸா பகுதியில் தேர்தல் நடைபெறவும் பாலஸ்தீன ஆணையத்திடம் அதிகாரத்தை முழுதாக ஒப்படைக்கவும் இஸ்ரேல் முன்வர வேண்டும். பொருளாதாரத் தடைகளை விலக்கிக்கொள்ள வேண்டும்.

# காந்தீயவாதியான அமரர் கனகராசா

*மில்க்வைற் தொழிலதிபர் கலாநிதி க.கனகராசாவின் 16 ஆவது நினைவு தினம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தால் இன்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் வரையப்படுகின்றது.*



1927 ஆம் ஆண்டு கந்தையாபிள்ளை-மீனாட்சிப் பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த கனகராசா காந்தீய வழியைப் பின்பற்றி வாழ்ந்த சமூகத் தொண்டராவார். காந்தி மகான் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர் என்பதற்கு க.சி.குலரத்தினத்தை கௌரவ ஆசிரியராகக் கொண்டு அவர் மாதந்தோறும் வெளியிட்டு வந்த மில்க்வைற் செய்தி மாத இதழில் காந்தியின் வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்களை ஒவ்வொரு இதழிலும் பிரசுரித்து வந்தமையும் காந்தியடிகளின் படத்தோடு அவரின் பொன் மொழிகளைப் பிரசுரங்களாக வெளியிட்டு மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் விநியோகித்து வந்தமையும் தனது அலுவலக மேசையில் காந்தி விளக்கமளிக்கின்ற மூன்று குரங்குப் பொம்மைகளை வைத்திருந்தமையும் நல்ல சான்றுகளாகும்.

அன்னார் சாதி, சமய வேறுபாடின்றிப் பல வகைகளில் சமூக சேவைகள் செய்து அரும்பாடுபட்டதோடு இந்த நாட்டின் இயற்கை வளங்களைக் காப்பாற்றப் பல வழிகளில் பங்காற்றியவர். பனை அபிவிருத்தி, மரம் நடுதல், கல்வி விருத்தி, சமய விருத்தி, சிரமதானம் எனப் பல சமூக மேம்பாட்டுத் திட்டங்களை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி நாட்டின் பல பகுதிகளிலும் மேற்கொண்டு வந்தார். பனை வளர்ப்பை ஊக்கப்படுத்தியதோடு பனம் நாற்றுகளைச் சேகரித்து அவற்றை இலவசமாக விநியோகித்து வன்னி மண்ணில் வனாந்தரமாக இருந்த பல இடங்களை பனங்கூடல்களாக மாற்றினார். பனையைச் செழிப்பாக வளர்த்தோரைப் பாராட்டிக் கௌரவித்து மரம் நாட்டலை ஊக்குவிப்பு செய்தார். யாழ். மண்ணை வளமாக்கக் குளங்களை ஆழப் படுத்திச் சீரமைத்தார். வேம்பு, நெல்லி, தென்னை, பனை போன்ற பயன்தரும் மரங்களை அவர் நாட்டியதன் நோக்கம் பட்டினியை ஒழிப்பதேயாகும். நீதி நூல்கள், குறள்கள், பொன் மொழிகள், மருத்துவ ஆலோசனைகள், எழுத்துச் சுவடிகள் எனப் பொதுவானவையும், சைவசமயம் சார்ந்ததுமான பல பிரசுரங்களை வெளியிட்டு மக்களிடத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி யாழ்.முஸ்லிம்களுக்கும் உதவி வந்தார் என்பதற்கு அவர், வண்ணார்பண்ணை மேற்கு முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு தண்ணீர்த் தாங்கி அமைத்தமையும், 21ஆம் வட்டாரத்தில் உள்ள ஜின்னா வீதியில் அமைந்த முஸ்லிம் சன சமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வாங்கிக் கொடுத்தமையும் சான்றுகளாகும்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

# ஒரு லட்சம் ஆதிவாசிகள் எங்கே?

நக்கீரன்



பசிக்குத் தேனை எடுக்கும் மனிதனுக்கும் அதனை விற்றுப் பணம் சேர்க்கத் துடிக்கும் மனிதனுக்கும் இடையே ஆயிரம் வித்தியாசங்கள் உள்ளன. தன்னுடைய பேராசைகளுக்காக நகர்மயமான மனித இனம் இயற்கையைச் சுரண்டி, இயற்கையையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் பழங்குடிகளின் வாழ்க்கையைச் சிதைக்கிறது.

பூமியில் மனித வாழ்க்கை நிலைத்திருப்பது என்பது இயற்கையுடன் இணக்கமாக வாழ்வது என்ற எளிமையான சமன்பாட்டில் அடங்கியுள்ளது. காசுக்கு விற்கத் தேன் எடுக்கக் காட்டுக்குள் வலிந்து ஒரு கூட்டம் நுழையும்போது, இயற்கை அழிக்கப்படுவது மட்டுமில்லாமல், அந்த இயற்கையையே தங்களது வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ள பழங்குடிகளும் அழிக்கப்படுகிறார்கள். இயற்கையுடன் மனித இனம் பராமரித்த சமன்பாடு முற்றிலும் சீர்குலைகிறது. காட்டுக்குள் புகுந்த மனிதனுக்கும் காட்டிலேயே வாழும் மனிதனுக்கும் உரசல்கள் மூழ்கின்றன. நாளடைவில் அது போராட்டமாக வடிவம் பெறுகின்றது.

என்றாலும், இந்தப் பிரச்சினைகளின் ஊடேதான் தீர்வுகளும் பிறக்கின்றன. அதற்கான சிந்தனையையும் மனித ஆற்றலையும் ஒன்று திரட்டித் தலைமையேற்றுப் போராட்டத்தை வழிநடத்த வேண்டுமல்லவா..? அதைத்தான் செய்கிறார் பிரவீண் படேல்!

**யார் இந்தப் பிரவீண் படேல்?**

கொல்கத்தாவில் பிறந்த இவர், தனது கல்லூரிக் காலத்தில் மாணவர் தலைவராகச் செயற்பட்டவர். அகில பாரதிய ஆதிவாசி விகாஸ் பரிஷத் அமைப்பின் மூலமாகவும் பழங்குடியினர் நலச் சங்கம் மூலமாகவும் கடந்த 17 ஆண்டுகளாகச் சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஒரிசா மாநிலங்களில் பழங்குடியினருக்காகப் போராடி வருகிறார்ஒரிசாவில் நிலவிய சுரங்க ஊழலை அம்பலப்படுத்தியவர். இந்திய நாட்டுச் சுரங்கக் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வந்ததில் முக்கிய பங்காற்றி யவர். தற்போது 'விரைவான நீதிக்கான அமைப்பு' மூலம் தன் பணிகளைத் தொடர் கிறார்.

பழங்குடியினர் சார்ந்த பிரச்சினை என்பது 2000 ஆம் ஆண்டுக்கும் முன்னர் வரை பெரிதாக வெளியே தெரியவில்லை. அதன் பின்னர் தாராளமயமாக்கல், தனியார் மயமாக் கல், பொருளாதாரக் கொள்கைகள் பல துறை களில் பரவலாகின. அதன் வெளிப்படையான விளைவாக நில அபகரிப்பு, நிலப் பயன்பாட்டை மாற்றுதல், பழங்குடியினரின் இடங்கள் ஆக்கிர மிக்கப்படுதல் போன்றவை நிகழ்ந்தன. அத்தனையும் அரசின் ஆதரவோடுதான் நிகழ்ந்தன.

நமது இயற்கை வளங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்ட ஆரம்பித்தன. இதன் விளைவாக பெரிய நிறுவனங்கள் கோடிகளில் புரள, கனிம வளம் எடுக்கப்பட்ட மாநில மக்களோ வறுமையில் வாடினர்.

அதிலும் மத்திய இந்தியாவிலுள்ள சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஒரிசா மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் நமது தேசியச் சுரங்கக் கொள்கையில் உள்ள தவறுகள்தான்.

**தவறான கொள்கை**

நமது அண்டை நாடான சீனா தனது தேவைகளுக்காக 85 சதவீத இரும்புத் தாதுவை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கிறது. அந்த நாடு ஒரு தொன் இரும்புத் தாதுவுக்கு 120 முதல் 210 டொலர்கள் வரை இந்திய அரசுக்குச் செலுத்துகிறது. ஆனால், இந்தப் பேரத்தில் மாநில அரசுகளுக்குக் கிடைக்கும் உரிமத் தொகை நியாயமாக ரூ.8,000 ஆக இருக்க வேண்டும். ஆனால், கிடைப்பதோ வெறும் ரூ.17 ரூபா தான். இந்த உரிமத் தொகையை உயர்த்தப் போராடி வருகிறோம். இது சட்டரீதியான சவால்.

இது தவிர, சட்டத்துக்குப் புறம்பாகப் பல ஊழல்கள் இதில் நடந்திருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி அதை விசாரித்த எம்.பி.ஷா ஆணையம், ரூ.60,000 கோடிக்கு ஊழல் நடந்திருப்பதாகச் சமீபத்தில் அறிக்கை வெளியிட் டுள்ளது.ஒரிசாவில் உள்ள 192 சுரங்கங்களில் 176 சுரங்கங்கள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் அமைந்துள்ளன. அவற்றில் 47 சுரங்கங்கள் மட்டுமே முறைப்படி அனுமதி பெற்றவை.

சுற்றுச்சூழல் சீர்கெட்டிருப்பது மட்டுமில்லாமல் சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஒரிசா மாநிலங்களில் சுரங்கம் அமைந்துள்ள பகுதிகளில் வாழும் பழங்குடிகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். 2005ஆம் ஆண்டு சத்தீஸ்கர் மாநில அரசு தனியார் பன்னாட்டு நிறுவனம் ஒன்றுடன் இரும்புத் தாது எடுக்க ஒப்பந்தம் போட்டது.

**எங்கே பழங்குடிகள்?**

2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, தாண்டேவாடா காட்டுப் பகுதியில் சுமார் 1,300 கிராமங்கள் இருந் தன. அதில் 644 கிராமங்கள் அழிக்கப்பட் டுள்ளன. இங்கிருந்த 2.5 லட்சம் பேரில் சுமார் 50,000 பேர் அரசு ஏற்படுத்தியுள்ள முகாம் களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் 50,000 பேர் ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும்கூட, இன் னும் ஒரு லட்சம் பேர் எங்கே போனார்கள்? அவர்கள் அத்தனை பேரும் நக்சல்களோடு இணைந்துவிட்டார்கள் எனில், அரசு நக்சல் எண்ணிக்கையைக் குறைத்திருக்கிறதா? அல்லது அதிகரித்திருக்கிறதா? தற்போது பழங் குடியினர் தங்களுடைய உரிமைகளைப் பெற வீதிக்கு வந்திருக்கிறார்கள். நீர், காடு, நிலம் எங்களுடையது என்று கோஷம் எழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

**பறிக்கப்படும் உரிமைகள்**

இதற்கு என்ன காரணம்? 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தேசிய நீர்க் கொள்கை யில் முதல் முன்னுரிமையாகக் குடிதண் ணீரும், இரண்டாவதாக நீர்ப்பாசனமும், மூன்றாவதாக வேளாண் சார் தொழில் களுக்கும், நான்காவதாக வேளாண் அல்லாத தொழில்களுக்கும், ஐந்தாவதாகப் போக்குவ ரத்துக்கும் என்று முன்னுரிமைகள் வரிசைப் படுத்தப்பட்டுப் பட்டியலிடப்பட்டன. ஆனால், 2012 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நீர்க் கொள்கையில் இந்த முன்னுரிமைகள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. இதேபோல, காடு சார்ந்த உரிமைகளும், நிலம் சார்ந்த உரிமைகளும் பழங்குடியினரிடமிருந்து பறிக்கப்படுகின்றன.

இன்று வரையிலும் பஞ்சாப், ஹரியானா மாநிலங்களுக்குச் சண்டிகர் மட்டுமே ஒரே தலைநகராக உள்ளது. ஏன், இரண்டு தலைநகரங்கள் இல்லை? காரணம், அங்கிருக்கும் மக்கள் செல்வந்தர்களாகவும் தங்கள் நிலங்களில் ஓர் அங்குலத்தைக்கூட விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாதவர்களாகவும் இருப்பதுதான். அப்படியானால் அவர்களுக்கு ஒரு நீதி, பழங்குடிகளுக்கு ஒரு நீதியா? - கேள்வியுடன் முடிக்கிறார் பிரவீண் படேல்.

# "குழந்தைகளின் பாதுகாப்பே பிரதானமானது"

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்



கருவிலிருந்து தரம் ஐந்து வரை ஒரு குழந்தையானது படுகின்ற கஷ்டங்களோ கொஞ்ச நஞ்சமல்ல. குழந்தை வயிற்றில் வளரும் போது "தாய்" தன்னைக் கவனிப்பதில்லை. இதனால் குழந்தை பிறக்கும் போதும், பிறந்த பிறகும் அனுபவிக்கின்ற வேதனை ஒரு புறம், தாயின் பிரசவ- பிரசவித்த வலி மறுபுறம். உதவிகள் இல்லாதவிடத்து இருவரின் பாதுகாப்பும் கேள்விக் குறியே ! அம்மாவும் அப்பாவும் வேலைக்குப் போக வேணுமே. இந்த நிலையில் மூன்றாவது ஒரு நபர் பெண்ணோ, ஆணோ தேவைப்படுகின்றார். இப்போ மூன்றாவது நபருடன் இரண்டு வயதிலேயே குழந்தைகள் முன்பள்ளி அல்லது காப்பகத்தில் பயணிக்கின்றது. அல்லாமலும் குழந்தைகளின் பாதுகாப்பை அம்மா, அப்பாவுக்கு மேலதிகமாக மூன்றாவது நபர்களிடம் ஒப்படைக்கின்றோம். வீட்டிலும், வீதியிலும், பள்ளிகளிலும் நடக்கும் நல்லனவற்றைப் பட்டென்று சொல்லி விடுகிறது. அல்லாதவற்றை எடுத்துச் சொல்ல பிள்ளைகளால் முடிவதில்லை. வீதிகளில் பிள்ளைகளை யாருமே பக்குவமாகக் கூட்டிச் செல்வதில்லை. இதில் யாருமே அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. பாதுகாப்பே முதன்மையானது. படிப்பு இரண்டாவது பட்சமே. ஓர் உந்துருளியில் பல குழந்தைகளை அடுக்கி, நசித்து, மிருகங்களைப் போல் கொண்டு செல்கிறார்கள். மிருகங்களும், குழந்தைகளும் வாய் விடாச் சாதிகள் என்பதற்காக என்னவும் செய்யலாம் என்று ஒரு சிலர் அல்ல, பலரும் எண்ணி விடுகிறார்கள். இதனால் குழந்தைகளின் உயிருக்கு பாதுகாப்பு உத்தரவாதமாக அமையவில்லை. பிறந்த குழந்தையும் சரி, முன்பள்ளி மற்றும் தரம் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து மாணவர்களும் சரி, இவர்களை எவருமே பாதுகாப்போடு வீதியில் கொண்டு செல்வதாகச் சொல்ல முடியாது. பல குழந்தைகள் அநியாயமாகச் சாவின் விளிம்பிலேயே பயணிக்கின்றனர். அப்பா, அம்மாவுக்கு அவசரம் ! என்ன தான் அவசரம்? உங்களது அவசரத்துக்கும், நாகரிகப் போட்டிகளுக்கும் குழந்தைகளா கிடைத்தார்கள்? கொஞ்சமும் பொறுமையில்லாத அப்பா அம்மாவால் எந்தவிதமான விபத்துக்கள் நடைபெறப் போகிறது என்பதை ஏ-9 பாதை கட்டியம் கூறி நிற்கிறது. முன்பள்ளிகள் சிலவற்றில் தடி விளையாடுகிறது. மாபிள் வீட்டில், குழந்தை இடறி விழுகிறது. உயிர் போக அவ்வளவு நேரம் எடுக்காது. மாபிள் தேவைதானா? வீட்டுக்குள் நடக்கும் போராட்டம் வெளியில் வருவதில்லை. அவசர தொலைபேசி இலக்கங் களை வீடு தொடக்கம் வீதி வகுப்பறை எங்கணுமே பெரிதாகத் தெரியும் வண்ணம், குழந்தைகளும் தெரிவிக்க வல்லதாக சம்பந்தப்பட்ட வர்கள் செய்தேயாக வேண்டும் இல்லாவிடின் ! கவலைப்பட வேண்டிவரும்.




## உங்களுக்கு நல்வாழ்வையும், போஷாக்கினையும் வழங்குவதே எனது தலையாய கடமை.....

அன்னையின் அன்பு தூய்மையானது, தனது பிள்ளையின் நல்வாழ்விற்கு அவர் எப்போதுமே முதலிடம் கொடுக்கின்றார். தனது பிள்ளைக்கு எப்போதும் மிகச் சிறந்தவற்றையே தெரிவுசெய்கின்றார்.

இந்த அதிவிசேடமான அன்பைப் போற்றும் வகையில் உங்களுடைய கண்மணிகளுக்கு அதியுயர் தரத்திலான பாலை வழங்கும் உத்தரவாதத்தில் அங்கர் மட்டற்ற அளவில் கவனம் செலுத்திவருகின்றது.

## ...அதனாலேயே அதிசிறந்த தரத்திலான, போஷாக்கு நிரம்பிய அங்கர் பாலை நான் தெரிவுசெய்கின்றேன்.

### எங்களுடைய உறுதிமொழியின் 6 படிகள்

**1 நியூசிலாந்து பாலின் நலச்செழுமை**

சுத்தமான காற்றுக்கும், தூய்மையான தண்ணீருக்கும் பெயர்போன நியூசிலாந்து நாட்டின் பசுமையான மேய்ச்சல் தரைகளில் சுதந்திரமாக மேயவிடப்படுகின்ற பசுக்களில் இருந்து அங்கர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

**2 பால் கறக்கும் போது மிகச் சிறந்த தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள்**

உலகத்தரம் வாய்ந்த தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளின் கீழ் பால் கறக்கப்படுகின்றது. இயந்திரத்தொகுதிகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் ஆண்டுதோறும் 2,000 இற்கும் மேற்பட்ட கணக்காய்வுகள் எம்மாலும், ஒழுக்காற்று அதிகார சபைகளாலும், வாடிக்கையாளர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

**3 அதிநவீன பால் சேகரிப்பு நடைமுறை**

500 வரையான அதிநவீன தாங்கிகள் பாற்பண்ணைகளிலிருந்து தினசரி பாலை நேரடியாகச் சேகரிக்கின்றன. பால் ஏற்றப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு கொள்கலன் தாங்கியும் சோதனை நடைமுறைகளுக்கு உள்ளாக்கப்படுவதுடன், தொழிற்சாலைக்கு பால் எடுத்துச் செல்லப்படும் வரை அதனை குளிரூட்டிப் பேணுகின்றது.

**4 பாலின் ஒவ்வொரு துளியும் தூய்மையானது, உயர் தரம் கொண்டது**

பால் சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது எமது விற்பனை நிலையங்களை எட்டும் வரை 300 இற்கும் மேற்பட்ட வேறுபட்ட சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு உயர் தரமும், போஷாக்கும் உறுதிசெய்யப்படுகின்றது.

**5 உலகெங்கிலும் கிடைக்கும் அதியுயர் தரம் கொண்ட பால்**

நியூசிலாந்தில் ஆண்டுதோறும் 15 பில்லியன் லீட்டர்களுக்கும் அதிகமான பால் பெறப்பட்டு உலகெங்கிலும் 100 இற்கும் அதிகமான நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுகின்றன.

**6 நலச்செழுமையின் வழித்தடத்தை கண்டறியும் வசதி**

அங்கர் பாலின் ஒவ்வொரு பொதிக்கும் தனித்துவமான இலக்கக் குறியீடு ஒன்று பொறிக்கப்படுகின்றது. இதன் மூலமாக அதன் தரத்தை பேணுவதற்கு அது எங்கே, எப்போது உற்பத்தி செய்யப்பட்டது என்பதைக் கண்டறியமுடியும்.

கேளுங்கள் அங்கர்™ இடம்
(011) 2 468 468

C/14675

ஒவ்வொரு துளிக்கும் உத்தரவாதம் நிரம்பிக்கப்பட்ட போஷாக்கு




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 26ஆவது மாவட்ட இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது. அதில் அதிதியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்ததுடன் அவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கினார். அவருடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆனல்ட், கஜதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த)

# கபடியில் கிண்ணத்தை சுவீகரித்தது ஹென்றிஸ்



ஹென்றிஸ் அணியினர்



ஹாட்லிக் கல்லூரி அணியினர்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது வருட உலக ஹென்றிசியன் சங்கம நிகழ்வின் ஒரு பகுதியாகக் கல்லூரியால் நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. கடந்த சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி அணி 21:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. சிறந்த வீரனாக இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி அணி வீரன் றுக்கம் கிறடோ தெரிவானார். (த-23-86)

## இணுவில் இந்துவை வீழ்த்தி கிண்ணம் வென்றது கலைஒளி

யாழ்ப்பாணம், ஜூலை 22

உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்திய 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட 6பேர் பங்கு கொள்ளும் மென் பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச்சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை உடுவில் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இணுவில்கலைஒளிவிளையாட்டுக்கழகஅணிமோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லோசன் 13 ஓட்டங்களையும் சக்தி 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி சார்பில் சுரேந்திரன் 2 இலக்குகளையும், கோகுலன், தாசன் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

39 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி 3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எந்தவித இலக்குகள் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் சுரேந்திரன் ஐந்து ஆறுகள் அடங்கலாக 32 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 2ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

ஆட்ட நாயகனாக கலைஒளி விளையாட்டுக்கழக அணி வீரன் சுரேந்திரன் தெரிவானார். தொடர் ஆட்டநாயகனாக இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி வீரன் சதீஸ்சன் தெரிவானார். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி பிரிவுக்கு உட்பட 'ஏ', 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை மின்னொளியில் இடம்பெறவுள்ளன.

'பி' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

'ஏ' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## ஜனாதிபதி கிண்ணக் கரப்பந்தில் ஆவரங்கால் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்காக நடைபெற்ற யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.



நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மன்னார் லீக் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் உதைபந்தாட்ட லீக் ஆணியை எதிர்த்து வவுனியா உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## சம்பியனானது கைதடி வளர்மதி

யாழ்ப்பாணம், ஜூலை 22

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.


நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் விஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் விஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 16 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சசி 48 ஓட்டங்களையும், கஜேந்திரன் 15 ஓட்டங்களையும், வினிஸ்ரன் 18 ஓட்டங்களையும், தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி சார்பில் நளன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

118 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி 16 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை



இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் நளன் 38 ஓட்டங்களையும், லேவி 22 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மட்டுவில் விஸ்ரார் விளையாட்டுக்கழகம் அணி சார்பில் பானுகோபன், கவி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வினிங்ரன் ஒரு இலக்கையும் வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக மட்டுவில் விஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரன் சசி தெரிவானார்.

ஆட்டத் தொடர் நயகனான கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி வீரன் நளன் தெரிவானார். (த-23)

# உலகக்கிண்ணம் உடைந்ததா?



ஜேர்மனி உலகக் கிண்ணக் கொண்டாட்டங்களின்போது உலகக் கிண்ணத்தை உடைத்து விட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் ஜேர்மனி, ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி உலகக் கிண்ணம் வென்றது.

இந்தக் கொண்டாட்டங்களின்போது ஜேர்மனி வீரர்கள் அந்த உலகக் கிண்ணத்தை உடைத்து விட்டனர். ஆனால் அந்த வீரர் யார் என்று தெரியவில்லையாம்.

இது பற்றி ஜேர்மனி நிர்வாகம் உலகக் கிண்ண மேற்பரப்பு கீழே கிடந்து கண்டுபிடித்ததாகவும், உலகக் கிண்ணத்தை உடைத்த அந்த வீரரை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

இந்த உலகக் கிண்ணத்தின் மதிப்பு 10 மில்லியன் டொலர் ஆகும். இதைத் தொடர்ந்து பல திறமையான குழுக்களை வைத்து உடைந்த உலகக் கிண்ணத்தை ஒட்டும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு இத்தாலி அணி இதே போல் உலகக்கிண்ணத்தை உடைத்தது குறிப்பிடத்தக்கது. (த)

## கடி வாங்கியவருக்கு திருமணம்





உலக கிண்ண உதைபந்துப் போட்டியின்போது லீக் சுற்றில் உருகுவே வீரர் சுவாரசிடம் கடிபட்டுப் பிரபலமானவர் இத்தாலியின் ஜியார்ஜியோ செலினி.

தன்னை கடித்த சுவாரசை பெருந்தன்மையுடன் மன்னித்த 29 வயதான செலினி தனது வாழ்க்கையில் 2ஆவது இன்னிங்சில் அடியெடுத்து வைத்துள்ளார்.

தனது நீண்ட காலக் காதலி கரோலினா போனிஸ்டாலியை கரம் பிடித்தார். இத்தாலியின் லிவர்னோ நகரில், உறவினர்கள், நண்பர்களின் முன்னிலையில் இவர்களது திருமணம் நடைபெற்றது. (த)

## லண்டனில் காதலியுடன் சுற்றிய விராட் கோஹ்லி



இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் விராட் கோஹ்லியும், இந்தி நடிகை அனுஷ்கா ஷர்மாவும் காதலித்து வருவதாக அவ்வப்போது கிளுகிளுப்பான தகவல்கள் வருவது உண்டு.

ஐ.பி.எல். தொடக்க விழாவில் போலியாக நடத்தப்பட்ட சுயம்வர நிகழ்ச்சியில் கூட உங்களது வருங்கால மனைவியாக யாரை தேர்வு செய்வீர்கள் என்று கேட்டபோது, கோஹ்லி உச்சரித்த பெயர் அனுஷ்கா ஷர்மா தான்.

விராட் கோஹ்லி தற்போது இங்கிலாந்து தொடரில் விளையாடி வருகிறார். அவரைக் காண்பதற்கு அவரது காதலி அனுஷ்கா ஷர்மாவும் இங்கிலாந்துக்குப் பறந்துவிட்டார்.

முதலாவது டெஸ்ட் முடிந்ததும் லண்டனில் இருவரும் சந்தித்து நீண்ட நேரம் செலவிட்டதாகவும், இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டதாகவும் அவர்களது நெருக்கமான வட்டாரத்தினர் விடயத்தை கசியவிட்டுள்ளனர்.

அது மட்டுமின்றி லார்ட்ஸ் டெஸ்டை ஸ்ரேடியத்தில் அமர்ந்து நேரில் கண்டுகளித்த அவர், விராட் கோஹ்லியை உற்சாகப்படுத்தி இருக்கிறார். ஆனால் இதன் தாக்கமோ என்னவோ, இந்தத் தொடரில் கோஹ்லி படுமோசமாக விளையாடி ரசிகர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். (த)

## பிரேஸில் அணியின் பயிற்சியாளர் டுங்கா?



பிரேஸில் அணியின் புதிய பயிற்சியாளராக முன்னாள் அணித் தலைவர் டுங்கா தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகக் கிண்ண போட்டிகளை ஏற்று நடத்திய பிரேஸில் அணி, அரையிறுதியில் 1:7 என, ஜேர்மனியிடம் மோசமாகத் தோல்வி கண்டது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியிலும், நெதர்லாந்திடம் 0:3 என தோற்றது. இதனால், அணியின் பயிற்சியாளர் ஸ்கொலாரி பதவி விலகினார்.

இதையடுத்து, 1994 இல் உலகக்கிண்ணம் வென்று கொடுத்த முன்னாள் அணித் தலைவர் டுங்கா, மீண்டும் பயிற்சியாளர் ஆகலாம் எனத் தெரிகிறது. இவர் கடந்த 2006 முதல் 2010 வரை பயிற்சியாளராக இருந்தபோது, 60 போட்டிகளில் 42 இல் பிரேஸில் வென்றது. இவரது பயிற்சியில் 2007 இல் கோபா அமெரிக்கா, 2009 இல் கொன்பெடரேஷன் கிண்ணம் ஆகியவற்றை பிரேஸில் கைப்பற்றியது. பின், 2010 உலகக்கிண்ணக் காலிறுதியில் நெதர்லாந்திடம் தோற்றதால் அவர் பதவி விலகினார். தற்போது மீண்டும் பயிற்சியாளராவது குறித்து டுங்காவிடம் பேச்சு நடத்தப்படுகிறது. (த)

## ஹோட்டல் அறையில் பேய் இங்கிலாந்து வீரர்கள் அச்சம்



தாங்கள் தங்கியுள்ள ஹோட்டல் அறையில் பேய் நடமாடுவதாக இங்கிலாந்து வீரர்கள் கூறி யுள்ளனர்.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து, இந்திய அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி நடந்து வருவதால் இங்கிலாந்து வீரர்கள் லண்டனில் புகழ் பெற்ற லாங்காம் ஹோட்டலில் தங்கியுள்ளனர்.

அங்கு இரவு நேரங்களில் இந்த வித்தியாசமான விடயங்கள் நடப்பதாக கூறிய வீரர்கள், தங்களது அறையை மாற்றித் தருமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருவது இங்கிலாந்து கிரிக்கெட் சபையைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இது பற்றி இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் கூறுகையில், நான் இங்கு தங்கியிருந்தபோது ஒரு நாள் திடீரென்று குளியலறையில் உள்ள குழாய்கள் அனைத்தும் திறந்து கொண்டு தண்ணீர் கொட்டத் தொடங்கின.

என்ன நடந்தது என்று தெரிந்து கொள்வதற்கு குளியலறை செல்வதற்காக நான் அறையின் விளக்குகளைப் போட்டேன். விளக்கு எரியத் தொடங்கியதும், குழாய்களில் தண்ணீர் வெளியேறுவது நின்று விட்டது.

பின்னர் படுக்கலாம் என்று நினைத்து விளக்கை அணைத்தேன். ஆனால் மீண்டும் குழாய்களில் தண்ணீர் கொட்டத் தொடங்கிவிட்டது. இதனால் நான் நிஜமாகவே பயந்து போய் விட்டேன். உடனே வெளியேறி எனது அறையை மாற்றித்தருமாறு கூறினேன்.

அதே போல் ஒரு நாள் நள்ளிரவு 1.30 மணியிருக்கும், நான் அறையில் இருந்த போது, அறைக்குள் வேறு யாரோ இருப்பது போன்று தோன்றியது. இது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மேலும் பேய் பீதி காரணமாகப் பயந்து போயுள்ள மொயீன் அலியின் மனைவியும் அவருடன் அந்த ஹோட்டலில் தங்க மறுக்கிறார்.

தற்போது நடைபெறும் டெஸ்ட் போட்டியின் போது ஹோட்டலில் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால், கடந்த மாதம் இலங்கைக்கு எதிரான தொடரின்போது இங்கு தங்குவது சரிப்பட்டு வரவில்லை என்று கூறியுள்ளார். (த)

## பார்ஸிலோனா ரசிகரால் சூழப்பட்டார் சுவாரெஸ்



உருகுவேயின் சர்ச்சைக்குரிய உதைபந்தாட்ட நட்சத்திரமான லூயிஸ் சுவாரெஸும் அவரின் மனைவியும் ஸ்பெய்னின் பார்ஸிலோனா நகரில் ரசிகர்களால் சுற்றிவளைக்கப்பட்டதால் சங்கடத்துக்குள்ளாகினர்.

இங்கிலாந்தின் லிவர்பூல் கழகத்துக்காக விளையாடி வந்த சுவாரெஸ் தற்போது பார்ஸிலோனா கழகத்தில் இணைந்துள்ளார். இந்நிலையில் பார்ஸிலோனா நகருக்கு தனது மனைவி சோபியாவுடன் சென்ற லூயிஸ் சுவாரெஸ் சென்றபோது ரசிகர்கள் பலரால் சுற்றிவளைக்கப்பட்டார்.

அங்கிருந்து நழுவிச் செல்வதற்கு சுவாரெஸும் அவரின் மனைவியும் பெரும்பாடுபட்டனர். பார்ஸிலோனா அணி வீரரான ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த லயனல் மெஸ்ஸியின் பெயர் பொறித்த அங்கியொன்றை அணிந்திருந்த ரசிகருக்கு சுவாரெஸ் 'ஓட்டோகிராவ் வழங்கியதையும் அவதானிக்க முடிந்தது.

உலகக் கிண்ணப் போட்டியின்போது இத்தாலிய வீரர் சியெல்லினியை கடித்ததால் சுவாரெஸுக்கு 4 மாத தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# இந்தியா வரலாற்று வெற்றி

இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ளது.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இவ் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி களத் தடுப்பை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 295 ஓட்டங்களையும், இங்கிலாந்து அணி 319 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன. அதிகபட்சமாக இந்திய அணியில் ரஹானே 103 ஓட்டங்களையும் இங்கிலாந்து அணியில் பலன்ஸ் 110 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் இங்கிலாந்தின் அன்டர்சன் 4 இலக்குகளையும்,இந்தியாவின் புவனேஸ்குமார் 6 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. நிதானமாக விளையாடிய முரளிவிஜய் 95 ஓட்டங்களையும்,அதிரடியாக ஆடிய ஜடேஜா 68 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் ஸ்ரோக்ஸ், பிளங்கெற் ஆகியோர் தலா 3இலக்குகளையும் கைப்பற்றினர்.

319 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இங்கிலாந்து அணி இஷாந் சர்மாவின் வேகத்துக்குப் பணிந்து 223 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அவ்வணி சார்பாக ரூட் 66 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டார். இந்திய அணி சார்பாக இஷாந் சர்மா 7 இலக்குகளைச் சாய்த்தார். ஆட்டநாயகனாக இஷாந் சர்மா தெரிவுசெய்யப்பட்டார்.

இவ் ஆட்டத்தை வென்றதன் மூலம் 28 ஆண்டுகளின் பின் லார்ட்ஸ் மைதானத்தில் முதலாவது வெற்றியைப் பெற்றது இந்திய அணி. 5 ஆட்டங்கள் கொண்ட இத்தொடரில் 2 ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இந்தியா 1:0 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கிறது.


இஷாந் சர்மா

# வென்றது பருத்தித்துறை

யாழ்ப்பாணம், ஜூலை 22

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திக்கம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து முல்லைத் தீவு உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

இதில் பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
**திருமதி. யமுனா மதிவாணன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னப்பா தெய்வதவபாலன்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**
(50195) (10)

## (பௌதிகவியல்)

PHYSICS PERSONAL CLASSES or GROUP CLASSES.
Mr. K. Piratheepan (B.Sc)
தொடர்பு: 077 550 5549
(50192) (10)

## விற்பனைக்கு உண்டு

எனது சொந்தப் பாவனையில் உள்ள Spirit 49 CC மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 423 9303
(50193) (10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## செம்மீன் வி.க. ஏற்பாட்டில் மாபெரும் விளையாட்டு விழா

கரணவாய், ஜூலை 22

வடமராட்சி செம்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் இரு தினங்கள் பொலிகண்டி மேற்கில் உள்ள கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

26 ஆம் திகதி காலை நிகழ்வுகளாக பருத்தித்துறை நகர் பெற்றெடுத்த சாண்டோ ஆ.துரைரத்தினத்தின் மாணவனான க.கவீந்திரனின் நெறிப்படுத்தலில் மயிர்கூச்செறியும் வீர தீரசாகச நிகழ்வுகள், வாகனம் இழுத்தல், கடலில் படகு இழுத் தல் என்பவற்றுடன் வெளிக் கழகங்களுக்கு இடையிலான மோட்டார் படகு ஓட்டப் போட்டி, கட்டு மரம் வலித்தல் போட்டி, தம்பதிகளின் சைக்கிளோட்டம், வினோத உடைப் போட்டி என்பனவும், மாலை நிகழ்வுகளாக 30 - 40 வயதுக் குட்பட்ட, 40 - 50 வயதுக்குட்பட்ட, பெண்களுக்கான ஓட்டப் போட்டிகள் 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஓட்டப் போட்டி, இல்ல மெய்வன்மைப் போட்டிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்வுகளாக வெளிக் கழக வீரர் ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டம் இடம் பெறவுள்ளதுடன். மாலை நிகழ்வுகளாக கிறிஸ்கம்பம் ஏறுதல், தலையணைச் சண்டை, சாப்பாட்டுப் போட்டி, கயிறு இழுத்தல் என்பன இடம் பெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வெளிக்கழக வீரர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பொலிகண்டி மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-108)

## நவஜீவன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 22

குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நவஜீவன்ஸ் விளை யாட்டுக்கழக அணி 2:0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)


## மரண அறிவித்தல்

**பொனிப்பாஸ் தர்மசீலன்**



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பு பற்றிமா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொனிப்பாஸ் தர்மசீலன் நேற்று (21.07.2014) அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் பொனிப்பாஸ்-லில்லி அக்னெஸ் தம்பதியரின் அன்பு மகனும், யாழினி (ஆனைக்கோட்டை), சதீஸ்குமார் (ஆஸ்திரேலியா), சுதர்சினி (பண்டத்தரிப்பு), தினேஸ்குமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரனும், எட்வின் யோகாராஸ் (ஆனைக்கோட்டை), நிறஞ்சனா (பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அகநிலா, மரீன் றொசானி, சரண்ராஜ் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (22.07.2014) செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பற்றிமா அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மெரீன் பேக்கவுஸ்,**
**மானிப்பாய் வீதி,**
**ஆனைக்கோட்டை.** (5019472)(10)

தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**நடராசா மதியூகன் (யூகன்)**



பெரியதம்பிரான் வீதி வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மதியூகன் (18.07.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் கோமலவதியின் அன்புக் கணவரும்,டெலினாவின் அன்புத் தந்தையும், ஜெக தீசன் (பிரான்ஸ்), யசோதரன் (பிரான்ஸ்), ரஜீவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2014) செவ்வாய்க்கிழமை La maison Funerairede Villeneuve St. Georges Quigo Carrefour Jeam moulinuruedes Supeurs Pompiers Pde, Paris இல் இடம்பெறும்.

**பெரியதம்பிரான் வீதி,**
**வண்ணார் பண்ணை,**
**யாழ்ப்பாணம். 077 9005589**

தகவல்: குடும்பத்தினர்.
(50187)(10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஆறுமுகம் இராசேந்திரன் (ராசா)**

தோற்றம் 11.06.1951 — மறைவு 02.08.2013

எங்கள் அன்புத் தெய்வம்
எங்களை விட்டு மறைந்து
வருடம் ஒன்றானாலும்
உம் நினைவு
எங்களை விட்டு நீங்காது.

**என்றும் உங்கள் நினைவில்**

(50188)(10)

**வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரம்.** **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



அன்னை கடல் உணவு வாணிப (SKME) (நாவாந்துறை) நிறுவனத்தில் சாரதியாக கடமையாற்றிய

**மார்க்கண்டு தர்மராசா**

அவர்களின் திடீர் மறைவினையொட்டி அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அன்னை கடல் உணவு வாணிபத்தினர் (SKME)**
**உரிமையாளர், ஊழியர்கள்.**
(50189) (10)

## மரண அறிவித்தல்

**திருமதி இராஜேஸ்வரி (இராசு) நித்தியானந்தன்**



வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.79 மாயவனூர், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி (இராசு) நித்தியானந்தன் 20.07.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-காந்தம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம்-சின்னம்மா தம்பதியரின் மருமகளும், நித்தியானந்தன் அவர்களின் மனைவியும், வினோத், பிரதிகா, சுயந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அம்பிகைபாலன் (கொலண்ட்), ராஜிவி, காலஞ்சென்றவர்களான விநாயகபாலன், சிவா மற்றும் ஜீவகாந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகம்மா, சிவராசா, காலஞ்சென்ற சரோஜா மற்றும் சீவரட்ணம், திருமதி திலகவதி குணரத்தினம், காலஞ்சென்ற பரமேஸ்வரி கோபாலு மற்றும் பாலசுப்ரமணியம், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் லலிதாதேவி செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இல.333, இராமநாதபுரத்தில் (மாவடி அம்மன் கோயிலடி) உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.333, இராமநாதபுரம், கிளிநொச்சி. (50184) (r.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியரான திரு. டனிஸ்ரன் **விஜயகுமார்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி மேரி. றோசலீன் மரியநாயகம்**



அவர்களின் மறைவினால் துயர் அடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரி சமூகம்**
**யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.**
(50190) (10)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நெருக்கடியான நிலையில் இருந்தாலும் குடும்பத்தில் மிக நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். நல்ல பணப்புழக்கமும், பொருளாதார ஏற்றமும் இருக்கும். எந்தப் பிரச்சினையையும் சந்தித்து முறியடிக்கும் வல்லமையைப் பெறலாம்.



**இடபம்:** காரியத்தடைகள் நீங்கி அனுகூலம் பிறக்கும். மதிப்பு மரியாதை சுமாராகவே இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும். புதிய வீடு வாங்க வாய்ப்பு உண்டு.



**மிதுனம்:** சிற்சில பிரச்சினைகள் வரத்தான் செய்யும். எனவே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும். அதேபோல் உறவினர் வகையிலும் அதிக நெருக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். சிலர் தொழில் நிமித்தமாகக் குடும்பத்தை விட்டு பிரிய நேரிடலாம்.



**கடகம்:** தூரத்தில் இருக்கும் உறவினரால் நன்மை ஏற்படும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். உடன் பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இடமாற்றத்தை சந்திக்கலாம்.



**சிங்கம்:** சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும். கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். எதிர்பார்த்த புகழ், பாராட்டுக் கிடைக்கும்.



**கன்னி:** பண விடயம் திருப்திகரமாக இருக்கும். ஆனால் எதிர்பார்த்த பதவி கிடைப்பதில் வாக்குவாதம் ஏற்படலாம். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்துப் போக வேண்டியிருக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.



**துலாம்:** எந்த வேலையிலும் உங்கள் தனித்தன்மை வெளிப்படும். தடைகளை முறியடித்து காரிய வெற்றி பெறலாம். வீடு, நிலம் ஆகியவற்றில் இருந்து வந்த தாமத நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்படும்.



**விருச்சிகம்:** நண்பர்களிடத்தில் மனக்கிலேசம் ஏற்படலாம். எதிர்காலத்துக்குத் தேவையான முறையான சேமிப்புகளுக்குண்டான ஏற்பாடுகளைச் செய்வீர்கள். எதிரிகளின் இன்னல்கள் இருக்கும் இடம் தெரியாமல் போகும்.



**தனுசு:** பலவிதமான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வார்கள். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. சிலருக்கு ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படலாம்.



**மகரம்:** எடுத்த காரியம் அனுகூலத்தைக் கொடுக்கும். மதிப்பு மரியாதை சீராக இருக்கும். வீன்விவாதங்களைத் தவிர்க்கவும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். முயற்சிகளின் பேரில் சுபகாரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறும்.



**கும்பம்:** வீட்டுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்கும். புதிய வீடு, மனை ஆகியவற்றை வாங்கும் போது கவனம் தேவை. ஒருமுறைக்கு இருமுறை விசாரித்து வாங்குவது நல்லது.



**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். எதிர்பார்த்திருந்த பணி இடமாற்றம் உங்களை வந்து சேரும். மேலதிகாரிகளின் ஆதரவு இருந்துவரும்.

## நாளை

**ஆடி-07 புதன்கிழமை | 23.07.2014**

திதி: துவாதசி பி.இ.12.21 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.ப.10.45 வரை

சுபநேரம்: 04.32-06.02 வரை
இராகுகாலம்: 12.02-01.32 வரை


# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## அறியாமையை விளக்கும் செயல்களே பாவங்கள்

ஆன்மா என்னும் நிலையில் மனிதன் உண்மையில் சுதந்திரமானவன், மனிதன் என்னும் நிலையில் சூழ்நிலை ஒவ்வொன்றாலும் அவன் கட்டுண்டு மாறுதல்களுக்கு உள்ளாகிறான். அந்த நிலையில் சுதந்திர உணர் வோடு கூடிய ஓர் இயந்திரம் அவன். மனித உடம்பு, அனைத்திலும் சிறந்தது; மனித மனம் அனைத்திலும் மேலானது. ஆத்ம சொரூபத்தை அடைந்த ஒரு மனிதன், தனக்கேற்ற ஓர்உடலைஎடுத்துக்கொள்ள முடியும். அவன் நியதிகளுக்கு அப்பாற்பட்டவன். இது ஒரு கோட்பாடு, இதை நிரூபிப்பது அவசியம். இந்தக் கோட்பாட்டை ஒவ்வொருவரும் தனக்குத் தானே நிரூபித்துக் கொள்ள வேண்டும். நம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்ள முடியும், பிறரைத் திருப்திப்படுத்துவது முடிவதல்ல.
நிரூபித்துக் காட்டக் கூடிய சாஸ்திரம் ராஜயோகம் ஒன்று தான். அனுபவத்தின் மூலம் பெற்ற ஒன்றையே பிறருக்கு நான் போதிக்க முடியும். முதிர்ந்த பகுத்தறிவு பரம ஞானமாக வடிவெடுக்கிறது. ஞானம் என்பது பகுத்தறிவுக்கு முரண்பட்டதல்ல. கர்மம் மனத்தைத் தூய்மைப் படுத்தி, ஞானத்தை அடைய உதவுகிறது. மக்களுக்கும் விலங்குகளுக் கும் நன்மை புரிவதையே, நற் கர்மங்கள் என்று பௌத்தர்கள் கூறுகிறார்கள். சடங்குகளும்ஆராதனைகளும்கர்மங்களேஎன்றும் இவை சித்த சுத்திக்கு உதவும் என்று பிராமணர்கள் கருதுகிறார்கள். "நற்செயலானாலும் தீய செயலானாலும் அது ஞானத்துக்குப் புறம்பானது" என்று சங்கரர் கூறுகிறார்.
அறியாமையை விளைவிக்கும் செயல்கள் பாவங்கள் ஆகின்றன, நேர்முகமாக இல்லாவிடினும், ரஜோ குணத்தையும்தமோகுணத்தையும் அவை வளர்ப்பதால் மறைமுகமான காரணம்ஆகின்றன. சத்வகுணத்தின் மூலமே ஞானத்தைப் பெறமுடியும். நற்கர்மங்கள்ஞானத்தை மறைக்கும் திரையை அகற்றுகின்றன. ஞானத்தின் மூலம் மட்டுமே இறைவனை நாம் காண முடியும்.

# தொலைவிலிருக்கும் காதலர்கள் ஒருவருக்கொருவர் கரங்களைப் பற்ற உதவும் உபகரணம்



ஒருவருக்கொருவர் நீண்ட தொலைவிலுள்ள காதலர்கள் ஒருவர் முகம் பார்த்து ஒருவர் உரையாடுவதற்கு 'ஸ்கைப்' போன்ற இணையத்தள தொடர்பாடல் சேவைகள் உதவுகின்ற போதும் காதலர்கள் ஒருவர் கரத்தை ஒருவர் பற்றி அன்பை வெளிப்படுத்துவது சாத்தியமில்லாது உள்ளது.
இந்த நிலையில் நெதர்லாந்தின் அம்ஸ்டர்டாம் நகரைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'பிரெப்பிள்ஸ்' என்று அழைக்கப்படும் தொலை தூரத்திலுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் தொடுகை உணர்வைப் பெறுவதற்கு வழிவகை செய்யும் தொழில்நுட்ப உபகரணங்களை உருவாக்கியுள்ளனர்.
கம்பியில்லாத் தொழில்நுட்பத்தின் மூலம் செயற்படும் இந்த உபகரணம் ஒருவர் தனது அன்புக்குரியவர் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவரது கரத்தைப் பற்றி அன்பை வெளிப்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது.
தூர இடங்களில் இருக்கும் காதலர்கள் தம்மிடமுள்ள 'மிரெப்பிள்ஸ்' உபகரணத்தைப் பயன்படுத்தி கரத்தைப் பற்றும் உணர்வை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்ள முடியும்.
இந்த உபகரணத்தை ஸ்கைப் மற்றும் கூகுள் ஹேங் அவுட் சேவைகளுடன் இணைத்துப் பயன்படுத்த முடியும். மேற்படி ஒரு சோடி உபகரணங்களின் ஆகக்குறைந்த விலை 89 அமெரிக்க டொலர்களாகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 8 | | | | | 3 |
| | | 4 | 6 | 7 | | 9 | | |
| 6 | | | | 9 | 1 | 4 | | |
| 3 | 7 | 6 | 1 | | | | 4 | |
| | 5 | | | 4 | | | 9 | |
| | 4 | | | | 2 | 3 | 5 | 6 |
| | | 9 | 2 | 1 | | | | 4 |
| | | 5 | | 3 | 7 | 2 | | |
| 2 | | | | | 5 | 7 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 |
| 7 | 9 | 3 | 4 | 1 | 5 | 2 | 6 | 8 |
| 5 | 6 | 8 | 3 | 2 | 9 | 4 | 7 | 1 |
| 2 | 3 | 6 | 9 | 5 | 7 | 8 | 1 | 4 |
| 1 | 8 | 4 | 6 | 3 | 2 | 9 | 5 | 7 |
| 9 | 5 | 7 | 1 | 8 | 4 | 6 | 2 | 3 |
| 3 | 2 | 1 | 5 | 9 | 8 | 7 | 4 | 6 |
| 6 | 7 | 9 | 2 | 4 | 3 | 1 | 8 | 5 |
| 8 | 4 | 5 | 7 | 6 | 1 | 3 | 9 | 2 |



கல்முனை குவாரி வீதியில் உள்ள வீடொன்றில் உள்ள பிள்ளையார் உருவத்தை ஒத்த தோடம்பழம் ஒன்று காய்த்துள்ளது. பிள்ளையார் உருவத்தில், உறுப்புக்கள் அதில் அமையப்பெற்றுள்ளது. அந்தத் தோடம்பழத்தைப் பெருமளவு மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (ற)

# அரசுடன் இணைந்தால் மட்டுமே அபிவிருத்தி கிட்டும் என்றில்லை

## கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

எருவில், ஜுலை 22
அரசுடன் இணைந்திருந்தால் மட்டுமே எமது மக்களுக்கான அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும் என்று கூறுவது, கூறுபவர்களின் மடைமைத்தனத்தையை வெளிக்காட்டுகின்றது.- இவ்வாறு தெரிவித்துள்ளார் கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம்.
நற்கிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்தின் உயர்தர மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வானது வித்தியாலய அதிபர் ச.சபாரெத்தினம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"நாட்டில் உள்ள அனைத்து பாகங்களிலும் அபிவிருத்தி செய்யவேண்டியது அரசின் பொறுப்பும் கடமையுமாகும். அதைப் புரிந்து கொள்ளமுடியாதவர்களேஅரசுடன்இணைந்திருந்தால் மட்டுமே எமது மக்களுக்கான அபிவிருத்தியினை செய்யமுடியும் என்று கூறுகின்றனர். அது அவர்களது இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கே என்பதனை எமது மக்கள் புரிந்து கொள்வார்கள்.
1965ஆம் ஆண்டில் இருந்து இன்று வரைக்கும் நாட்டிலே மாறிமாறி வந்த எந்த அரசுகளுடனும் சோரம் போகாமல் தனித்துவமான . அரசியல் கட்சியாக இருந்து செயற்பட்டு எமது மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகின்றோம். இலங்கைத்தமிழரசிக்கட்சியில் உள்ள தலைமைகள் காலத்துக்குக் காலம் மாறியிருக்கலாம். ஆனால் எந்தவிதத்திலும் எமது கொள்கைகள் மாறவில்லை. ஒரே கொள்கையுடன் தான் இன்றும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதன்காரணமாகத்தான் எமது தமிழ்மக்கள் அன்றிருந்து இன்று வரைக்கும் எங்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்து வருகின்றார்கள்."- என்று தெரிவித்துள்ளார்.
இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன், தமிழ்ப் பிரிவு கோட்டக்கல்வி அதிகாரி ஜெகநாதன், ஓய்வுபெற்ற அதிபர் க.சந்திரலிங்கம், கூட்டுறவுச்சங்கத்தின் ஓய்வு பெற்ற பரிசோதகர் வ.குலசேகரம் மற்றும் வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற)

# கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

மட்டக்களப்பு, ஜுலை 22
மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தினுள் கட்டாக்காலியாகத் திரியும் கால் நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் களுவாஞ்சிகுடி பிரதேசசெயலாளர்எம்.கோபால ரெத்தினம்.
மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் கட்டாக்காலி கால் நடைகளின் நடமாட்டத்தினால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன.
வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன் மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திற்குட்பட்ட மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் கட்டாக்காலி கால்நடைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளார். (ற)



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன வீடமைப்பு அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட இன ஐக்கியத்துக்கான 'இப்தார்' நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. மாகாண அமைச்சர் ஆ.ளு. உதுமாலெப்பை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ற-40)

# மான் இறைச்சியுடன் பெண் கைது

கல்மடு, ஜுலை 22
வாழைச்சேனை, கல்மடுவில் சட்டவிரோதமாக மான் இறைச்சியை விற்பனைக்காக வைத்திருந்ததாகக் கூறப்படும் பெண்ணொருவரை கல்குடா பொலிஸார் கைதுசெய்துள்ளனர். மட்டக்களப்பு, கல்குடா பொலிஸ் பிரிவு கல்மடு பிரதேசத்தைச் சேர்ந்த கணேஷன் சிவரஞ்சனி என்பவரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவரிடமிருந்து ஒரு கிலோ கிராம் மான் இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் விற்பனைக்காக பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ற)

# முன்பள்ளி ஆசிரியருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு



மட்டக்களப்பு, ஜுலை 22
மண்முனை, தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான, முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திதொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு அந்தப் பகுதி பிரதேச செயலாளர் எம் கோபாலரெத்தினத்தின் தலைமையில் நேற்று நடைபெற்றது.
இந்தநிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி மற்றும் ஒருங்கமைப்பாளர் திருமதி அருந்ததி சிவரெத்தினம் (முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோர் கலந்து கொண்டதுடன் வளவாளர்களாக சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி ஆர். டெய்சிராணி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் 30 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ற)

# இனந்தெரியாதோரால் ஓட்டோ தீ வைப்பு

கல்முனை, ஜுலை 22
கல்முனை குடிசாஹிபு வீதியில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ மற்றும் துவிச்சக்கர வண்டிகள் இனம் தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது.
ஓட்டோ ஒன்றும், 4 சைக்கிள்களும் எரிந்து நாசமாகியுள்ளன. அத்துடன் வீட்டின்



முன்பகுதி புகைபிடித்துக் காணப்படுவதுடன் ஜன்னல் கண்ணாடிகளும் வெப்பத்தால் நெருங்கியுள்ளன. வீட்டிலுள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த போதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
தனது கணவன் வெளிநாட்டில் தொழில் புரிந்து வருகிறார். தனது மகன் முச்சக்கரவண்டி செலுத்தி வருபவர் என்று வீட்டின் உரிமையாளரான பெண் தெரிவித்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பாற்குடப் பவனி



மட்டக்களப்பு - முனைக்காடு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்தில் பாற்குடப் பவனி நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது. முனைக்காடு ஸ்ரீ கொட்டாம் புலைப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பக்தர்கள் பசும் பாலை குடங்களில் சிரசில் ஏந்தி வீரபத்திரர் ஆலயத்தை நோக்கிச் சென்று மூல மூர்த்தியாகிய ஸ்ரீ வீரபத்திரருக்கு பால் அபிஷேகம் செய்தனர். (ற)

# அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து வாகரையில் கலந்துரையாடல்

வாகரை, ஜுலை 22
2014ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் கிராம மட்ட அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்று வடக்கு வாகரை பிரதேச செயலர் எஸ்.ஆர்.ராகுலநாயகி தலைமயில் வாகரைப் பிரதேச ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு கட்டமைத்து நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.
அங்கு உரையாற்றிய பிரதேச செயலர் எஸ்.ஆர்.ராகுல நாயகி,
"அரச நிதி ஒதுகீட்டின் மூலமும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் நிதி கிடைக்கபெற்றுள்ளது. அந்த நிதியைக் கொண்டு கிராம மட்ட அமைப்புக்கள் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும்போது அரச கொள்கைகளை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும்?, அரச கட்டமைப்புக்களின் நடைமுறைகள் என்ன?, உள்ளுர் அமைப்புக்களினதும் மற்றும் கிராம மக்களினதும் பொறுப்புக்களும் கடமைகளும் எவை என்பவற்றைத் தெளிவுபடுத்திஇன்றேவேலைக்கான உடன்படிக்கைகளில் கையொப்பம் இடுவதோடு வேலைகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டும்"- என்று கேட்டுக் கொண்டார்.



அங்கு கருத்துத் தெரிவித்த பிரதேச செயலக உதவித் திட்டமிடல்பணிப்பாளர்வே.நவிரதன், குறித்த அமைப்புகளின் கடமைகள் என்ன? அவற்றை எவ்வாறு திட்டமிடுவது, அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி விரிவாக விளக்கியதுடன், பிரதேச செயலகத்தின் கணக்காளர் செல்வி கே.தர்மினி நிதி திட்டமிடல்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது எனத் தெளிவுபடுத்தினார்.
இந்தக் கலந்ரையாடலில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கிராமமட்ட அமைப்புக்களும் ஏனைய துறை சார்ந்த உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ற-10)

# தொடர்ச்சிகள்

## ஆள்கொணர்வு

ளார் என்றும், அவரே இந்த வழக்குகளை விசாரிப்பார் என்றும் தெரிவித்து, எதிர் வரும் ஓகஸ்ட் 25 ஆம் திகதி வரையில் வழக்கை ஒத்திவைத்தார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழமைக்கு மாறாக, நேற்று கடுமையான உடற்சோதனைகளின் பின்னரே தாம் அனுமதிக்கப்பட்டோம் என்று வழக்கு தொடுநரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார். இந்த வழக்கின் மனுதாரர்களையும், சாட்சியமளிக்க வந்தவர்களையுமே இவ்வாறு கடுமையான சோதனையின் பின்னர் உள்ளே அனுமதித்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் வழக்கு முடிந்து வெளியே வரும் போது, தமது வாகனத்தைச் சுற்றி புலனாய்வாளர்கள் நின்றிருந்தனர் என்றும், அவர்கள் யாழ்ப்பாணம் வரை தனது வாகனத்தின் பின்னால் பின் தொடர்ந்து வந்தனர் என்றும் அனந்தி குறிப்பிட்டார்.

புலனாய்வாளர்களின் இந்தச் செயற்பாட்டினால் அச்சமடைந்த தான் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, அங்கிருந்து யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு பேசினார் என்றும் அவரின் உத்தரவுக்கு அமைய புதுக்குடியிருப்பு பொலிஸார் விசுவமடு வரை தனக்கு பாதுகாப்பு வழங்கி வந்தனர் என்றும் அனந்தி சசிதரன் தெரிவித்தார். (ஜ-5)

## கிராமத்து

யாழ்.மாவட்டத்தில் 435 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ள போதும் 247 மில்லியன் ரூபாவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரதும் பங்களிப்புடனே, கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தில் அரசு சார்பு அரசியல் கட்சியினர், தம்மால் வழங்கப்படும் திட்டங்களையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஜ-5)

## வாக்காளர்

லிருந்து நீக்கப்பட்டோர் மற்றும் இந்த ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் புதிதாக இணைக்கப்பட்டோரின் பெயர் விவரங்கள் காட்சிப்படுத்தப்படும். விவரம் குறித்து பொது மக்கள் தமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்க முடியும்.

ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி இறுதி வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-5)

## செம்மணி

டையது என்று தெரிவித்து ஒருவர் காணி உறுதியை எம்மிடம் சமர்ப்பித்துள்ளார் என்றும் அந்த உறுதியின் உண்மைத் தன்மை குறித்து அறிவதற்காக அது யாழ்.மாவட்ட காணிப்பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

இதற்கமைய மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தினர் உறுதியை ஆராய்ந்ததில், குறித்த காணி வயல் காணி என்று நல்லூர் பிரதேச சபைக்கு தெரியப்படுத்தி உள்ளனர்.

வயல் காணியை, அது தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதாயின், மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-5)

## இரண்டாம்

றுக் கொண்டார். இந்த நிகழ்வில் ஆளுநரின் பாரியாரும் கலந்து கொண்டார்.

சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.

இந்த நிகழ்வின் போது முன்பள்ளிச் சிறுவர்களுக்கு, பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஜ-5)

## பீடை

அருகில் போடுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அதில் கோரப்பட்டுள்ளது. (ஜ-14)

## காணியை

உரிமையாளர்கள். நேற்று காணிகளை அளப்பதற்காக வந்திருந்த நில அளவையாளர்களிடமே இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று குறித்த 54 பரப்புக் காணிகளை அளவீடு செய்வதற்கு நில அளவையாளர்கள் வந்திருந்தனர். ஆயினும் அந்தப் பகுதியில் திரண்ட மக்களின் எதிர்ப்பால் அந்த நடவடிக்கை தடுக்கப்பட்டது. அப்போதே மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

காணிகளை அளப்பதற்காக வந்திருந்த காணி அளவையாளர், பிரதேச செயலரே தமக்கு காணிகளை அளவிடுமாறு உத்தரவிட்டார் என்று தெரிவித்தார்.

அதற்கு அங்கு குழுமியிருந்த மக்கள், "எங்களது காணிகளை எங்களது அனுமதியின்றி அளந்தால் இதிலேயே பெற்றோல் ஊத்தி தீக்குளிப்போம். எங்களின்ர மூண்டு நாலு பிள்ளகுட்டியள வளத்தது இந்த காணிக்க தோட்டம் செய்துதான். இப்ப வந்து காணி அளக்கினமாம். எங்கள மீறி அளந்தா இப்பவே பெற்றோல் ஊத்தி கொழுத்தி போட்டு எங்கட காணிக்க சாவம்" - என்று ஆவேசமாகத் தெரிவித்தனர்.

மக்களின் இந்தத் தீவிர எதிர்ப்பை அடுத்து காணிகளை அளக்க முடியாமல் நில அளவையாளரகள் திரும்பி சென்றனர். (ற)

## நியதி

புக்காக, கடந்த பெப்ரவரி மாதம் சபை அமர்வில் சமர்பிக்கப்பட்டன.

அவற்றுக்கு வடக்கு மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து கடந்த ஜூன் 6 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. நியதிச் சட்டம் தொடர்பில் விவாதிப்பதற்காக மாகாண சபை மூன்று தடவைக் கூடிய போதும், ஆளுநரிடம் இருந்து அங்கீகாரம் கிடைக்காததால் விவாதிக்காது கலைந்தது.

ஆளுநர் குறித்த நியதிச் சட்டம் தொடர்பில் நிதி ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைக் கோரியிருந்தார். சட்டமா திணைக்களம் தனது ஆலோசனைகள் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடந்த வாரம் அனுப்பியது.

அதில், நிதி நியதிச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில சரத்துக்கள், மத்திய அரசுக்குரியவை. எனவே அந்தச் சரத்துக்களை நீக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை உள்ளடக்கியதாக, வடக்கு மாகாண ஆளுநர் தனது பரிந்துரைகளை இந்த வார இறுதிக்குள் பேரவைச் செயலகத்துக்கும், முதலமைச்சருக்கும் அனுப்பி வைப்பார் என்று கூறப்படுகின்றது. (ற-5)

## மீண்டும்

பால் முறியடிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி பகுதியில் ஒன்பது குடும்பங்களுக்கு சொந்தமான காணியும், அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான காணி மற்றும் கட்டடம் என்பன நீண்டகாலமாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்தக் காணிகளை இராணுவத்தின் தேவைக்காக நிரந்தரமாக சுவீகரிக்கும் வகையில் ஏற்கனவே அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளதுடன், அந்தக் காணிகளைகளை கடந்த ஜூன் மாதம் இரண்டாம் திகதி நிலஅளவை மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் அந்தச் சமயம் அங்கு திரண்ட பொது மக்களின் எதிர்ப்பால் அன்றைய தினம் அளவீட்டுப் பணி கைவிடப்பட்டது.

இதன் பின்னர் குறித்த காணிகளின் உரிமையாளர்கள், இது தொடர்பில் நீதிமன்றதிலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடுகளைப் பதிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று பொலிஸ் பாதுகாப்புடன் மீண்டும் நில அளவைப் பணிகளை மேற்கொள்வதற்காக, நிலஅளவைத் திணைக்களத்தினர் சென்றிருந்தனர். அப்போது அங்கு திரண்ட பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தம்மைக் கைது செய்த பின்னரே, தமது காணிகளுக்குள் இறங்கி அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர். அதனால் பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டு பதற்றமான நிலைமை தோன்றியது.

ஒரு கட்டத்தில் பொலிஸார், உங்கள் பணிகளைச் செய்யவிடாமல் தடுக்கின்றனர் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு நில அளவைத் திணைக்களத்தினருக்குப் பணித்தனர். ஆனாலும் நில அளவைத் திணைக்களத்தினர் பொதுமக்களின் எதிர்பையடுத்து திரும்பிச் சென்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் அந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமக்களுடன் இணைந்திருந்தனர்.

இதன் பின்னர் நில அளவைத் திணைக்களத்தினர், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில், வெற்றிலைக் கேணியில் காணியை நிலஅளவீடு செய்யச் சென்றனர். மண்டலாய், புல்லாவெளி, தட்டாம்கோடு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பொதுமக்களின் 800 ஏக்கர் காணியை இராணுவத் தேவைக்காக சுவீகரிக்க, நில அளவைத் திணைக்களத்தினர் அளவீடு செய்ய முற்பட்டனர்.

அங்கும் மக்கள் திரண்டு எதிர்ப்புத் தெரிவித்தனர். மக்களின் கடுமையான எதிர்ப்பையடுத்து, அங்கும் காணி அளவீட்டு பணிகளை நில அளவைத் திணைக்களத்தினர் கைவிட்டுச் சென்றனர். (ற-5,21,11)

## காணி

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலியில் பொதுமக்களின் காணிகளை அரசுடைமையாக்கும் வகையில் நிலஅளவைத் திணைக்களத்தினரால் அளவீடு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன் போதே அங்கு ஒன்றுகூடிய பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நில அளவையிடுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் பொதுமக்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் பின்னரே காணி அளவிட வந்தவர்களால் பொலிஸிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## ரி.ஐ.டி.

கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதே போன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் காணாமற்போனோர் தொடர்பிலான அமர்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயத்திலும் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் இதே போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இது தொடர்பில் ஆணைக்குழு எதிர்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போகின்றது என்று ஆணைக்குழுவின் தலைவரிடம் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

"ஆணைக்குழு விசாரணை நடவடிக்கைகளில் பொலிஸ் அதிகாரிகள் தொடர்புபடுத்தப்படவில்லை. நாங்கள் அமர்வுகளை நடத்திய தினங்களில் அரசின் வேறு தரப்பினர் வழமையான மரணச் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியிருந்தனர். அதனால் மக்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் எங்களின் ஆணைக்குழு நியமிக்கப்பட முன்னைய காலத்திலிருந்தே சாதாரண சட்டங்களின்படி இயங்கிவந்தவர்கள். எங்களின் ஆணைக் குழுவுக்கு முன்னர் மக்கள் அவர்களிடம் தான் முறைப்பாடுகளை செய்திருந்தனர்.

அவர்களும் காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் எழுதி, இனிமேல் நாங்கள் விசாரணை நடத்தும் நாள்களில் அவர்களின் விசாரணைகளை நிறுத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றோம். ஏற்கனவே எமது ஆணைக்குழு நடத்தி வந்துள்ள விசாரணைகளின்படி, காணாமற்போனவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இருந்தால், அவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி, அந்த முறைப்பாடுகள் தொடர்பில் சாட்சியங்கள் இருந்தால், சட்டமா அதிபர் திணைக்களத்ினூடாக வழக்குத் தொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## அரச

பான்மை இனத்தவர் ஒருவருக்கு வழங்கி உள்ளார் என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொண்டமான்நகர் கிராம அமைப்புக்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து நடத்திய இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சிப் பிரதேச சபை உறுப் பினர்களும் கலந்து கொண்ட னர்.

கிளிநொச்சி தொண்டமான் நகர் வைரவர் ஆலயத்துக்கு சொந்தமான 3 ஏக்கர் காணியை கடந்த வருடம் தென்னிலங்கையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று அபகரிக்க முயற்சித்தது என்று கூறி அதற்கு எதிராக அந்தப் பகுதி பொது அமைப்புகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தின. இதனால் அந்த நிறுவனம் அங்கிருந்து சென்றுவிட்டது. இந்த நிலையில் தற்போது கரைச்சிப் பிரதேச செயலரின் உதவியுடன் தென்னிலங்கையைச் சேர்ந்த தனியார் ஒருவர் குறித்த காணிக்கு மதில் சுவர் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார். இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பொதுமக்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் அந்தப் பகுதியில் ஒன்று கூடிய மக்கள் கரைச்சிப் பிரதேச செயலருக்கும் நிர்வாகத்தினருக்கும் எதிராக கோஷங்களை எழுப்பியதுடன் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தி உதவுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, குறித்த காணியை மீட்டு ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மனு ஒன்றையும் போராட்டக்காரர்கள் வடக்கு மாகாண சபை முதலமைச்சருக்கு அனுப்பி வைத்தனர். அதன் பிரதிகள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கரைச்சிப் பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. (ஜ-18-426)

## சம்பவ

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்திருந்தனர்.

இவர்கள் அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இதன் போது, குறித்த இரு சிறுமிகளும் வன்கொடுமைக்கு உள்ளாக்கியவர்கள் அந்த அணி வகுப்பில் இல்லை என்று தெரிவித்திருந்தனர். அதையடுத்து அவர்கள் 7 பேரும் தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனாலும் பிணைப் பத்திரம் அன்றைய தினம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்றைய தினம் வழக்கு சிறுவர் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது, குறித்த 7 பேருக்கும் உரிய பிணைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதனையடுத்து அவர்கள் 7 பேரையும் நீதிவான் விடுவித்தார். மேலும், இந்தச் சம்பவம் வெளிவருவதற்கு முன்னதாக, விடுமுறையில் சென்ற குறித்த முகாமைச் சேர்ந்த 2 கடற்படைச் சிப்பாய்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்துமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு நீதிபதி பணித்தார்.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் நீதிமன்ற அனுமதியுடன், குறித்த இரு சிறுமிகளையும், காரைநகருக்கு அழைத்துச் சென்றனர். சம்பவம் இடம்பெற்ற இடத்தை குறித்த சிறுமிகள் அடையாளம் காட்டியுள்ளனர். கடற்படை முகாமிலிருந்து சிறிது தூரத்திலுள்ள இடத்தில் வைத்தே வன்கொடுமை மேற்கொள்ளப்பட்டது என்று சிறுமிகள் அந்த இடத்தை அடையாளம் காட்டியுள்ளனர். அது தொடர்பான அறிக்கை வழக்கின் அடுத்த தவணையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. வழக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ற-5,4)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

31ஆம் நாள் நினைவஞ்சலி

சோதிலிங்கம் சீதாம்சன் (சீதா)



தோற்றம்
30.04.1984

மறைவு
22.06.2014

திதி: ஏகாதசி

பண்பின் சிகரமே அன்புச் செல்வனே சீதா
காலனவன் கொண்டு சென்றதேனோ
எங்கள் உயிர் எங்களை விட்டுப் பிரியும்வரை
எங்கள் மனம் ஆறாது
உன் ஆத்மா சாந்தி அடைய வேண்டும்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

344, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(50197)(10)
குடும்பத்தினர்.

# புதிய அதிபர் நியமனத்தை கண்டித்து எதிர்ப்பு பேரணி

## மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையில்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர்...

மன்னார், ஜூலை 22

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கு புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்து அந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் நேற்று திங்கட்கிழமை எதிர்ப்புப் பேரணி ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையின் வரலாற்றின் அடிப்படையில் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த குருவானவர்கள் மற்றும் டிலாசால் அருட்சகோதரர்கள் ஆகியோரால் பாடசாலை வழிநடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மத்திய அமைச்சின் கீழ் புதிதாக அதிபர் சேவை தரத்தைப் பெற்றுக்கொண்ட ஒருவர் இந்தப் பாடசாலைக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டார்.

குறித்த அதிபர் தனது அதிபர் நியமனத்தை ஏற்றுக்கொள்ள நேற்று திங்கட்கிழமை பாடசாலைக்கு வருகை தர இருந்தார்.


புதிய அதிபரின் வருகையைக் கண்டித்தும், அவரின் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நேற்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக ஒன்று கூடிய பல நூற்றுக்கணக்கான பெற்றோர் பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக மன்னார் வலயக் கல்விப் பணிமனையை நோக்கிச் சென்றனர். அங்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை, மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் மற்றும் பெற்றோர், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியானுடன் உரையாடினர்.

நீண்ட நேர பேச்சுவார்த்தையின் பின்னர் உடனடியாக குறித்த புதிய அதிபரின் நியமனத்தை இரத்துச் செய்வதாக உறுதியளித்த மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் தற்போது உள்ள அதிபரின் நிர்வாகம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் எனவும் அதில் எந்தவித மாற்றமும் இருக்காது எனவும் உறுதியளித்தார்.

அதனைத்தொடர்ந்து மன்னார் வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பு கூடியிருந்த பெற்றோர் கலைந்து சென்றனர். (க-56)

# இரு வனப் பிரதேசங்களில் 250 ஏக்கர் எரிந்து நாசம்



கோப்புப் படம்

கொழும்பு,ஜூலை 22

தீப்பற்றிக் கொள்வதன் காரணமாக கடந்த இரண்டு தினங்களில் மின்னேரியா- ரொற்றவெவ மற்றும் மெதிரிகிரிய வடிகவெவ பாதுகாப்பு வனப் பிரதேசங்களில் 250 ஏக்கர்கள் வரையில் எரிந்து நாசமடைந்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவிக்கிறது.

மெதிரிகிரிய-வடிகவெவ, மீகஸ்வெவ, பத்தொக்வெவ பிரதேசங்களில் கடந்த 18ஆம் திகதி பரவிச் சென்றிருந்த காட்டுத் தீயினால் 200 ஏக்கர்கள் வரையிலான வனப் பிரதேசங்கள் அழிந்து போயுள்ளதாகவும் அடுத்த தினமான 19ஆம் திகதியன்று மின்னேரியா-ரொற்றவெவ வனப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த தீயினால் 50 ஏக்கர்கள் வரையில் அழிந்து போயுள்ளதாகவும் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசம் முழுவதிலுமாக நிலவி வரும் கடும் வறட்சி நிலை மற்றும் கடும் காற்றுடனான காலநிலையால் இவ்விதம் பற்றிக் கொள்ளும் தீ வெகுவாகப் பரவிச் செல்வதாகவும் இராணுவம், பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவுகள் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இணைந்து இந்தத் தீயை அணைக்கும் முயற்சியில் இறங்கியிருந்ததாகவும் பொலனறுவை வன ஜீவராசிகள் உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-22)

# மருத்துவ, தாதிய சேவையை இலங்கை வழங்க வேண்டும்

## மாலைதீவு கோரிக்கை



கொழும்பு, ஜூலை 22

மாலைதீவுக்கு இலங்கை வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களின் சேவையைப் பெ றுத் தருவேன் என்றும் அந்த நாட்டு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன விடம், மாலைதீவு சுகாதார அமைச்சர் வைத்தியர் மரியா சகீலா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மாலைதீவில் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கு பெரிய வெற்றிடம் நிலவுவதன் காரணமாக இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மரியா சகீலா தெரிவித்துள்ளார்.

தான் இந்த கோரிக்கையை வேறு எந்த நாட்டிலும் விடுக்கவில்லை என்றும் இலங்கை வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் உயர்ந்த சேவையை கருத்திற் கொண்டு இலங்கையிடம் கோரியுள்ளதாக மாலைதீவு சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (வ)

# இலங்கை தமிழர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு சாத்தியமில்லை

## இல.கணேசன் தெரிவிப்பு



இல. கணேசன்

சென்னை, ஜூலை 22

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்பது உடனடியாக சாத்தியமில்லை என்று பாரதீய ஜனதா தேசிய செயற்குழு உறுப்பினர் இல. கணேசன் தெரிவித்துள்ளார்.

கரூரில் செய்தியாளர்களைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

மீனவர்கள் பிரச்சினை குறித்து அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தொடர்ந்து இலங்கை அரசுடன் பேசிவருகிறார். மீனவர்கள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்படும் என்று நம்புகிறோம். அதேநேரம், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்பது உடனடியாக சாத்தியமில்லை- என்றார். (வ)

# லண்டனிலிருந்து இந்தியாவுக்கு இடம்பெயரும் பிபிசி தமிழோசை

பிபிசி தமிழோசை லண்டனில் இருந்து இந்தியாவுக்கு இடம்பெயரவுள்ளது. பிபிசி ஹிந்தி சேவையுடன், தமிழ் சேவையும், இந்தியாவுக்கு இடம்பெயரவுள்ளதாக, ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு வரையான செலவினங்களைக் குறைக்கும் திட்டத்தின்படியே, இந்த இடமாற்றம் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக, கருத்து வெளியிட்ட பிபிசி உலக சேவை பேச்சாளர் ஒருவர்,

பிபிசி தமிழ் சேவை நேயர்கள் இந்தியாவில் அதிகரித்து வருகின்றனர். ஹிந்தி சேவை வெற்றிகரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்ச் சேவையையும், இந்தியாவுக்கு இடமாற்றம் செய்வதன் மூலம் நேயர்களுக்கு அதிக வசதிகளை வழங்க முடியும்.

இந்தியாவில் உள்ள தமிழ் நேயர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு தமிழோசை முக்கிய கவனம் செலுத்தவுள்ளது.

அதேவேளை, இலங்கையிலும், புலம்பெயர்ந்தும் வாழும் தமிழ் நேயர்களுக்காகவும், தமிழ்ச்சேவை தொடர்ந்தும் நிச்சயம் பணியாற்றும்.

இந்த நடவடிக்கையின்படி, லண்டனில் உள்ள தமிழ்ச் சேவை பணியகம் மூடப்பட்டு, புதுடெல்லியில் அதனைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. என்று தெரிவித்துள்ளார். (வ)

# போலி ஆவணங்களை பயன்படுத்தி முறைகேடு

கொழும்பு, ஜூலை 22

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சுமார் 10 ஆயிரம் பேர் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஓய்வூதியக் கொடுப்பனவு திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

திணைக்களத்தின் நிறைவேற்று பணிப்பாளர் எஸ். எச். ஹெட்டியாராச்சி இதனை தெரிவித்தார்.

இந்த நிலையில் இது தொடர்பில் விசாரணை மேற் கொள்ள இரகசிய பொலிஸாரின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்க பொதுக் கூட்ட நிகழ்வு தனிச் சிங்களத்தில்

## வடக்கு, கிழக்கிலிருந்து சென்றோர் ஒன்றுமே புரியாமல் தடுமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை 22

இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்ட நிகழ்வுகள் தனிச் சிங்களத்தில் இடம் பெற்றதால் அதில் கலந்து கொள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து சென்றோர் ஒன்றும் புரியாத நிலையில் கூட்டம் முடியும் வரை இருந்து விட்டு வெளியேறி ஊர் வந்து சேர்ந்தனர்.

> தமிழ் மொழி பெயர்ப்பு இல்லாததால் கலந்துகொண்ட தமிழர்கள் என்ன விடயம் பேசப்படுகின்றது என்பது புரியாமல் கூட்டம் முடியும் வரை அங்கலாய்ப்புடன் காத்திருந்தனர்.

இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் 20 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது.

கூட்டத்தில் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் 200 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தென்னந்தோட்ட உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

தென்னை அபிவிருத்தி அமைச்சர் ஜெகத்புஷ்பகுமார முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கூட்டத்தின் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே இடம்பெற்றன. எனவே தமிழ் மொழி பெயர்ப்பு இல்லாததால் கலந்துகொண்ட தமிழர்கள் என்ன விடயம் பேசப்படுகின்றது என்பது புரியாமல் கூட்டம் முடியும்வரை அங்கலாய்ப்புடன் காத்திருந்ததாகவும் தெரிவித்தனர்.


சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் சு. மோகனதாஸ், செயலாளர் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி. துரைராஜா உட்பட 7 பேர் கூட்டத்துக்கு சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



மலேசியா குவலாலம்புர திருமுருகன் திருவாக்கு பீடத்தின் தவத்திரு சுவாமி பாலயோகி தலைமையிலான ஆறு பேர் கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர். இவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று மாலை யாழ்ப்பாணம் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா. ஈ.சரவணபவன், கலாநிதி ஆறுதிருமுருகன்,யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், இந்து நாகரிகத்துறை மாணவர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் இந்து அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஐ-4.21)



இலங்கை மற்றும் சீன இராணுவத்தினருக்கு இடையே ஒத்துழைப்புகளை அதிகரிக்கும் வகையில், இலங்கை விமானப் படை தளபதி எயார் மார்ஷல் கோலித குணதிலக்க, சீனாவின் இராணுவத் தலைவரான ஜெனரல் மொஷியோ ஷெய்னுடன் பேச்சு நடத்தியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. விமானப்படைத் தளபதி சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின்போதே இந்தப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. (ற)

## மன்னர்களின் சிலைகள் அமைப்பு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தை ஆண்ட மூன்று மன்னர்களின் சிலைகளை மணிக்கூட்டு கோபுரத்தின் மூன்று மூலைகளிலும் வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மணிக்கூட்டு கோபுரத்தினை சுற்றி உள்ள வளைவுகள் தற்போது யாழ். மாநகர சபையினால் இடிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வளைவுகள் இடிக்கப்படுவதற்கான காரணம் குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ற-106)

## ஐ.நா. குழுவின் விசாரணைக்கு இந்தியா கதவடைப்பு?

கொழும்பு, ஜூலை 22

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பாக விசார ணைகளை முன்னெடுத்துவரும் ஐ.நா. குழுவுக்குத் தமது நாட்டுக்குள் வைத்து விசாரணைகளை முன்னெ டுப்பதற்கு அனுமதியளிக்கப் போவதில்லையென இந்தியா முடிவெடுத்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத் தொடரின்போது இந்திய வெளிவிவகாரக் கொள்கைப் பிரிவு எடுத்த முடிவு. 'உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேச தலையீடு களை ஆதரிப்பதில்லை' என்ற டில்லியின் நிலைப்பாடு, காஷ்மீர் விவகாரம் உட்பட முக்கிய பல விடயங்களைக் கருத்தில்கொண்டே எடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் தலைமையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அப்போதைய இந்திய அரசு ஆதரிக்காது மதில் மேல் பூனைபோல் நடுநிலைப் போக்கைக்கடைப்பிடித்தது. அத்துடன், விசாரணைகளைப் பிற்போடவேண்டும் என்று பாகிஸ்தான் முன்வைத்த சட்டப் பிரச்சினைக்கும் இந்தியா ஆதரவாக வாக்களித்தது.

அதன் பின்னர் இந்தியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கை ஆதரவுப் போக்கைக் கடைப்பிடித்த காங்கிரஸ் அரசு தோல்வியடைந்து, பா.ஜ.க. அரசு தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் பலத்தைப் பெற்றது. இதையடுத்து இலங்கை விடயத்தில் மோடி அரசு 'கடும்போக்கை' கடைப்பிடிக்கும் என பல தரப்பினரும் சுட்டிக்காட்டினர். அதற்கேற்ப வெளிவிவகாரக் கொள்கையிலும் மாற்றங்கள் நிகழலாம் எனக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

எனினும், காங்கிரஸ் அரசு கடைப்பிடித்த வெளிவிவகாரக் கொள்கையிலேயே பா.ஜ.க. இருந்து வருகின்றது. மாநில ஆளுநர் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ள பிரதமர் மோடி வெளிவிவகாரப் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தாமை இதற்கு சிறந்த சான்றாகுமென அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்ற னர்.

கடந்த 15 ஆம் திகதி முதல் இலங்கை மீதான விசாரணையை ஆரம்பித்துள்ள

**அமெரிக்காவின் தலைமையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அப்போதைய இந்திய அரசு ஆதரிக்காது மதில் மேல் பூனைபோல் நடுநிலைப் போக்கைக் கடைப்பிடித்தது.**

ஐ.நா.விசாரணைக் குழுவினர் ஒஸ்லோவுக்குப் புறம்பாக ஜெனீவா, நியூயோர்க், பாங்கொக் ஆகிய இடங்களிலும் விசாரணைகளை நடத்தி சாட்சியங்களைத் திரட்டுவதற்கு முன்னெடுத்துள்ளனர். இலங்கையின் அண்டைநாடான இந்தியாவுக்கும் வந்து விசாரணைகளை நடத்தும் நோக்கில் ஐ.நா.குழு டில்லியிடம் அனுமதி கோரியிருந்த நிலையிலேயே அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது. (ற-சி)

## எரிகாயம் அடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 22

குப்பைக்குள் பெற்றோல் போத்தல் இருந்தது தெரியா மல் தீ மூட்டிய பெண் போத்தல் தீப் பிடித்து வெடித்ததில் எரிகாயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த பெண் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூரில் கடந்த 10 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நித்தியானந்தம் ராஜேஸ்வரி (வயது -53) என்பவரே உயிரிழந்தார்.

குப்பைக்குள் போத்தல் இருந்ததைத் கவனிக்காத அவர் குப்பைக்கு தீ மூட்டியுள்ளார். அப்போது போத்தல் வெடித்து அவரிலும் தீ பிடித்துள்ளது. எரிகாயங்களுக்கு உள்ளான அவர் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் கடந்த 10 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார். (ற-4)

## உறுப்பினர்கள் குறைப்பு; உரிமைமீறல் மனு தாக்கல்

கொழும்பு, ஜூலை 22

ஊவா மாகாண சபைக்காக பதுளை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தேர்தல்கள் ஆணையாளர் குறைத்தமை தொடர்பில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்ப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ மற்றும் மு ன்னாள் மாகாண சபை உறுப்பினர் எச்.டபிள் யூ.டி.மிஹிமால் முனசிங்ஹ ஆகியோர் இ மனுவை தாக்கல் செய்துள்ளனர். இந்த ம வில் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணைய ளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

32 உறுப்பினர்களை கொண்ட ஊவா மாகாண சபைக்கு, பதுளை மாவட்டத்திலிருந்து இது வரை காலமும் 21 உறுப்பினர்களும் மொனராகலை மாவட்டத்திலிருந்து 11 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், பதுளை மாவட்டத்திலிருந்து இம்முறை 18 உறுப்பினர்களே தெரிவு செய்யப்படவுள்ளனர். பதுளை மாவட்டத்தில் குறைக்கப்பட்டுள்ள மூன்று உறுப்பினர்களும் மொனராகலைமாவட்டத்திற்குசேர்த்துகொள்ளப்பட்டுள்ளனர். இதன்படி மொனராகலை மாவட்டத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 11 இருந்து 14 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## கண்ணீர் அஞ்சலி



### நடராசா மதியூகன்

எங்கள் நட்பின் ஒளி விளக்கே!
நீ எங்கே சென்றாய் உன்னோடு
பேச வேண்டும் மீண்டும் வருவாயா?
உன்னோடு கைவீசி குதூகலித்த நாள்கள்
எல்லாம் கனவாகி போய் விட்டதே!
மலர்களில் இருந்து வரும் நறுமணமாய்
மோதுகின்றன
உன்னோடு வாழ்ந்த முன்னைய
ஞாபகங்கள்!
உன் பிரிவின் துயரம் சுமக்க முடியாமல்
உன் உறவுகள் வாழ்க்கை கண்ணீர் ஆனதே!
இனி யார் பிறப்பார்? உன்னைப்போல ஒருவன்
எப்படி தாங்குவது உன் பிரிவை?
சகோதர பாசமாய் கூடி வாழ்ந்த கூட்டை விட்டு எங்கே
ஓடி ஒளிந்து கொண்டாய் - உறவுகள்
உன்னை காண்பது எப்போது என்று தெரியவில்லை
உன் நினைவுகளால் ஆறாத் துயரில் உன் வரவை எதிர்பார்த்து!

உங்கள் பிரிவால் துயருறும்
**ஸ்ரீ முருகன் சவுண்ட்,** (Sri Lanka, Jaffna)
**தமிழ் பிளாஷ் எப்.எம்.**

(சி/15491)
(10)


"ஸ்ரார் ஹோட்டல்" வாழ்க பல்லாண்டு

Best Wishes.

சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ள "ஸ்ரார் ஹோட்டலின்" சிறப்பை வாழ்த்துகின்றோம்.

வடிகட்டிச் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்,
சிறந்த சுகாதார நடைமுறைகள்,
சிறப்பான உள்ளமைப்பு,
பணியாளர்களின் சிறந்த சேவை,
சமையல் அறையின் சிறப்பு,
கழிவு நீர் அகற்றும் சிறந்தமுறை,
வாடிக்கையாளரை வரவேற்கும் சிறப்பு,
சுவையான உணவுகள், கண்காணிப்பு கமரா
என்பவை எம்மைக் கவர்ந்துள்ளன.



இவ்வாறான சிறந்த உணவகம் சாவகச்சேரி நகரில் அமைந்திருப்பதை பாராட்டி வாழ்த்துகின்றோம். எதிர்காலத்திலும் மிகவும் சிறப்பாக இயங்க வேண்டுமெனவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

வாடிக்கையாளர்கள்,
கிளிநொச்சி.

(41328)(10)



SPOKEN ENGLISH

அறிமுகப்படுத்துகிறோம்

50000 இற்கும் அதிகமான சொற்களுடன் சுயமாக ஆங்கிலம்பேச பயிற்றுவிக்கும் "சாம்சனின்" புதிய நேரடி SPOKEN ENGLISH பயிற்சிநெறி.

அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை ,உயர்கல்வி மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

நவீன பயிற்சிநெறி ஆரம்பம் 26.07.2014 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

பயிற்சியில் சுயமாகவசனம் உருவாக்கல்,பிரயோகங்கள்,50000சொற்கள் என்பன நேரடி உரையாடற் பயிற்சியின் மூலம் சாம்சனினால் கற்பிக்கப்படும்

SAAMSON LANGUAGE SCHOOL 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567 021 320 3313


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.